

ප්‍රගති වාර්තාව
முன்னேற்ற அறிக்கை
PROGRESS REPORT
2018

සංචාරක සංවර්ධන, වනජීවී හා ක්‍රිස්තියානි ආගමික කටයුතු අමාත්‍යාංශය

சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

Ministry of Tourism Development, Wildlife and Christian Religious Affairs

முன்னேற்ற அறிக்கை 2018

சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

உள்ளடக்கம்

நோக்கு மற்றும் குறிக்கோள்	vi
அமைச்சின் கடமைகளும் பணிகளும்	vii
அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்	vii
கௌரவ சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரின் செய்தி	viii-ix
கௌரவ சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் செய்தி	x
சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு செயலாளர் அவர்களின் பார்வை	xi
சுற்றுலாஅபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சின், இராஜாங்க செயலாளரின் செயதி	xii
அமைச்சு	xiii-xiv
சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள்	1-22
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை	23-40
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்	41-50
இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம்	51-64
இலங்கை மாநாட்டுப் பணியகம்	65-78
வனசீவராசிகள் பிரிவு	79-84
தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்	85-96
தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்	97-106
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்	107-120
வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு	121-124
கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்.	125-132

அட்டவணை		புக்கம் இல
1.1	சுற்றுலாத்துறையின் செயற்றிறன் 2013 – 2018	2
1.2	பிரசித்தி மிக்க முதல் 10 சந்தை மூலங்கள் (நாடுகள்)	3
1.3	அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2018	4
1.4	சுற்றலாக் கவர்ச்சிக் கருத்திட்டங்கள்	5
1.5	நிதி சார்ந்த செயலாற்றுகை	12
1.6	மூன்று மாத கால விருந்தோம்பல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கத் தகவல்-(2018.12.31)	13
1.7	சுற்றுலாச் சேவை வழங்குனர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (3 நாட்கள்) - 2018	14
1.8	கருத்திட்டங்கள் பற்றிய சுருக்கத் தகவல்கள்	16
1.9	2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு நிதி பிரிவின் செயலாற்றுகை	21
2.1	சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட பணம் பற்றிய தகவல	26
2.2	சுற்றுலா அபிவிருத்தி நிதியம்	26
2.3	2018.01.01 முதல் 2018.12.31 ஆம் திகதி வரையான சுற்றுலாப் பயணிகள் அறவீடு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அறவீடு தொடர்பிலான பணச்செலவு	26
2.4	சாதனைகள்	28
2.5	2010 செப்டம்பர் முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முதலீட்டாளர் உறவுகள் அலகினால் செயலாக்கம் செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய ஒட்டுமொத்த முன்னேற்றம	29
2.6	அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் அமுல்படுத்துகை நிலைப்பாடு	29
2.7	இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் - மாவட்ட ரீதியான வகைப்பாடு	30
2.8	விண்ணப்பங்கள் மீளக் கருதப்பட்டவை மற்றும் இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டவை	31
2.9	தங்குமிட வசதி வழங்கும் துறை	35
2.10	விசேட சுற்றுலாச் சேவைகள்	36
2.11	வழிகாட்டல் சேவைகள்	37
3.1	நிதி சார்நத செயலாற்றுகை பற்றிய மேலோட்டப் பார்வை	48
3.2	2018 டிசம்பர் இறுதியிலுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவு, செலவினம்	49
4.1	2018 இல் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் பற்றிய சுருக்கமான தகவல்	53
4.2	பாடநெறி அடிப்படையில் வெளியீடு பற்றிய வளர்ச்சி 2015 – 2018	54
4.3	நிதிச் செயலாற்றுகை பற்றிய மேலோட்டப் பார்வை	58
4.4	2018 இல் இடம்பெற்ற மேலதிக செயற்பாடுகள்	63

5.1	அடையப்பட்ட இலக்குகள்	66
5.2	நிகழ்வு ஆதரவுகள்	74-77
5.3	நிதி சார்ந்த செயலாற்றுகை	77
6.1	நிதிமேம்பாட்டுப் பொழிப்பு - 2018	82
7.1	நிதி மேம்பாட்டுப் பொழிப்பு - 2018	87
7.2	அபிவிருத்திச் செயற்திட்டங்களின் நிதிசார் மேம்பாடு	88
7.3	வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்கள் (பொழிப்பு) - 2018	89
7.4	2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட சேவைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்	95
7.5	நிதிசார் மேம்பாடு (பொழிப்பு) - 2018	96
7.6	சுற்றாடல் பிரயாணிகளின் வருகை மற்றும் வருமானம்—2018	96
8.1	அபிவிருத்திசெயற்திட்டங்களின் நிதிமேம்பாடு - 2018	99
8.2	நிதி மேம்பாட்டு பொழிப்பு- 2018	100
8.3	சுற்றாடல் பிரயாணிகளின் வருகை மற்றும் வருமானம்—2018	105
8.4	விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கம்	106
8.5	விலங்குகள் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் -2018	106
9.1	நிதிசார் மேம்பாட்டுப் பொழிப்பு - 2018	109
9.2	அபிவிருத்தி செயற்பாடுகளின் நிதிசார் மேம்பாடு—2018	110
9.3	சுற்றுலாப் பயணிகளின் வருமானமும் வருகையும் 2018	120
10.1	2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் செலவீனங்கள	123
11.1	தேவாலயங்களுக்கான நிருமாணப் பணிகள், புணரமைப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்	127
11.2	பிரசித்திபெற்ற யாத்திரைத்தலங்களது வருடாந்த திருவிழாக்களுக்காக உதவிகளை வழங்குதல்.	127
11.3	அபிவிருத்தி மற்றும் புணர்நிருமாணப் பணிகளுக்கு நிதியுதவிகள் தேவைப்படுகின்ற கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்.	128
11.4	அபிவிருத்தி மற்றும் புணர்நிருமாணப் பணிகளுக்கு நிதியுதவிகள் தேவைப்படுகின்ற கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்	129
11.5	மறையாசிரியர்களுக்கு ரூ.5000/- கொடுப்பனவை வழங்குதல்	130
11.6	ஆன்மீக ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள	131
11.7	மறைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்	132
11.8	யாத்திரைகள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கத்தோலிக்கத் திருச்சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய திருத்தலங்களுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.	134

11.9	அபிவிருத்தி உதவிகள்	135
11.10	வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருத்தலங்களுக்கான அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல்	136
	வரைபு	
1.1	அந்நியச் செலாவணி ஈட்டுகையாளர் என்ற வகையில் சுற்றுலா வருமான வளர்ச்சி	3
2.1	சர்வதேச சுற்றுலா பற்றிய மேலோட்டப் பார்வை	24
2.2	2014 முதல் 2018 வரையான சுற்றுலா வருகை	24
2.3	2017 முதல் 2018 வரையான அந்நியச் செலாவணி ஈட்டுகை (ஐ.அ.டொ. மில்)	25
2.4	2018 இல் முக்கிய பத்து சந்தைகள்	25
2.5	பெறப்பட்ட கருத்திட்டங்கள் இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட கருத்திட்டங்கள் பற்றி ஒரே பார்வையில் 2010 செப்டம்பர் - 2018 டிசம்பர்	30
4.1	கொழும்பு மற்றும் பிராந்தியக் கல்லூரிகளின் அமைவிடங்கள்	51

அமைச்சின் கண்ணோட்டம்

சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய விவகாரங்கள் அமைச்சானது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி 2103/33 ஆம் இலக்க அதிகாரபூர்வமான வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய விவகாரங்கள் ஆகியன தொடர்பில் செயலாற்றுதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல், சுற்றுலாத்துறையின் தேசிய கொள்கைக்கு ஏற்ப சுற்றுலாத் துறையின் நிலையான அபிவிருத்தியினை உறுதிப்படுத்துதல், சுற்றுலாத்துறை சம்பந்தமான தரநிலைகள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் சுற்றுலா முகவர்களை பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ˙அத்துடன் உயர் மதிப்பீட்டிற்கான இலக்காக இலங்கையை ஊக்குவித்தல், இலங்கையின் தாவரங்களின் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்களைப் பராமரித்தல் மற்றும் மலர்ச ˙செய்கை தொழிலை மேம்பாடு செய்தல், பல்வேறு விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வனவற்றின் சேகரிப்பு மற்றும் கண்காட்சி, வனவிலங்குவளங்களின் நிலையான பாதுகாப்பு மற்றும் நல்லதொரு கிறிஸ்தவ சமுதாயத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட மக்களிடையே மத மற்றும் கலாச்சார மதிப்புகளை ஊக்கவித்தல் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை என்பனவற்றை மேற்கொள்ளல்

நோக்கு

மறக்கமுடியாத, உண்மையான, பல்லினத்துவம் வாய்ந்த சுற்றுலா அனுபவங்களுக்கான உலகத்தில் மிகச்சிறந்த தீவாக மதிக்கப்படுதல்

குறிக்கோள்

சமூக ரீதியில் பிரத்தியேகமானதும் சுற்றாடல் ரீதியில் பொறுப்பு வாய்ந்ததுமான இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பிரதிபலிக்கும் அதே வேளையில் நிலைபேறாகதாவரங்கள்மற்றும்விலங்குகளை பாதுகாகத்தலுடன் அதிவிசேடமான சுற்றுலா அனுபவங்களையும் அதேநேரம் நாட்டிற்கும் மக்களுக்கும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கின்ற மிக உயர் பெறுமானமுடைய ஒரு சுற்றுலா தலமாக இலங்கையை விளங்கச்செய்தல.

நோக்கு (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ மக்களின் நலனுக்காக பணியாற்றுதல்

குறிக்கோள் (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ சமயம் மற்றும் கலாசாரம் என்பவற்றின் விழுமியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் விருத்திச்செய்தல்.

அமைச்சின் தொழிற்பாடுகள்
(2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2018 மார்கழி 28 ஆம் திகதி பிரகாரம் உருவாக்கப்பட்டது.)

1. சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதல்

2. சுற்றுலாத்துறை கைத்தொழில் பற்றிய தேசிய கொள்கைகளுக்கமைவாக சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தியும் நியமங்களை வகுத்தமைத்தல்

3. சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவும் ஒழுங்குறுத்துகை

4. ஓய்வுநேரங்களைக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

5. இலங்கையின் மரச்செடிகளைப் பேணுதலும் தாவரப் பூங்காக்களைப் பராமரித்தலும் மலர்ச்செய்கைத் தொழிலை மேம்படுத்தல்

6. மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்கு களை ஒன்றுசேர்த்தலும் காட்சிப் படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப் பட்ட அலுவல்கள்

7. வனசீவராசிகள் வளங்களைப் பேணுதல்

8. வனசீவராசிகளின் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாக் கைத் தொழிலை ஊக்குவிக்கும்போது சுற்றாடல் முறைமை பாதுகாக்கப் படுவதை உறுதிப்படுத்தத் தேவை யான நடவடிக்கை எடுத்தல்

9. அழிந்துபோகும் அச்சுறுத்தலை எதிர் நோக்கும் விலங்கு வகுதிகளின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சமவாயம் மற்றும் அதற்குரிய அலுவல்கள்

10. ஒழுக்கப் பண்பாட்டு ரீதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்களிடையே சமய ரீதியிலான விழுமியங்களை விருத்தி செய்வதன் பொருட்டு கொள்கைகளையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத் தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தல்

11. கிறிஸ்தவ மத அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் தொடராய்வு செய்தல்

12. நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

13. நிறுவனங்களைக் கண்காணித்தல்

அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்

1. இலங்கைசுற்றுலா அபிவிருத்திஅதிகார சபை
2. இலங்கைசுற்றுலாமற்றும் விடுதிமுகாமைத்துவநிறுவனம்
3. இலங்கைசுற்றுலாஊக்குவிப்புபணியகம்
4. இலங்கைமாநாட்டுப் பணியகம்
5. தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்
6. தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்
7. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
8. வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு
9. கிறிஸ்தவசமயஅலுவல்கள் திணைக்களம்

கௌரவ சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரின் செய்தி

நான் 2018 ஆம் ஆண்டில் எனது அமைச்சு பற்றிய செயலாற்றுகை மீளாய்வுக்காக இந்த செய்தியைத் தெரிவிப்பதனையிட்டு பெருமிதமடைகின்றேன்.

இவ் ஆண்டின் இறுதிப் பகுதியில், 2019 இல் சுற்றுலா இலக்கிற்குரிய முதல் தர நாடாக இலங்கை விளங்குவதாக உலகின் மிகவும் பிரபலம் வாய்ந்த சுற்றுலாப் பயண பிரசுரம் தெரிவித்துள்ளது. இலங்கையானது இத்தகைய சர்வதேச தரத்தில் பாராட்டினைப் பெற்றுக் கொண்டது இதுவே முதல் தடவையாகுமென்பதோடு, இது கடந்த மூன்று வருட காலத்தில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கடும் உழைப்பினைப் பிரதிபலிக்கின்றது என்றால் மிகையாகாது.

2018 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு, சுமார் 2,333,796 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதோடு, இது வரலாற்றுச் சாதனையாகவும் விளங்குகிறது. மேலும் இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீத வளர்ச்சியுமாகும். இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் மூலவிடமான ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகள் தொடர்ந்தும் பாரிய பங்காற்றி வருவதோடு, இது 47 சதவீதமாகத் திகழ்கின்ற அதேவேளை, இதற்கு அடுத்ததாக ஐரோப்பிய நாடுகள் 43 சதவீத பங்களிப்பினை வழங்குகின்றன. இவ் ஆண்டுக் காலத்தில் சுற்றுலாத் துறை மூலமான வருமானமானது மிகவும் ஆரம்பத்திலேயே 4 பில்லியன் ஐ.அ.டொலர்களை தாண்டியது.

இதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்துள்ள விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2018 செப்டம்பரிலுள்ளவாறு 2,215 ஆகும். வகைப்படுத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல்களின் எண்ணிக்கை 138 ஆகுமென்பதோடு, இவற்றில் 22 ஹோட்டல்கள் ஐந்து நட்சத்திரத் தரத்திலுள்ளவைகளாகும்.

இவ் ஆண்டின் இறுதி வரையில் மொத்தமாகப் பதிவுசெய்யப்பட்ட அறைகளின் எண்ணிக்கை 38,214 ஆகும். நட்சத்திர வகுப்பு 1 முதல் 5 வரையிலான வகையில் வகைப்படுத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல்களின் எண்ணிக்கை 13,408 ஆகும். கொழும்பு மாவட்டத்திலேயே அதி கூடிய அறைகளின் எண்ணிக்கையாக 7,000 இற்கும் அதிகமாக காணப்படுகின்ற அதேவேளை, குருணாகல், கேகாலை, இரத்தினபுரி மற்றும் யாழப்பாணம் ஆகிய பிரதேசங்களில் 5000 இற்கும் குறைவாகவும் மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 1000 அறைகளுக்குக் குறைவாகவும் காணப்படுகின்றன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உணவகங்களின் எண்ணிக்கை 498 ஆகும். இவற்றில், 399 எண்ணிக்கையுடையவை அல்லது 80 சதவீதமானவை ஏ தரம் உடையவையாகுமென்பதோ, 99 உணவகங்கள் அல்லது 20 சதவீதமானவை பீ தரம் உடையவையாகும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் கையாளப்படுகின்ற முதலீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பில், 2018 டிசம்பர் இறுதியிலுள்ளவாறு, 350 கருத்திட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததோடு, 103 நிர்மாணிக்கப்பட்டும், 193 இயக்கப்பாட்டிலும், மற்றும் 54 சுற்றுலா முதலீட்டுக் கருத்ட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படுவதற்கும் உள்ளன.

இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட கருத்திட்டங்களின் மொத்தமான முதலீட்டுப் பெறுமதியானது USD 2,954.8 மில்லியன் ஆகும். நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் பெறுமதி USD 962.7 மில்லியன் ஆகும். இயக்கப்பாட்டிலுள்ள கருத்திட்டங்களின் முதலீட்டுப் பெறுமதி USD 1,754.5 மிலியன் ஆகுமென்பதோடு, இன்னும் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களின் பெறுமதி USD 237.5 மில்லியன் ஆகும்.

2015 இல், இலங்கை சுற்றாடல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் மொத்த வெளியீடானது 2,632 ஆகும். 2017 இன் இறுதியில், மேற்படி ஹோட்டல் பாடசாலைகளின் ஒட்டுமொத்த வெளியீடானது 3,800 ஐ எட்டியிருந்தது. நாங்கள் 2018 இன் இறுதியளவில் பயிற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கையினை 5,800 இற்கு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

இதேவேளை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது சர்வதேச ரீதியில் இடம்பெற்ற அனைத்துப் பாரிய பயணக் கண்காட்சிகளிலும் முனைப்புடன் பங்களிப்புச் செய்ததோடு, இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மன், பிரான்ஸ்,டுபாய், ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஸ்கன்டினேவியா போன்ற நாடுகள் உள்ளிட்ட அனைத்துப் பிரதான மூலச் சந்தைகளிலும் ஒரு ஒழுங்குமறையான வீதிக் கண்காட்சிகளை நடத்தியது.

சுற்றுலாப் பயணிகளின் வரவு குறைவான காலமாகிய செப்டம்பர் முதல் நவம்பர் வரையான காலம் மற்றும் ஏப்ரல் முதல் ஜுன் வரையான காலங்களில் அவர்களின் வருகையினைக் கவரும் நோக்கில், கொழும்புக்குப் பயணிக்கும் சர்வதேச விமானச் சேவகைள், இலக்குச் சந்தைக் கம்பனிகள் மற்றும் நட்சத்திர தர விடுதிகள் போன்றவற்றின் ஒத்துழைப்போடு “ஜலண்ட் எஸ்கெப்” எனும் தொனிப்பொருளிலான விசேட நாட்டு ஊக்குவிப்புப் பிரச்சாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் மூன்று

வாரங்களில் 1000 இற்கும் அதிகமான முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இது சிறந்த பதிலளிப்பினையும் வழங்கியது.

இதேவேளை, இலங்கை மாநாட்டுப் பணியகமானது அதன் இயக்கப்பாட்டு நடவடிக்கைகளை சீரமைத்துள்ளதோடு, தற்பொழுது மிகச்சிறந்த MICE இலக்கு நாட்டிற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டு வருகிறது. மேலும் குறிப்பிடக்கூடியளவு மக்கள் தங்களது திருமண விழாவிற்கானதொரு இலக்கு நாடாக இலங்கையைத் தெரிவுசெய்து வருவதோடு, இதற்கென இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் வருகை தந்துள்ளனர்.

எனது அமைச்சானது கிறிஸ்தவ மத வழிபாட்டுத்தலங்களை அபிவிருத்தி செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டுக் காலம் முழவதும், தேவாலயங்கள் மற்றும் கிறிஸ்தவ மத நிறுவனங்கள் போன்றவற்றினூடான சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கும் உதவியுள்ளது.

முன்னோக்கிய பயணத்தில், 2019 ஆம் ஆண்டில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயமாக, நாட்டிற்குள் வருகை தருவோரின் எண்ணிக்கையினைக் கூட்டிக்கொள்வதற்கு ஒரு தடையாகக் காணப்படுகின்றதான பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் அளவினை விரிவாக்கம் செய்யவேண்டிய தேவைப்பாடே விளங்குகிறது. தற்பொழுது இந்த விமான நிலையமானது அதன் வடிவமைக்கப்பட்ட கொள்திறனிலும் பார்க்க 165 சதவீத இயக்கப்பாட்டினை வழங்கிவருவதோடு, இது பயணிகளுக்கு அசௌகரியத்தையும் வழங்குகிறது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு நிலையான கட்டடத்தினை நிர்மாணிக்கும் வரை ஒரு தற்காலிக முனைய அலகினையாவது நிர்மாணிப்பதற்கான தேவைப்பாடு பற்றிய தீவிர அவதானம் தேவையாகவுள்ளது. மேலும் பிராந்திய விமான நிலையங்களின் கொள்திறனை மேம்படுத்துவதும், உயர் எண்ணிக்கையான மக்களைக் கவரும் நோக்கில் உள்நாட்டு விமானங்களை ஊக்குவிப்பதும் இன்றியமையாத விடயங்களாகும்.

இவ் அமைச்சானது வன சீவராசிகள் எனும் அதன் அமைச்சுப் பெயரினை அண்மைக்காலத்தில் எடுத்தது முதற்கொண்டு இலங்கையில் என்றும் இடம்பெற்றிராத பாரிய மாநாட்டினை நடத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்வதில் தற்பொழுது அயராது உழைத்து வருகிறது. CITES சமவாயத்திற்கான குழுக்களின் 18 வது மாநாடு கொழும்பில் மே மாதம் இடம்பெறவுள்ளதோடு, மேற்படி மாநாடானது 180 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3500 இற்கும் மேற்பட்ட பிரமுகர்களை ஒன்றுகூடுவதற்கு வழியமைக்கவுள்ளது.

வன சீவராசிகள் எனப்படுவது நிலப் பிரதேசத்திலுள்ள விலங்குகளை மாத்திரம் குறிப்பிடுவதில்லை, மாறாக இது இந்த நாட்டில் எம்மைச் சூழவுள்ள கடல் வாழ் உயிரினங்களையும் உள்ளடக்குகின்றது. செழிப்பு மிக்கதும் உயிர்ப் பல்வகைமை மிக்கதுமான சமுத்திரமானது முன்னொரு பொழுதும் இருந்திராத அச்சுறுத்தல்களையும், அளவுக்கு அதிகமான மீன் பிடித்தல்களையும், மாசுறுதல், வாழ்விடத்தை இழத்தல் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு வருகிறது. மேலும், அத்தகைய தாக்கங்கள் கடல் சார்ந்த சுற்றாடலுக்கும் அப்பால் சென்று ஏற்படுத்தக் கூடிய எதிர்விளைவுகளையும் கொண்டுள்ளன. இதனாலேயே, எங்களது வன சீவராசிகள் பற்றிய பூங்கா மற்றும் ஒதுக்கங்கள் மீதான மைய அவதானத்திற்கு மேலதிகமாக, கடல் வாழ் உயிரிகளையும் பாதுகாத்து அவற்றை வளர்ப்பதற்கான மைய அவதானத்தினையும் செலுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பில், விசேடமாக தெற்கிலுள்ள திமிங்கிலக் காட்சி பார்த்தலில் ஈடுபட்டுள்ள சேவை வழங்குனர்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய குறைந்த பட்ச நியமங்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

யானை - மனிதன் முரண்பாடு, தேசிய பூங்காக்களில் நெருக்கடி போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் பூங்காக்களில் பார்வையாளர்களுக்கான சிறந்த வசதிகளைத் தாபித்தல் போன்றவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதான தேசிய பூங்காக்களுக்கான இணையம் மூலமான நுழைவுச்சீட்டினை முன்பதிவு செய்து கொள்ளும் முறைமையினை அமுல்படுத்துவதானது ஒரு பாரிய சாதனையாக விளங்கியது.

இறுதியாக, எனக்கு ஒரு பக்கபலமாக இருந்து செயற்பட்ட எனது அமைச்சின் அர்ப்பணிப்பு மிக்க பணியாட்டொகுதியினருக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அமைச்சின் செயலாளர், பணியாட்டொகுதியினர், தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், இலக்குப் படை, பணிப்பாளர்கள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் பணியாட்டொகுதியினர், எனது பிரத்தியேக பணியாட்டொகுதியினர் மற்றும் 2019 இல் இலங்கையை ஒரு முதற்தர சுற்றுலா இலக்கு நாடாக முன்னிறுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஜோன.ஏ.ஈ. அமரதுங்க (பா.உ)
சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கௌரவ சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் செய்தி

எனது பதவிக் காலப் பகுதியின் அண்மைக் காலத்தில் நாம் எதனைச் சாதித்துள்ளோம் மற்றும் எதிர்காலத்தில் எதனைச் செய்யவுள்ளோம் என்பது பற்றிய விடயங்களுடன், எனது அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைக்கு இந்த செய்தியை அனுப்பி வைப்பதனையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது முதற்கொண்டு, ஹோட்டல்கள், ஓய்வு இல்லங்கள் மற்றும் விருந்தினர் இல்லங்கள் போன்றன இவற்றின் நியமதரங்களைக் கொண்டு தரமுயர்த்தும் நோக்குடன் மிகவும் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகூடிய அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வது பற்றியும் நோக்கப்பட்டது.

அனேக கிரம அடிப்படையிலான பயணிகளின் பொழுதுபோக்கு அம்சமான இலங்கையிலுள்ள திமிங்கிலம் பார்வையிடும் நிகழ்வானது ஒரு ஊக்கமற்ற நிலையில் காணப்பட்டதோடு, தற்பொழுது இதனை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, இலாபம் தரும் தொழிற்துறைக்கான பாரிய உள்ளாற்றல் மிக்க அபிவிருத்தி ஒன்றைக் காண்பிப்பதற்கும் இது ஆரம்பித்துள்ளது.

ஒரு கடல் உலா கருத்திட்டமானது தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரன் ஆகிய பிரதேசங்களை இணைக்கும் ஒன்றாக விளங்கவுள்ளதோடு, இது இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பயணங்களையும் உருவாக்கவுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது தற்பொழுது உள்ள பதின்மூன்று கப்பல் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிதியிடலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எந்தவொரு நாட்டினதும் சுதேச மக்கள் அந்நாட்டின் சொத்துக்களாக திகழ்கின்றனர். இத்தகைய சொத்துக்கள் வெளிநாட்டவர்களின் அவதானத்தினை தமது நாட்டிற்குள் கவர்ந்துகொள்கின்றன. மேலும், கடந்த சில காலங்களுக்கு முன்னர் இலங்கையின் பழங்குடி மக்கள், வேதா சமூகத்தினர் போன்றோரை வெளிச்சத்திற்கு கொண்டுவரவும் முடிந்தது. இது இத்தகைய சமூகத்தினருக்கும் நாட்டிற்கும் அனுகூலத்தினையே வழங்கியது.

புதிய சர்வதேச ரீதியான சுற்றுலா கவர்ச்சி மிக்க அம்சங்கள் இனங்காணப்பட்டு வருகின்றன என்பதோடு, இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளின் சிறந்த தெரிவுகளாக ஏற்கனவே காணப்படுகின்ற கடற்கரைகளை விரிவாக்கம் செய்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய முன்னேற்றங்களுடன் இணைந்து, பாரம்பரிய சுற்றுலா அம்சங்கள் மற்றும் ஆண்மீக சுற்றுலா அம்சங்கள் போன்றவற்றைத் தரமுயர்த்துவதற்கான வழிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாத காலத்தினுள், வன சீவராசிகள் பற்றிய இராஜாங்க அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்றது முதற்கொண்டு, யானை-மனிதன் தாக்குதல்களை நிறுத்துவதற்கான அனேக கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, தமக்கு அண்மையிலுள்ள ஹோட்டல்கள் பற்றிய விபரங்களை வழங்கும் வகையிலான விளம்பரப் பலகைகளை நிறுவுவதன் மூலம் வன சீவராசிகள் சார்ந்த சுற்றுலா அம்சங்களை மேம்படுத்துவதகான கருத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வன சீவராசிகள் சார்ந்த பூங்காவின் உள்ளும் புறுமுமான சுற்றுலா போக்குவரத்தானது முழுமையாக டிஜிடல் மயமாக்கப்படவுள்ளதோடு, வன சீவராசிகள் சார்ந்த பூங்காக்கள் பற்றிய புதிய சர்வதேச ஊக்குவிப்புப் பிரச்சாரம் ஒன்றினை மிக விரைவில் முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இறுதியாக, இத்தகையதொரு பயணத்திற்கு தமது பிரமாண்டமான, அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கியமைக்காக அமைச்சினதும் அதனோடு இணைந்த அனைத்து நிறுவனங்களினதும் பணியாட்டொகுதியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ரஞ்சித் அலுவிகர (பா.உ)
இராஜாங்க அமைச்சர் சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு.

சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் செயலாளர் அவர்களின் ஒரு மீள் பார்வை

கடந்த நிதி ஆண்டுக் காலத்தின் போது சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் பிரயத்தனங்களையும் வெளியீடுகளின் விளைவுகளையும் வழங்கும் ஒரு அறிக்கையாகத் திகழுகின்ற, 2018 ஆம் நிதி ஆண்டுக்கான எமது இந்த செயலாற்றுகை அறிக்கையினைச் சமர்ப்பிப்பதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சுற்றுலாத் துறையானது எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பெறுமானத்தினைச் சேர்க்கின்றது என்றால் அது மிகையாகாது. இலங்கை நாட்டின் சுற்றுலாத் துறைக்கான நேர்மறையான செயலாற்றுகையினை வழங்கிய மற்றுமொரு ஆண்டாகவும் இவ் ஆண்டு திகழ்கிறது. 2018 ஆம் ஆண்டில் சுமார் 2,333,796 எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை மேற்படி முன்னேற்ற அறிக்கை பதிவு செய்து சுட்டிக்காட்டுவதோடு, இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீத அதிகரிப்பாக விளங்குவதாகவும் சுட்டிக்காட்டுகிறது. ஒட்டுமொத்த சுற்றுலா மூலமான வருமானமானது ரூபா 712,027 மில்லியனை எட்டியுள்ள அதேவேளை, 2018 ஆம் ஆண்டில் சுற்றுலா மற்றும் பயணத்துறை குறித்தான மொத்த தொழில்வாய்ப்பானது 388,484 எனும் எண்ணிக்கையினைப் பதிவுசெய்துள்ளது. இதில் நேரடி தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை 169,003 ஆகவும் மதிப்பிடப்பட்ட நேரடியற்ற தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கையாக 219,484 ஆகவும் காணப்படுகிறது. மீளாய்வுக் காலத்தின் போதான வருமான வளர்ச்சியானது ரூபா 4,380.60 மில்லியன் ஆக அதிகரித்துள்ளதென்பதை இங்கு குறிப்பிடுவதில் நான் பெருமிதமடைகின்றேன். இருப்பினும், சுற்றுலாத் துறையின் நீடுறுதிமிக்க அம்சங்கள் மீது ஆழமானதும் நிலைமாற்றம் உடையதுமான தாக்கம் ஒன்றினைக் கொண்ட சுற்றலாவினை ஊக்குவிப்பதற்கான எழுச்சி மிக்க டிஜிடல் தொழில்நுட்பங்கள் மீது நாம் மைய அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

தாவரம் மற்றும் விலங்குச் சமூகத்தினைக் கொண்ட தற்போதுள்ள சுற்றாடற் தொகுதியினைப் பாதுகாப்பதன் ஊடாக தற்கால மற்றும் எதிர்காலச் சந்ததிகளுக்கான வன சீவராசிகளைப் பாதுகாத்து அவற்றைப் பேணுவது அமைச்சின் பிரதானமானதொரு குறிக்கோளக விளங்குகிறது. இதற்கிணங்க, வன சீவராசிகள் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள், தேசிய விலங்கியல் பூங்காக்கள் மற்றும் இலங்கை வன சீவராசிகள் நம்பிக்கை நிதியம் ஆகியன அமைச்சின் வன சீவராசிகள் பிரிவின் இணைந்த நிறுவனங்களாக தொழிற்பட்டு வருகின்றன. உலகிலேயே மிகச் சிறந்த விலங்கியல் பூங்கா ஒன்றினைப் பேணிப் பாதுகாத்து வருகின்ற ஒரு நிறுவனமாகத் திகழும் நோக்கோடு, புத்தாக்கம் மிக்க விலங்கியல் பூங்காவிற்கான எண்ணக்கருவின் கீழான அனைத்து கவர்ச்சி மிக்க தொழில்நுட்பங்களையும் அனுபவங்களையும் உபயோகித்து தற்போதுள்ள விலங்கியல் பூங்காவை மாற்றியமைப்பதற்கும் விலங்குகளை கூண்டினுள் அடைப்பதற்குப் பதிலாக அவற்றுக்கான விரிவான வாழ்விடங்களை வழங்குவதற்குமான அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிணங்க, பின்னவல புதிய விலங்கியல் பூங்கா மற்றும் ரிதியாகம சபாரிப் பூங்கா ஆகியன தற்பொழுது மேற்படி எண்ணக்கருக்களின் கீழ் இயங்கி வருகின்றன. மக்களின் பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை நோக்கங்களுக்காக அவர்களுக்கான உயர்ந்தபட்ச சேவைகளை வழங்கும் நோக்கிலும் அதேபோல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கிலும், விலங்கியல் பூங்காக்களில் நவீன வசதிகள் பல அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. வன சீவராசிகள் நம்பிக்கை நிதியத்தினால் பல்வேறு சுற்றாடல் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் 2019 மே மாதம் 22 ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 03 ஆம் திகதி வரையான காலப் பகுதியில், சுமார் 183 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்கேற்போடு இடம்பெறவுள்ள, அருகி வரும் தாவர மற்றும் விலங்குகள் பற்றிய சர்வதேச வர்த்தகம் குறித்தான சமவாயத்தினைச் சேர்ந்த குழுக்களின் 18 வது மாநாட்டிற்கான வசதியளிப்பதற்கான அவசியமான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களமானது நாட்டில் வாழுகின்ற கிறிஸ்தவ சமயம் சார்ந்த சமூகத்தினையும் சமய இணக்கப்பாட்டினையும் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு கிறிஸ்தவ சமயயத்தின் பெறுமானங்களை ஊக்குவிக்கும் நோக்கிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்து, அவற்றைக் கண்காணிப்புச் செய்து மற்றும் அவற்றை மதிப்பாய்வு செய்வதற்கான வகிபாகத்தினைக் கொண்டுள்ளது.

சுற்றுலாத் துறை அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களிடமிருந்தும் மற்றும் சுற்றுலாத் துறை அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ரஞ்சித் அலுவிகார அவர்களிடமிருந்தும், அமைச்சின் ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களின் தொழிற்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி மிக்க தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பில் நான் பெறுமதி மிக்க கருத்தினைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். மேலும் நான் அமைச்சின் மேலதிகச் செயலாளர், பணியாட்டொகுதியினர், அனைத்து நிறுவனங்களினதும் தவிசாளர்கள் மற்றும் அவர்களது அனைத்து மட்டங்களிலுமுள்ள சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதியினர், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் அதன் அனைத்து பணியாட்டொகுதியினரின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பிற்கும் அத்துடன் அரச மற்றும் தனியார்த் துறையைச் சேர்ந்த ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் போன் அனைவருக்கும், மேற்படி மீளாய்வுக் காலத்தின் பொழுது தாங்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் உதவிக்கும் எனது அனைத்து நன்றிகளையும் இதில் பதிவுசெய்து கொள்ள விரும்புகிறேன்.

எஸ். ஹெட்டியாராச்சி
செயலாளர்,
சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு.

சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சின், இராஜாங்க செயலாளரின் செய்தி

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் அலுவல்களுடன் நெருக்கமான மற்றும் விளைத்திறனுடைய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தற்போது செயற்படும் உள்நாட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் மேம்பாட்டினை அடிக்கடி மீளாய்வுக்கு உட்படுத்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பிடல் மற்றும் விளைத்திறனை உறுதிப்படுத்தல், தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள சட்டபூர்வமற்ற மற்றும் முறைசாரா சுற்றுலா வர்த்தகங்களை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அவற்றின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கை சுற்றலாத்துறை அபிவிருத்திப் பணியகத்துடன் உள்நாட்டு சுற்றுலாச் செயற்பாடுகளை மேம்படுத்துவதுடன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் பங்களிப்பு வழங்கல் மற்றும் செயற்படுத்தல், சுற்றுலா ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் மேம்பாட்டினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் ஆகியவை சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் பற்றிய இராஜாங்க அமைச்சுக்கு சாற்றப்பட்டுள்ள பணிகளுள் உள்ளடங்கும்.

அதற்கமைய, இராஜாங்க அமைச்சினால் சுற்றுலாத்துலா வர்த்தகம் தொடர்பில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவையாவன, நாடளாவிய ரீதியில் சட்டபூர்வமின்றி செயற்படுத்தப்பட்டுவரும் சுற்றுலா வர்த்தக நிறுவனங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அவற்றை பதிவு செய்வதற்காக அனுப்பிவைத்தல்,சுற்றுலா இல்லங்கள், பங்களாக்கள் மற்றும் வாடிவீடுகளின் தரத்தினை மேம்படுத்தும் நடபடிமுறையாக அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல், சுற்றுலா விருந்தோம்பல் இல்லங்கள் மற்றும் பங்களாக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இந்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக விமான நிலைய வளாகத்திலும் முக்கியமான நகரங்களிலும் சர்வதேச தரத்திலான பெயர் பலகைகளைப் பொறுத்துவதற்குத் தேவையான வசதிகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விமான சேவைகள் அமைச்சுடன் இணைந்து செயற்படல், இலங்கையின் தேசிய மரபுரிமைகள் பாதுகாக்கப்படும்வகையிலும் ஆதிவாசிகளின் கலசாரம் எடுத்துக்காட்டப்படும் வகையிலும் நிர்மாணிக்கப்படும் சுற்றுலா ஊக்குவிப்புச் செயற்றிட்டங்களை கலாசார அமைச்சுடன் இணைந்து ஒழுங்குபடுத்துவதன் ஊடாக ஆதிவாசிகள் வாழ்ந்துவரும் பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அப்பிரதேசத்திற்கு கவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை தற்போது இராஜாங்க அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுள் சிலவாகும். அத்துடன் சுகாதாரத் திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம் மற்றும் தொல்பொருளியில் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் பல கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுற்றுலா வர்த்தகம் தற்போது இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தருவதில் முதலிடம் வகித்துவருகின்றது. ஆகவே எதிர்காலத்தில் இலங்கையை "உலக சுற்றலா மையமாக" அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு செயற்படல் சுற்றுலா வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த எல்லோரினதும் பொறுப்பாகும். அத்துடன் சுற்றுலாத்துறையின் தரங்களையும் இலக்குகளையும் அடைவதற்காக சுற்றலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் சகல அரச நிறுவனங்களினதும் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டும். இலங்கை, ஆசியாவின் சிறந்த சுற்றுலா பயண முடிவிடமாக மாற்றமடைந்து, உலகின் "சிறந்த தீவு" ஆக மாற்றமடையச் செய்வதற்காக வழிவகுத்தல், சுற்றுலாக் கைத்தொழிலைச் சேர்ந்த எம் எல்லோரினதும் பொறுப்பாகும்.

பீ.பீ.கே. அபேசிரிகுணவர்தன
இராஜாங்க செயலாளர்
சுற்றுலா.அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

அமைச்சு

கௌரவ ஜோன் ஏ.ஈ. அமரதுங்க (பா.உ)
சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கௌரவ. ரஞ்சித்அலுவிகர(பா.உ)
இராஜாங்க அமைச்சர்சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு.

திரு.எஸ்.கெட்டியாராச்சி
செயலாளர்சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு.

திருமதி. பீ.பீ.கே. அபேசிரி குணவர்தன
இராஜாங்க செயலாளர்சுற்றுலா அபிவிருத்தி,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு.

சுற்றுலா பிரிவு

திரு. வருண சமரதிவகர
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)

திருமதி.சன்னசூரிய
மேலதிக செயலாளர் (நிர்வாகம், மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

திரு.கெ.எம்.சி.கெ.பண்டார
பிரதான கணக்காளர்

திருமதி. டி.எ. சுனந்த பியசீலி
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திரு.எஸ்.எல்.எம்.ஹசீம்
பணிப்பாளர் (அபிவிருத்தி)

திருமதி. உமா நிரஞ்சனன்
பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு . சி.ஏச்.கமகே
மேலதிக உதவிச் செயலாளர் (நிர்வாகம்)

திருமதி. கே.டி.டி. பீரிஸ்
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

திரு. ஜீ.டி.பி.முனிதாச
உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

வனசீவராசிகள் பிரிவு

திரு.ரி.எச்.ஆனாந்த
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)

திரு.ஏச்.டி. ரத்நாயக்க
மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்)

திரு..எம்.எம்.எஸ்.எஸ்.பீ. யாலேகம
மேலதிகசெயலாளர் (வலுவாதாரஅபிவிருத்தி)

திரு.குமசிறிபெரேரா
பிரதான நிதி அதிகாரி

திருமதி. டப்ளியு. ஏ.எச். விஜேரத்ன
பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு. ஜீ.பிரதீப். சபுதந்திரி
பணிப்பாளர் (வலுவாதாரஅபிவிருத்தி)

திரு .டி.சி.சிரிபத்தன
பணிப்பாளர் (அபிவிருத்தி)

திருமதிஜே.டீ.ஏ.பி. ஜயசிங்க
பிரதானஉள்ளககணக்காய்வாளர்

திருமதி. ஜே.கே.டீ. நிலந்தி
பிரதானகணக்காளர்

திருமதி.பிரசாதிக்கா பஸ்நாயக்க
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

திரு. எம்.ஏ. பிரதீப்இமல்குணவர்தன
சிரேஷ்டஉதவிசெயலாளர் (நிர்வாகம்)

ஆர்.எம்.பி.பிரஸ்சன்னா
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

திருமதி. டி.ஜீ.எம்.யூ.பிரியங்கிகா
உதவிபணிப்பாளர் (திட்டமிடல்)

செல்வி. கல்பானி சந்திமா
உதவிச் செயலாளர் (நிர்வாகம்)

திருமதிடப்ளியு. ஏம்.வீ.எம்.
வனிகசேக்கரஉதவிபணிப்பாளர் (திட்டமிடல்)

செல்வி. ஏ.ஏச்ஆ.எம்.எம்.அபயவர்த்தன
உதவிச் செயலாளர் (நிர்வாகம்)

திருமதி.ஏல்.எஸ்.எஸ்.அபயவிக்கரம
உதவிப் பணிப்பாளர்(திட்டமிடல்)

திருமதி.எம்.டி.எம்.குமுதினி
உதவிச் செயலாளர்(நிர்வாகம்)

திருமதி.ஏல்.எஸ்.எஸ்.அபயவிக்கரம
உதவிப் பணிப்பாளர்(திட்டமிடல்)

1.
சுற்றுலா அபிவிருத்தி பிரிவு

1.சுற்றுலாஅபிவிருத்தி

1.1. 2020 ஆம் ஆண்டு வரையான குறிக்கோள்கள்

- சுற்றுலாத் துறையானது இலங்கையின் நிகர அன்னியச்செலாவணி ஈட்டுகையாளர் வரிசையில் 3 ஆவது இடத்தை வகிப்பதோடு, 2020 இல் சுமார் 7 பில்லியன் ஐ.அ.டொலர்களை ஈட்டும் எதிர்பார்ப்புடன் உள்ளது.

- சுற்றுலா மற்றும் அது சார்ந்த துறைகள் மூலமாக, தொழிற்படையில் 10 சதவீதமாக சுமார் 600,000 இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குதல்.

- ஒரு சுற்றுலாப் பயணியின் செலவினை நாளொன்றுக்கு 210 ஐ.அ.டொலர்களாக அதிகரித்தல்.

1.2. சுற்றுலாத்துறையின் செயற்றிறன் 2013 – 2018

அட்டவணை- 1.1

விடயம்	2013	2014	2015	2016	2017	2018
சுற்றுலாப்பணிகளின்வருகை(நபர்கள்)	1,274,593	1527153	1,798,380	2,050,832	2,116,407	2,333,796
ஓய்வுக்காக	980,162	1,037,644	1,198,240	1,710,027	1,744,149	N/A
வியாபாரம்	94,320	29,381	23,323	37,121	70,683	N/A
வேறு	200,111	460,128	576,817	303,684	301,575	N/A
சுற்றுலாவிருந்தில் (“000)	10,961	15,119	18,163	20,918	23,068	25,205
அறைபயன்பாடு (மு)	71.7	74.3	74.5	74.76	73.27	N/A
விருந்துபசாரசுற்றுலாபெறுகை(ரூ.மில்)	221,720	317,502	405,492	512,594	598,356	712,027
மொத்த தொழில்கள்	270,150	299,890	319,436	335,659	359,215	388,487
நேரடித்தொழில்கள்	112,550	129,790	135,930	146,115	156,369	169,003
வழங்கல்	157,600	170,100	183,506	189,544	202,846	219,484
** - மதிப்பிடப்பட்ட பெறுமதி						

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

1.3. பிரசித்தி மிக்க முதல் 10 சந்தை மூலங்கள் (நாடுகள்)அட்டவணை- 1.2

நாடுகள்	2017	2018	%
இந்தியா	384,628	424,887	10%
ஐக்கிய இராச்சியம்	201,879	254,176	26%
சீனா	268,952	265,965	-1%
ஜேர்மனி	130,227	156,888	20%
அவுஸ்திரேலியா	81,281	110,928	36%
ரஷ்யா	59,191	64,497	9%
பிரான்ஸ்	97,282	106,449	9%
அமெரிக்கா	57,479	75,308	31%
சுவீடன்	24,275	28,267	16%
சவுதி அரேபியா	35,481	34,703	-2%
சுற்றுலா பயணிகளின் வருகை	**2,116,407**	**2,333,796**	**10.3%**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

1.4.அந்நியச் செலாவணி ஈட்டுகையாளர் என்ற வகையில் சுற்றுலா வருமான வளர்ச்சி (ஐ.அ.டொலர் மில்லியன்)வரைபு- 1.1



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

1.5 அபிவிருத்தி செயற்திட்டம்

ஒரு சுற்றுலா இலக்கு நாடு என்ற வகையில் இலங்கையின் பாரிய வலிமையானது, அதன் இயற்கை வளச் சொத்துக்களின் அதிவிசேட பல்வகைமை, புராதன மற்றும் நவீன காலத்துக் கலாசாரம், செழிப்பு மிக்க வரலாறு மற்றும் நட்பு நேயம் கொண்ட மக்கள் போன்ற அம்சங்களுக்கு மத்தியில் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

இலங்கையானது ஒருங்கிணைந்த சுற்றுலா இலக்குகளைப் பேணிப் பாதுகாத்து, அவற்றை அபிவிருத்தி செய்து மற்றும் அவற்றை அமுல்படுத்துவதன் ஊடாக ஒரு நீடித்து நிலைக்கத்தகு சுற்றுலா இலக்குகளை வினைத்திறக் மிக்க முறையில் கட்டி எழுப்பக் கூடியதொரு சுற்றுலா திட்டமிடல் வேலைச்சட்டகம் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றைத் தாபிப்பதனை முன்னோக்கியசெயலாக்கத்தினை மேற்கொண்டு வருகிறது.விசேடமாக சுற்றுலா பற்றிய திட்டமிடல் ஒரு இன்றியமையாத அம்சமாகும்.எனவே, வளங்கள் பாரியளவு அனுகூலங்களைத் தருமிடத்து அவை அனைத்து மட்டங்களிலுமுள்ள அரசாங்க முகவர்களுக்குமாக (தேசிய, பிராந்திய, உள்நாட்டு மற்றும் மாநகரம்) திசைப்படுத்தப்பட முடியும்.

2018 வரவுசெலவுத் திட்டத்தின் பிரகாரம்,சுற்றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது ஏழு சுற்றுலா அபிவிருத்தி சார்ந்த முன்னெடுப்புகளுக்கென ரூபா. 845 மில்லியன் தொகையினை ஒதுக்கியுள்ளது.

அத்தகைய கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2018 **அட்டவணை: 1.3**

இல.	அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	ஒதுக்கீடு (ரூ.மில்.)	திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)	செலவினம் (ரூ.மில்.)
	வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள்			
01	உல்லாசப் பயணிகளைக்கவரும் அம்சங்களுக்களைஅபிவிருத்தி செய்தல்	375.00	390.00*	256.83
02	சுற்றுலா பற்றிய மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல்	40.00	40.00	31.65
03	சமூக சுற்றுலா அபிவிருத்தி (சுற்றுலாக் கிராமங்களின் அபிவிருத்தி)	25.00	10.00	2.19
04	சுற்றுலாவுக்கான முக்கய பிரதேசங்களில் சுற்றுாப் பொலிஸ் பிரிவுகளை விரிவாக்கம் செய்தல்	30.00	30.00	0.012
	உப மொத்தம்	470.00	470.00	290.67
	விசேட வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்			
06	சுற்றுலா நேயம் கொண்ட ருக் ருக் நிகழ்ச்சித்திட்டம்	50.00	50.00	1.11*
07	6 கோட்டைகளை அபிவிருத்தி செய்தல்	250.00	250.00	3.77
08	புகையிரத நிலையங்களை தரமுயர்த்தி அவற்றை தொல்லியல் பிரதேசங்களாக பிரகடனம் செய்தல்	75.00	75.00	35.538
	உப மொத்தம்	375.00	375.00	40.418
	முழுமொத்தம்	**845.00**	**845.00**	**331.088**

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

1.5.1சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்களை அபிவிருத்தி செய்தல்

இந்த அமைச்சானது ஒன்றுடனொன்று உள்ளிணைப்புடையதும் பூரணத்துவம் கொண்டதுமான பிராந்திய மற்றும் உள்நாட்டு சுற்றுலா இலக்குகளைக் கொண்டு வெற்றிகரமானதும் நீடுறுதி மிக்கதுமான சுற்றுலாத் துறைக்கான சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது. இத்தகைய சுற்றுலா இலக்குகள், காலப் போக்கில் அவற்றுக்கான தனித்துவம் வாய்ந்த விற்பனை எண்ணக்கருக்களை வரையறை செய்துள்ளன. மேலும் இவை, தமது கேள்வி மற்றும் விநியோக இயக்கத்திற்கு அமைவான கவர்ச்சி மிக்க அம்சங்கள், வசதிகள், அணுகல் வசதிகள், மனித வளங்கள், புகழ் மற்றும் பெறுமதிகள்போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

இத்தகைய சூழமைவுகளினுள், சுற்றுலாத் துறை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து மாகாணங்களிலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2018 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ரூபா. 390 மில்லியன் தொகையானது ஒதுக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்:

- கிராமியப் பிரதேசங்களில் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மைய அவதானத்தினைச் செலுத்தி சுற்றுலாத் துறையில் நீடுறுதிமிக்க வளர்ச்சியை உறுதிப்படுத்தல்.
- கிராமியச் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் கிராமிய சுற்றுலா அபிவிருத்தி உபாய முறையினை ஒருங்கிணைத்தல்.
- நேரடியான மற்றும் நேரடியற்ற தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கான மற்று் சமுதாய இயக்குனர்களுக்கான வருமானப் பாதைகளை அதிகரித்தல்.
- உல்லாசப் பயணி வருகையினை அதிகரித்து உள்நாட்டுப் பொருளாதாரச் சூழமைவினுள் அவர்கள் பணத்தினைச் செலவு செய்வதற்கான வசதியை வழங்குதல்.
- பல்வேறுபட்ட கலாசாரங்கள் மற்றும் அவர்களது பாரம்பரியங்களை உணர்ந்து அவற்றை ஊக்குவித்தல்.

1.5.1.1 சுற்றலாக் கவர்ச்சிக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்

இந்த அமைச்சானதுஇனங்காணப்பட்ட சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் மாகாண சபைகள், மாவட்டச் செயலகங்கள், மற்றும் அரச முகவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது.

31.12.2018 ல் உள்ளவரனவிபரங்கள் பின்வருமாறு:அட்டவணை 1.4

இல	கருத்திட்டச் செயற்பாடுகளின் பெயர்	ஒதுக்கங்கள் (ரூ.மில்.)	செலவினம் (ரூ.மில்.)	பௌதீக முன்னேற்றம்	அமுல்படுத்தும் முகவர்
	அனுராதபுரம் மாவட்டம்				
1	நுவரவெவ குளக் கட்டுக்கான நடை பாதை நிர்மாணம்	2.80	2.80	நிறைவு	பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம்
2	இசுருமுனிய விகாரைக்கு அருகாமையில் துப்பரவேற்பாட்டு வசதி முறைமை	10.28	10.28	நிறைவு	பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம்

3	அனுராதபுரம் வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் குட்டம் பொகுண மற்றும் சமாதிப்பிளிம ஆகியவற்றுக்கு இடையில் துப்பரவேற்பாட்டு வசதி முறைமை	7.03	7.03	நிறைவு	பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம்
	உப மொத்தம்	**20.11**	**20.11**		
	பொலன்னறுவை மாவட்டம்				
4	பொலன்னறுவை – வட்டடகெயவிற்கு அருகில் குளம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களை ஒரு சுற்றுலா இலக்காக மேம்படுத்தல்.	13.43	13.43	நிறைவு	பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம்
	உப மொத்தம்	**13.43**	**13.43**		
	புத்தளம் மாவட்டம்				
5	புத்தளம் - ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேசத்தில் ஓய்வெடுக்கும் இடங்களைச் சூழ வேலி அமைத்தல்.	5.67	5.65	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
6	அங்கப்பிட்டிய சந்தியில் இருந்து அளுத்தொட்ட சந்தி வரை வீதியை நிர்மானித்தல்.	0.77	0.599	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
7	கம்மாள பாலம் முதல் கடற்கரை வரையான வீதியை அபிவிருத்தி செய்தல்	1.55	1.25	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
8	மணவெரியவிலுள்ள ஓய்வகத்திற்கு அருகில் வாகனத் தரிப்பிடம் மற்றும் வீதி அபிவிருத்தி	5.52	4.63	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
9	புத்தளம் வைக்கல பிரதேசத்திற்கு ஒரு மின் நிலைமாற்றி விநியோகம்	4.58	4.58	இடம்பெற்று வருகிறது	இலங்கை மின்சார சபை
10	புத்தளத்தில் கடற்கரைப் பூங்கா ஒன்றினை அபிவிருத்தி செய்தல்	9.14	8.66	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
11	இரணவில கடற்கரைப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்தல்	0.06	0.06	நிறைவு	மாவட்டச் செயலாளர்புத்தளம்
12	கல்பிட்டி துரையடி வீதியை அபிவிருத்தி செய்தல்	33.52	11.40	இடம்பெற்று வருகிறது52 %	மாவட்டச் செயலாளர்புத்தளம்
	உப மொத்தம்	**60.81**	**36.83**		
	கண்டி மாவட்டம்				
13	கடலதெனிய ரஜ மகா விகாரையினுள்ளும் அதனைச் சூழவும் பெரஹர வீதியை அபிவிருத்தி செய்தல்	15.43	15.43	நிறைவு	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்

14	நெல்லிக்கல சர்வதேச பௌத்த நிலையத்தில் மலசல கூடத் தொகுதிகளை நிர்மாணித்தல்.	2.50	0.79	இடம்பெற்று வருகிறது (40%)	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
15	கடலதெனிய விகாரைக்கு அருகிலுள்ள சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்களை அதிகரித்தல் மற்றும் அது சம்பந்தமான பௌதீக உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல். கட்டம் iii – கண்டி	7.25	7.25	நிறைவு	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
	உப மொத்தம்	**25.18**	**23.47**		
	கேகாலை மாவட்டம்				
16	பதலகல கற்பாறைப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல்	2.70	2.63	நிறைவு	பிரதம செயலாளர்சப்ரகமுவமாகாணம்
17	றுவன்வெலவில் பெதங்கொட அடர்ந்த மூங்கில் புதர்களுக்கான அணுகல் பாதையினை அபிவிருத்தி செய்தல்.	7.96	1.75	நிறைவு	மாவட்டச் செயலாளர்கேகாலை
	உப மொத்தம்	**10.66**	**4.38**		
	நுவரெலிய மாவட்டம்				
18	ஹட்டன் புகையிரத நிலைய அபிவிருத்தி – சுற்றுலாவுக்கான வசதி ஏற்பாடு	3.59	0.50	நிறைவு	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
19	சுற்றுலாக் கவர்ச்சி மிக்க இடமாக கிரகரி ஏரியினை அபிவிருத்தி செய்தல். கட்டம் - iv - நுவரெலிய	38.18	38.18	நிறைவு	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
20	கொத்மல மகாவெலி மகா செய சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் - நுவரெலிய	43.40	10.50	இடம்பெற்று வருகிறது	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
21	ஹட்டன் புகையிரத நிலையத்தில் சுற்றுலா வசதி மையத்திற்கான உபகரணங்களின் கொள்வனவு	0.17	0.17	இடம்பெற்று வருகிறது	பிரதம செயலாளர் மத்திய மாகாணம்
	உப மொத்தம்	**85.34**	**49.35**		
	குருணாகலை மாவட்டம்				
22	ஒரு சுற்றுலாக் கவர்ச்சி மிக்க பிரதேசமாக யாப்பகூவ ரஜ மகா விகாரையை அபிவிருத்தி செய்தல்	10.64	10.64	நிறைவு	மாவட்டச் செயலாளர்குருணாகலை
23	சுற்றுலாக் கவர்ச்சி மிக்கதொரு இடமாக றிட்டி விகாரையை அபிவிருத்தி செய்தல்	9.11	9.11	நிறைவு	மாவட்டச் செயலாளர்குருணாகலை

24	அரங்கல தியான நிலையத்திற்கு அருகிலுள்ள பிரதேசத்திற்கான உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்தல்	5.99	5.99	நிறைவு	மாவட்டச் செயலாளர்குரு ணாகலை
25	பண்டுவஸ்நுவரவிலுள்ள தொல்பொருளியல் பிரதேசங்களுக்கான பெயர்ப் பலகைகளை நிறுவுதல்	1.48	1.48	நிறைவு	மாவட்டச் செயலாளர்குரு ணாகலை
26	ரம்படாகல்ல மொணராகல கோவிலில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	16.51	11.14	நிறைவு	மாவட்டச் செயலாளர்குரு ணாகலை
27	கட்டிமகானவிலுள்ள புனித அனா ஆலயத்தில் ஓய்வகத்தின நிர்மாணித்தல்	21.72	6.28	இடம்பெற்று வருகிறது 70%	மாவட்டச் செயலாளர்குரு ணாகலை
28	பதனிய நகரில் ஓய்வகத்தினை நிர்மாணத்தில்	3.12	0.63	நிறைவு	மாவட்டச் செயலாளர்குரு ணாகலை
	உப மொத்தம்	**68.57**	**45.27**		
	யாழ்ப்பாண மாவட்டம்				
29	கீரிமலையில் மாற்றும் அறையினை புனர்நிர்மானித்தல்	1.77	1.77	நிறைவு	பிரதம செயலாளர் வட மாகாணம்
30	அக்கரை கடற்கரைப் பிரதேசத்தில் பொது வாகனத் தரிப்பிடக் கொட்டகைகள் மற்றும் நிழல் குடிசைகளை நிர்மாணித்தல்.	2.64	2.64	நிறைவு	பிரதம செயலாளர் வட மாகாணம்
31	மாவிட்டபுரம் கந்தசாமிக் கோவிலில் யாத்திரிகர் ஓய்வக மண்டபத்தினை நிர்மாணித்தல்	1.69	1.66	நிறைவு	மாவட்டச் செயலாளர்யாழ் ப்பாணம்
32	நெடுந்தீவில் வசதிகளை மேம்படுத்தல்ஓய்வகங்களுக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல். கட்டம்-ii)	1.53	1.53	நிறைவு	பிரதம செயலாளர் வட மாகாணம்
33	யாழ்ப்பாணம் கந்தரோடைக் குளம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் சுற்றுலா இடங்களை நிர்மாணித்தல்	5.45	4.50	நிறைவு	மாவட்டச் செயலாளர்யாழ் ப்பாணம்
34	யாழ்ப்பாணத் தீவுகளில் சூழலியல் சார்ந்த சுற்றுலா நிலையத்தை அபிவிருத்தி செய்தல். கட்டம்-II	26.32	25.75	இடம்பெற்று வருகிறது90 %	மாவட்டச் செயலாளர்யாழ் ப்பாணம்
	உப மொத்தம்	**39.39**	**37.85**		
	மாத்தறை மாவட்டம்				
35	தெனியாய சத்மஹல் எல்லவில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் கட்டம் i மற்றும் ii (0.459 கி.மீ. அணுகல் பாதை அபிவிருத்தி)	3.60	2.96	நிறைவு	பிரதம செயலாளர் தெற்கு மாகாணம்
	உப மொத்தம்	**3.60**	**2.96**		
	காலி மாவட்டம்				

36	அகுரல கடற்கரையில் நடமாடும் துப்பரவேற்பாட்டு வசதி ஒன்றினை தாபித்தல்	0.81	**0.69**	நிறைவு	பிரதம செயலாளர் தெற்கு மாகாணம்
37	அம்பலாங்கொடயிலுள்ள மாதம்பவில சரணாலயத்தை அண்மித்த பிரதேசத்தில் சூழலியல் சார்ந்த சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கொடஹெனவில் மிதக்கும் படகு இறங்கு துறைகளை நிர்மாணித்தல்.	4.43	2.01	நிறைவு	பிரதம செயலாளர் தெற்கு மாகாணம்
	உப மொத்தம்	**5.24**	**2.70**		
	இரத்தினபுரி மாவட்டம்				
38	இரத்தினபுரி, பததொட்டை, டிவகுஹாவ பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்	0.23	0.23	நிறைவு	பிரதம செயலாளர்சப்ரகமுவமாகாணம்
39	இரத்தினபுரி, உடவளவ தேசிய பூங்கா, ஹண்டகிரியவில் காடு துப்பரவாக்கம் மற்றும் வீதி மேற்பரப்பு மேம்பாடு (15 கி.மீ.)	1.28	1.46	நிறைவு	பிரதம செயலாளர் சப்ரகமுவமாகாணம்
40	இரத்திரனபுரி, பூபத் எல்லவில் சுற்றுலா வசதி அபிவிருத்தி (பாரிய திட்டம் தயாரித்தல்)	1.79	1.43	நிறைவு	பிரதம செயலாளர் சப்ரகமுவமாகாணம்
41	பததொட்டவில் மாற்றும் அறை மற்றும் அணுகல் பாதையினை நிர்மானித்தல்	1.00	1.00	நிறைவு	பிரதம செயலாளர் சப்ரகமுவமாகாணம்
42	குருவிட்ட, பூபத் வீழ்ச்சிகளுக்கு அருவில் பார்வையாளர் வசதி அபிவிருத்தி (வாகனத் தரிப்பிடம்)	6.01		இடம்பெற்று வருகிறது	பிரதம செயலாளர் சப்ரகமுவமாகாணம்
	உப மொத்தம்	**10.31**	**4.12**		
	மட்டக்களப்பு மாவட்டம்				
43	மட்டக்களப்பு – ஏறாவூர் கடல் நீரேரிப் பிரதேசத்தினை அழகுபடுத்தலும் மேம்படுத்தலும்	3.05	3.05	நிறைவு	பிரதம செயலாளர் கிழக்கு மாகாணம்
44	ஏறாவூர் கடற்கரைப் பிரதேச அபிவிருத்தி	9.45	9.45	நிறைவு	மாவட்டச் செயலாளர் மட்டக்களப்பு
	உப மொத்தம்	**12.50**	**12.50**		
	பதுளை மாவட்டம்				
45	றவண எல்லவில் சுற்றுலா வசதி மற்றும் அவதானிப்பு மேடை ஆகியவற்றினை அபிவிருத்தி செய்தல்	12.01		இடம்பெற்று வருகிறது	பிரதம செயலாளர் பதுளை
	உப மொத்தம்	**12.01**	**0.00**		

	அம்பாறை மாவட்டம்				
46	லஹுகலவில் மகுல் மகா விகாரவில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	3.79	1.44	நிறைவு	மாவட்டச் செயலாளர்அம் பாறை
	உப மொத்தம்	3.79	1.44		
	மாத்தளை மாவட்டம்				
47	சிகிரிய ஹோட்டல் சந்தி முதல் தியகபில்ல வரையான வீதி புனர்நிர்மானம்	2.49	2.48	இடம்பெற்று வருகிறது	மாவட்டச் செயலாளர்மாத் தளை
	உப மொத்தம்	2.49	2.48		
	முழு மொத்தம்	373.24	256.90		

முக்கிய அம்சங்கள்

மகுமஹா விகாரை, லஹுகல, அம்பாறை

சுற்றுலா இடம் நிர்மாணிப்பு, கந்தரோடை, யாழப்பாணம்

கொடஹென ஓய்வு மையம், அம்பலாங்கொட, காலி

கண்டி, பாதை வசதிகள்

ருவன்வெலவில் பெதங்கொட அடர்ந்த மூங்கில் புதர் பிரதேசத்திற்கான அணுகல் பாதை அபிவிருத்தி

மகுமஹா விகாரை, லஹுகல, அம்பாறை

மகுமஹா விகாரை, லஹுகல, அம்பாறை

ஓய்வக அறைகளை மேம்படுத்தல், கீரிமலை, யாழப்பாணம்



கண்டி, நெல்லிகலவில் துப்பரவேற்பாட்டு வசதிகள்

மணவெரியவிலுள்ள ஓய்வகத்திற்கு அருகில் வாகனத் தரிப்பிடம்

1.5.2 சமுதாய கிராம இல்லத் தங்குமிடம்

1.5.2.1. அறிமுகம்

கிராமிய சூழமைவிற்கு மத்தியில் இலங்கையரின் பாரம்பரிய சமுதாய கிராம இல்லத் தங்குமிட வசதியானது இயற்கை, விவசாயம் மற்றும் கரையோரம் சார்ந்த சுற்றுலாவுடன் பின்னிப்பிணைந்த அனுபவங்களை வழங்குவதோடு, வேரூன்றிய தத்துவார்ந்த வாழ்க்கை நடைமுறைகளுக்கு ஏற்ற நேர்த்தி மிகு பாரம்பரிய உண்மை அனுபவங்களையும் அள்ளி வழங்குகிறது.

இத்தகைய இல்லத் தங்குமிடமானது கிராமிய வாழ்க்கையின் துடிப்பினையும் சுவையினையும் அனுபவிப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்ற உள்நாட்டு நடைமுறைகள், பெறுமானங்கள் மற்றும் கலாசாரம் உடைய குடும்பத்துடன் வசிப்பதற்கான அரியதொரு வாய்ப்பினையும் உல்லாசப் பயணிகளுக்கு வழங்குகிறது.இல்லத் தங்குமிட வசதியானது தனித்துவம் வாய்ந்த உள்நாட்டு அனுபவங்களையும் குறித்த வசதியை வழங்கும் குடும்பத்தினருடனான ஊடாட்டத்திற்கான வாய்ப்பினையும் குறித்த பயணிகளுக்கு வழங்குகிறது.மேலும் இது புதிய சுற்றுலா இலக்குப் பிரதேசங்களை அரசாங்கம் பிரபலப்படுத்துவதற்கு இயலச் செய்துள்ள புதிய மற்றும் இதுவரை காலமும் அனுபவிக்கப்படாத அனுபவங்களை வழங்குகின்றதொர வாய்ப்பாகவும் திகழ்கின்ற அதேவேளை, கிராமிய மக்களுக்கானதொரு மாற்று வருமான மூலத்தினையும் வழங்குகின்றது.

1.5.2.2. பௌதீக முன்னேற்றம்

நடப்பு நிதியாண்டில், அமைச்சானது ஐந்து திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், உபகரணங்களுடன் கூடிய இரண்டு வரவேற்பு நிலையங்கள், ஊக்குவிப்புப் பிரசுரங்கள், திசைப் பலகைகளை நிறுவுதல், கிராம வரவேற்புப் பலகைகள் காணொளிகள் மற்றும் இணைய அபிவிருத்திகள் போன்றவற்றுக்கு நிதிகளை வழங்கியது.

1.5.2.3.நிதி சார்ந்த செயலாற்றுகை

அட்டவணை 1.5

2018 இற்கு அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம்	ரூபா. 10 மில்லியன்
31.12. 2018வரையான செலவினம்	ரூபா. 2.19 மில்லியன்

1.5.2.4.முக்கிய சவால்கள்

- இல்லத் தங்குமிட எண்ணக்கரு பற்றிய சமுதாய மட்ட விழிப்புணர்வூட்டல் இன்மை
- மாகாணம் மற்றும் உள்நாட்டு ரீதியானகருத்திட்ட அமுலாக்குனர்களுக்கிடையில் நபர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறைவு
- கருத்திட்ட சந்தைப்படுத்தல் செயற்பாடுகளில் மந்த கதியுடன் கூடிய செயலாக்கம்

மத்திய மாகாணத்தில் ஹீலிஓயா

தென் மாகாணத்தில் கொடஹெென

வட மேல் மாகாணத்தில் யாப்பஹுவகம

1.5.3 சுற்றுலா சார்ந்த மனித மூலதன அபிவிருத்தி

மனித வள முகாமைத்துவத்தினை உபாய முறையில் பயன்படுத்துகின்ற மிகவும் திறமை வாய்ந்த தொழிற்படையுடன் கூடிய ஒரு சுற்றுலாத் துறையானது உரிய மக்களை உரிய தொழிலுக்கு கவர்ந்து கொள்வதற்கானதொரு முன்தேவைப்பாடாகும். இலங்கையானது ஒரு உயர் பெறுமதி கொண்ட சுற்றுலா இலக்கு நாடாக மிளிர்வதற்கு இது ஒரு இன்றியமையாத அம்சமாகும். சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளிலான உறுதியான வளர்ச்சியானது வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதோடு, இலங்கையர்களுடைய உள்ளார்ந்த விருந்தோம்பல் அம்சங்களையும் அள்ளி வழங்குவதற்கு வழியமைக்கிறது.

1.5.3.1. மூன்று மாத விருந்தோம்பல் சேவை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

விருந்தோம்பல் துறையில் சுமார் 2200 வேலையில்லா இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 36.5 மில்லியன் தொகை நிதி ஒதுக்கப்பட்டது. மேற்படி விருந்தோம்பல் சேவை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண சபைகள், தனியார் ஹோட்டல் பாடசாலைகள் மற்றும் தனியார் ஹோட்டல்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்த பயிற்சி நெறியில் முகப்பு அலுவலக முகாமைத்துவம், உணவகம் மற்றும் அருந்தக முகாமைத்துவம் மற்றும் இல்லப் பராமரிப்பு முகாமைத்துவம் போன்ற துறைகளிலான கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் உள்ளடங்குகின்றன. மேலும், இது சர்வதேச தரத்திலான பேச்சு ஆங்கிலம், வாழ்க்கைத் திறன், சிறந்த தொடர்பாடல், விற்பனை மற்றும் நுகர்வோர் சேவைகள் போன்றவற்றில் ஒரு விரிவான அறிவினை வழங்குகிறது. இது பற்றிய பாடத்திட்டமானது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் விருத்தி செய்யயப்பட்டதோடு, இந் நிறுவனமே மதிப்பீடுகள்/பரீட்சைகளையும் நடத்தியது.

இதன் போது மாணவர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் தொழில்வாண்மைத் தொழில் அபிவிருத்தியுடன் கூடிய வழிகாட்டல்கள் போன்றனவும் வழங்கப்பட்டன. இதற்கான சான்றிதழ்களை வழங்கும் விழாவினை அமைச்சு நடாத்தியது. ஹோட்டல் துறையில் மாணவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் சான்றுப்படுத்தப்பட்ட சான்றிதழ் அவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றால் அது மிகையாகாது.

குறிக்கோள்:-

1. சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டு விருந்தோம்பல் துறையில் தேவையான தொழிலாளர் பதவிகளை நிரப்புதல்.
2. விருந்தோம்பல் துறையில் காணப்படுகின்ற சேவைத் தரத்தினை மேம்படுத்தல்
3. தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.
4. விருந்தோம்பல் பயிற்சியளிப்பில் பெண்களின் பங்களிப்பினை ஊக்குவித்து அவர்களின் வருமானத்தை அதிகரித்தல.

சாதனை : (2018.12.31 வரை)

- உணவகம் மற்றும் அருந்தகம் சார்ந்த சேவைகளில் சுமார் 1724 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
- இல்ல பராமரிப்பு முகாமைத்துவத்தில் 252 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- முகப்பு அலுவலக முகாமைத்துவத்தில் 231 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மூன்று மாத கால விருந்தோம்பல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கத் தகவல்- (2018.12.31)

அட்டவணை-1.6

	மாகாணம்	பாடநெறியின் பெயர்				மொத்த பொறுப்பு (ரூ.மில்)	2018.12.31 வரையான உண்மைச் செலவினம் (ரூ.மில்)
		உணவச் சேவை	வீட்டு நிருவாகம்	விருந்தினரை வரவேற்றல	மொத்தம்		
1	சப்ரகமுவ	40	0	40	80	1.20	8.25
2	தெற்கு	95	55	40	190	2.85	2.34
3	வட மத்திய	662	177	0	839	12.585	12.345
4	வடக்கு	37	0	40	77	1.155	0.96
5	கிழக்கு	41			41	0.615	0.615
6	மத்திய	184	0	0	184	2.76	2.325
7	மேற்கு	445	0	111	556	8.34	7.725

8	வட மேல்	220	20	0	240	3.60	3.48
	நிர்வாகச் செலவினங்கள்						2.066
	மொத்தம்	**1724**	**252**	**231**	**2207**	**33.105**	**32.68**

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சம அலுவல்கள் அமைச்சு

விருந்தோம்பல் பயிற்சித் திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் விழா

1.5.3.2. சுற்றுலாச் சேவை வழங்குனர்களுக்கான திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டம்

அமைச்சானது நாடளாவிய ரீதயிலுள்ள சுற்றுலாத் துறைக்கான சேவைகளை வழங்குவோரின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் 3 நாட்களைக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை சுற்றுலா மனித மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுத்துள்ளது.

மேற்படி சுற்றுலாச் சேவை வழங்குனருக்கான திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டமானது மாகாண சுற்றுலா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கென ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1500 சேவை வழங்குனர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது சுற்றுலாச் சேவை வழங்குனர்களின் குறித்த சேவை சார்ந்த நடத்தைகள் மற்றும் திறன்களை தரமுயர்த்துவதற்கான குறிக்கோளினை எதிர்கொள்ளும் வகையில் வடிவகைக்கப்பட்டதாகும்.

இலக்குக் குழு:

போக்குவரத்து வசதிகள் (வாடகை வாகன சாரதிகள், பிரத்தியேக போக்குவரத்து வழங்குனோர்கள்): சுற்றுலா கடை பராமரிப்பாளர்கள், முகாமையாளர்கள், விற்பனையாளர்கள்: சிறிய மற்றும் நுண் தங்குமிட வசதி வழங்குனர்கள் (விருந்தினர் இல்லப் பராமரிப்பாளர்கள், இல்லத் தங்குமிடச் சொந்தக்காரர்கள், இளைஞர் விடுதி இயக்குனர்கள் போன்றோர், மேலும் தெருக்கள், தளங்கள் மற்றும் நகரங்களில் சுற்றுலா சார்ந்த விற்பனையாளர்கள்).

குறிக்கோள்கள்

1. தரைப் பகுதி சார்ந்த சுற்றுலாப் பங்கீடுபாட்டாளர்கள் நோக்கிய சுற்றுலாத் துறையில் உள்ளுணர்வு மாற்றங்களைக் கொண்டுவருதல்
2. சுற்றுலா இடம் சார்ந்த விநியோகத்தினை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் தற்போதுள்ள இளைஞர்களுக்கும் மற்றும் வளர்ந்து வரக்கூடிய பிரதேசங்களிலுள்ள இளைஞர்களுக்குமான வாய்ப்புக்களை வழங்குதல்.
3. உல்லாசப் பயணிகளின் உணர்வுகளையும் அவர்களின் திருப்தியையும் மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலாத் துறையின் சேவைகள் மற்றும் அது சார்ந்த வசதிகளின் தரம் மற்றும் நியமதரம் ஆகியவற்றை மேம்படுத்தல்.

சுற்றுலாச் சேவை வழங்குனர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (3 நாட்கள்) - 2018

அட்டவணை 1.7

மாகாணத்தின் பெயர்	ஒதுக்கம் (ரூ.மில்)	செலவினம் (ரூ.மில்.)	பயிற்றப்பட்ட சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை
மேல் மாகாணம்	0.79	0.511	210
தென் மாகாணம்	0.3	0.172	40
வடக்கு மாகாணம்	0.27	0.219	100
வட மத்திய மாகாணம்	0.53	0.147	70
மத்திய மாகாணம்	0.53	0.486	209
வட மேல் மாகாணம்	0.27	0.252	135
முழு மொத்தம்	**2.75**	**1.787**	**764**

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சம அலுவல்கள் அமைச்சு

1.5.4. புகையிரத நிலையங்களைத் தரமுயர்த்தி அவற்றை தொல்லியல் தளங்களாக பிரகடனம் செய்தல்

இலங்கையில் புகையிரதப் பயணமானது உல்லாசப் பயணிகளுக்கு ஒரு சாகசம் மிக்கதொரு பயணமாகத் திகழ்வதோடு, இது நாட்டின் இயற்கை வளங்களை ரசித்துக் கொண்டு பயணம் செய்வதற்கான சிறந்த வழி முறையாகவும் விளங்குகிறது. இலங்கைப் புகையிரதச் சேவையானது நாட்டின் சுற்றுலா சார்ந்த அம்சங்களை ஆழமாக வெளிக்கொணர்வதற்கான பாரிய வாய்ப்பினை வழங்கி வருகிறது. புகையிரத உட்கட்டமைப்புகள் பழமை வாய்ந்ததாகவும் அவற்றின் சேவை மந்தமாகவும் இருப்பினும், அவை எளில் கொஞ்சும் காட்சிகளையுடைய பாதையூடாகப் பயணிப்பதோடு, தடைகள் மிக்க குறுக்கு வழிகளை விடவும் துரிதமாகவும் உரிய இடத்தினை அடைவதற்கு உதவுகிறது. கௌரவ நிதி அமைச்சர் தனது 2018 வரவுசெலவுத் திட்ட உரையில் குறிப்பிடுகையில், நாணு ஓயா, கொழும்பு கோட்டை, காலி மற்றும் எல்ல போன்ற சுற்றுலா இலக்கு மிக்க பிரதேசங்களுக்கான சௌகரியம் மிக்க அணுகல் பாதைகள்,

அப் பிரதேசங்களின் புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் வசதியளிக்கப்படுகின்ற அதேவேளை, சிறந்த புகையிரதப் பயண அனுபவத்திற்கான ஒரு தனியார்த் துறையின் ஒத்துழைப்புடன் அதன் அசல் தொல்லியல் அடையளங்கள் பாதுகாக்கப்படவும் உள்ளன.

இந்தப் பின்னணியில், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவலகள் அமைச்சானது மேற்படி கருத்திட்டத்திற்கென நிதி அமைச்சிடமிருந்து ரூபா. 75 மில்லியன் தொகையினை ஒதுக்கியுள்ளது. இலங்கைப் புகையிரதச் சேவை இதற்கான அமுல்படுத்தும் முகவராக விளங்குகின்ற அதேவேளை, தொல்பொருளியல் திணைக்களமானது இதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்றது.

மேற்படி கருத்திட்டங்கள் பற்றிய சுருக்கத் தகவல்கள்அட்டவணை 1.8

இல.	கருத்திட்டச் செயற்பாடுகளின் பெயர்கள்	ஒதுக்கம் (ரூ.மில்.)	செலவினம் (ரூ.மில்.)	பௌதீக முன்னேற்றம் %
1	எல்ல புகையிரத நிலையத்தினை நவீனமயப்படுத்தல்/ தரமுயர்த்தல்	32.65	32.65	98%
2	காலி புகையிரத நிலையத்தினை நவீனமயப்படுத்தல்/ தரமுயர்த்தல்	5.56	2.88	95%
3	கொழும்பு புகையிரத நிலையத்தினை நவீனமயப்படுத்தல்/ தரமுயர்த்தல்	10.65		
	முழு மொத்தம்	48.87	35.53	

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சம அலுவல்கள் அமைச்சு

புகைப்படங்கள்

சவால்கள்

01. இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் திறமையான தொழிலாளர்கள்/ தொழில்நுட்பவியலாளர்கள் இன்மை

02. தனியான அல்லது பகிரப்பட்ட பொறுப்புக்களையுடைய அரசாங்க முகவர்களின் பல்வகைத்தன்மையானது குறைந்த முன்னேற்றத்திற்கு வழியமைக்கின்றன.

03. நிர்மாணிப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளை துரித கதியில் மேற்கொள்வதற்கான ஒரு தொழில்நுட்பப் பிரிவு அமைச்சுக்கு அவசியமாகவுள்ளது.

1.5.5.ஆறு கோட்டைகளை அபிவிருத்தி செய்தல்

இலங்கையானது சுமார் 1500 வருடங்களுக்கு முன்பிருந்தே அதன் கரையோரப் பிரதேசத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கிட்டத்தட்ட 30 கோட்டைகளைக் கொண்டுள்ளது. மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை போன்ற தெரிவுசெய்யப்பட்ட கோட்டைகளின் பாதுகாப்பு மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் சுற்றுலா விடய அபிவிருத்தி பற்றிய தற்போதைய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொரு தளத்திற்கும் விஜயம் செய்யும் வகையில் ஒரு சிறிய-பயணத்திற்கான வாய்ப்பினை வழங்குவதனால் இவை இலங்கையின் குறிப்பிடத்தக்க அனுபவமாக விளங்கக் கூடும்.

எனவே, தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் ஏனைய தனியார்த் துறையினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஒரு உயர்-முடியுடைய சுற்றுலா இலக்கு அம்சமாக கோட்டைப் பிரதேசங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்துவதற்காக ரூ. 250 மில்லியன் தொகையினை நிதி அமைச்சு ஒதுக்கியுள்ளது. இதன் முதற்கட்ட முன்னெடுப்பாக, காலணித்துவக் காலத்து சுற்றுலா கவர்ச்சி மிக்க அம்சமான ஒல்லாந்தர் கோட்டை முதல் ஒல்லாந்தர் தண்டவாளம் வரையான விடயங்களைப் பாதுகாப்பதனை முன்னோக்கியதாகும். உயர் செலவுமிக்கோர் சந்தையினைக் கவர்ந்து அவற்றைத் தக்கவைக்கும் நோக்கில் மேற்படி ஒல்லாந்தர் காலத்துக் கோட்டைகளை தற்போதைய சிறந்த நடைமுறை கொண்டு அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்க முக்கிய விடயமாகும். இத்தகைய சூழமைவில், அமைச்சானது கல்பிட்டி மற்றும் மன்னார் கோட்டைகள் குறித்தான பாதுகாப்பு மற்றும் புத்தாக்கப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

மன்னார் கோட்டையின் பாதுகாப்பு மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சானது ரூபா 25.63 மில்லியன் தொகையினை தொல்பொருளியல் திணைக்களத்திற்கு ஒதுக்கியுள்ளது, குறித்த செயற்பாடுகள் பின்வருமாறு,

- கோட்டை (பாதுகாப்பு அரண் துணைக் கட்டட மணிக் கோபுரம் மற்றும் அரணின் சாய்தளம்)
- நுழைவுக் கட்டடம், கைதிகள் கட்டடம் மற்றும் விடுதிக் கட்டடம் ஆகியவற்றைப் புத்தாக்கம் செய்து அவற்றுக்கு தளபாடங்களை வழங்குதல்
- அகழி தூர்வாரல்

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் அகழி தூர்வாரலுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் தயரிக்கப்பட்டது.

1.5.5.1 கல்பிட்டி கோட்டை

கல்பிட்டி கோட்டையானது தற்பொழுது இலங்கை கடற்படையினரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையினரை வேறு இடத்திற்கு இடம்பெயரச் செய்வதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருவதோடு, மேற்படி பிரதேசத்தினை சுற்றுலா கவர்ச்சி மிக்க இடமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை குறித்த இடத்தின் பாதுகாப்பு மற்றும் புத்தாக்கப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. இதற்கிணங்க, இந்தக் கோட்டையின் அபிவிருத்திக்கான பணி ஏற்பாடுகள், செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் காலவரையறை தொடர்பிலான தொடர்பாடலை அமைச்சானது தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் இலங்கை கடற்படை ஆகியோருடன் மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி கோட்டைப் பிரதேசத்தின் பாதுகாப்புப் பணிகளையும் தற்பொழுது அதன் உட்பகுதியை ஆக்கிரமித்துள்ள இலங்கை கடற்படையினை இடம்பெயரச் செய்வதற்கான நடவடிக்கைகளையும் 2019 ஜனவரி 2 ஆம் வாரத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

1.5.5.2. சவால்கள்

2. தனியான அல்லது பகிரப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட அரசாங்க முகவர்களின் பன்முகத் தன்மையானது மேற்படி முன்னெடுப்பு நடவடிக்கையினை மந்தமாக்குகிறது.
3. சில கோட்டைகளை அரசாங்க நிறுவனங்கள் தற்பொழுது ஆக்கிரமித்துள்ளன. உதாரணமாக, இலங்கை கடற்படையினர் கல்பிட்டி கோட்டையில் இயங்கி வருவதோடு, மட்டக்களப்புக் கோட்டையில் மாவட்டச் செயலகம் செயற்பட்டு வருகிறது.
4. நாட்டிலுள்ள சுற்றுலா கவர்ச்சி மிக்க விடயங்களாக அறியப்படாத பிரதேசங்களை அபிவிருத்தி செய்து அவற்றை அறிமுகப்படுத்தல்.

1.5.6.சுற்றுலா நேயம் கொண்ட "டுக் டுக்" நிகழ்ச்சித்திட்டம்

1.5.6.1.அறிமுகம்:

நிதி அமைச்சானது சுற்றுலா நேயம் கொண்ட "டுக் டுக்" சேவையினைப் பயிற்றுவிப்பதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கியுள்ளது. இது இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் நலன் கருதி ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு சுற்றுலா நியமங்களுடன் கூடிய மீட்டர் கொண்ட முச்சக்கர வண்டிகளை அறிமுகம் செய்வதற்கான ஒரு திட்டமாக இது காணப்படுகிறது. இது தொடர்பான விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டது.

1.5.6.2. இலக்குக் குழு:

இலங்கையிலுள்ள பிரதான சுற்றுலாப் பிரதேசங்களில் வெளிநாட்டவர்களுக்கான போக்குவரத்துச் சேவையை வழங்குகின்ற முச்சக்கர வண்டி இயக்குனர்கள்.

1.5.6.3.செயற்பாடுகள்:

- பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்
- பரீட்சை மற்றும் மதிப்பாய்வுச் சோதனைகளை முன்னெடுத்தல்
- சான்றிதழ்கள், அடையாள அட்டைகள் மற்றும் ஸ்டிகர்களை விநியோகித்தல்
- டுக்-டுக் தொடர்பில் சந்தைப்படுத்தல்
- தரவுத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பிரயோகம் அபிவிருத்தி
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் சுற்றுலா நேயம் கொண்ட ருக் ருக் சேவையினை ஊக்குவித்தல்.

1.5.6.4. இக்கருத்திட்டங்கள் பற்றிய சிறப்பம்சங்கள்:

2018 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், உல்லாசப் பயணிகளுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்ற அனைத்து முச்சக்கர வண்டிச் சாரதிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இதற்கிணங்க, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது முச்சக்கர வண்டிச் சாரதிகளினால் வழங்கப்படும் சேவையின் தரத்தினை ஒரு முறை சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மேம்படுத்துவதற்குத் திட்டமிட்டு வருகிறது. எனவே, ஏழு நிகழ்ச்சித்திட்டங்கள் இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, மேல் மாகாணத்தைச் சேர்ந்த 813 பேரும், தென் மாகாணத்தைச் சேர்ந்த 78 பேரும் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 125 பேரும் குறித்த பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

1.5.7 உயர் சுற்றுலா கவர்ச்சியுடைய பிரதேசங்களில் சுற்றுலாப் பொலிஸ் அலகுகளைத் தாபித்தல்

எல்ல, மிரிஸ்ஸ மற்றும் கல்பிட்டி போன்ற பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கும் முகமாக, 2018 இல் 3 சுற்றுலா பொலிஸ் அலகுகளைத் தாபிப்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் உயர் சுற்றுலா கவர்ச்சிப் பிரதேசங்களில் சுற்றுலாப் பொலிஸ் அலகினை தாபிப்பதற்கன நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்ட 17 பிரதேசங்களில் மேற்படி பிரதேசங்களும் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டின் வருடாந்த வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டமாகும்.

புதிய சுற்றுலா பொலிஸ் அலகுகளைத் தாபிப்பதற்குத் தேவையான காணி சுவீகரிப்பு மற்றும் குடியேற்றம் போன்ற விடயங்களில் ஏற்பட்ட கடினத் தன்மைகளுக்கு ஒரு மாற்று வழியாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது, இதனை ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக, குறைவான இடவசதியுடைய கொள்கலன்களை உபயோகித்து இதத்கைய சுற்றுலா பொலிஸ் அலகினை மிரிஸ்ஸ பிரதேசத்தில் புதிதாக தாபிப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளதோடு, இந்த நிகழ்ச்சித் திட்டமானது பெரும்பாலும் பூர்த்தியடையும் தருவாயில் உள்ளது.

எல்ல பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள அரச காணியில் நிரந்தரமான சுற்றுலா பொலிஸ் அலகு ஒன்றைத் தாபிப்பதற்கான குறித்த கட்டட திட்டங்கள் மற்றும் செலவின மதிப்பீடுகள் போன்றன பூர்த்தியடைந்துள்ளதோடு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது மேற்படி காணி குறித்தான தீர்மான நடைமுறைகள் முடிவடைந்ததை உடனடுத்து நிர்மாணிப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது கல்பிட்டி பிரதேசத்தில் இனங்காணப்பட்ட அரச காணி ஒன்றில் நிரந்தர சுற்றுலா பொலிஸ் அலகு ஒன்றைத் தாபிப்பதற்குத் தேவையான அவசியமான கட்டட திட்டங்களை வடிவமைத்துள்ளது. காணி பற்றிய தீர்மான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதோடு, குறித்த கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான பொருட்கொள்வனவுப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1.5.8.மன்னார், மடு மாதாக் கோவில் பிரதேசத்தில் தற்காலிக தங்குமிடத்தினை நிர்மாணித்தல்

இந்த அமைச்சானது மேற்படி பிரதேசத்திற்கு வருகை தருகின்ற உல்லாசப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்கள் போன்றோருக்கு வசதி அளிக்கும் வகையில், மன்னார், மடு மாதாக் கோவில் பிரதேசத்தில் தற்காலிக தங்குமிடக் கருத்திட்டத்தினை இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பில், இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் இந்த அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. மேலும், கட்டடங்கள் திணைக்களமானது இதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதோடு, இவர்களுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையும் காச்சாத்திடப்பட்டுள்ளன.

இது குறித்தான அமுல்படுத்துகைக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. இருப்பினும், அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் மேற்படி மன்னார், மடு மாதாக் கோவில் ஒரு புனித பூமியகா பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, குறித்த புனித பூமியினை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு பிரதான திட்டத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமானது இக் கருத்திட்டத்திற்கென 6.5 – 7 ஏக்கர்கள் காணியை ஒதுக்கியுள்ளது. அமைச்சானது மடு பிரதேச செயலகத்திலிருந்து குறித்த காணிக்கான நில அளவைத் திட்ட வரைபடத்தினை மறைக்கக் கோரியுள்ளதோடு, கருத்திட்ட

வடிவமைப்புகள், கேள்வு மனு ஆவணங்கள் மற்றும் அளவைப் பட்டியல் போன்றன கட்டடங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டன.

இந்திய உயர் ஸ்தானிகராலயமானது இதற்குப் பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவு செய்யும் நோக்கில் விலைமனுக் கோரலுக்கான பத்திரிகை விளம்பரத்தினை 2019 ஜனவரி முதல் வாரத்தில் பிரசுரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

1.5.9. 2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறுசுற்றுலா பிரிவின்நிதி பிரிவின் செயலாற்றுகை

மீண்டெழும் செலவு		
- செயற்பாட்டு நடவடிக்கைகள்	138,040,200.00	119,036,945.00
-அபிவிருத்தி நடவடிக்கைகள்	300,000,000.00	-
மொத்த மீண்டெழும் செலவு	438,040,200.00	119,036,945.00
முலதனச் செலவு		
- செயற்பாட்டு நடவடிக்கைகள்	10,619,800.00	8,982,163.00
-அபிவிருத்தி நடவடிக்கைகள்	845,000,000.00	330,009,182.00
மொத்த முலதனச் செலவு	855,619,800.00	338,991,345.00
மொத்தம்	**1,293,660,000.00**	**458,028,290.00**

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சம அலுவல்கள் அமைச்சு

1.5.10. சந்தைஅபிவிருத்திவசதியளிப்பு

சந்தை அபிவிருத்தி வசதியளிப்பு மார்ச் மாதம் 2017ல ஆஸ்திரேலிய அரசாங்கம் மற்றும்,சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் கூட்டுமுயற்சியுடன் தானியார் துறையினரை ஊக்குவிப்பதனை நோக்கமாககொண்டது.

MDF சந்தை அபிவிருத்தி வசதி

Australian Aid

சுற்றுலா மற்றும் சுற்றுலா தொடர்பான துறைகள்

28,660	13%	USD 77m	460	19
பயனாளிகள்	பெண்களின் பங்களிப்பு	மொத்த மேலதிக வருமானம்	வேலைவாய்ப்புகள் FTE)	தலையீடுகள்

*இந்த ஒட்டுமொத்த முடிவுகள் ஜனவரி 2016 முதல் டிசெம்பர் 2018 வரை (2016-2018)

தடைகளை அனுகுதல்

சுற்றுலா பல்வகைத்தன்மை

- சுற்றுலா உற்பத்தி மற்றும் பயணமுடிவிடங்களை பல்வகைப்படுத்தல்
- வளர்ந்து வரும் பயணமுடிவிடங்களை ஊக்குவித்தல்
- ஆதார அடிப்படையிலான தீர்மானங்களை ஆதரித்தல்
- குறுக்குவெட்டு சுற்றுலா ஆதரவு செயல்பாடுகளை அனுகுதல்(தொழிலாளர், இணைப்பு, தகவல்)

இலங்கை பொருட்களின் நம்பகதன்மையினை மேம்படுத்தல்

- தகவல் தயாரிப்பிற்கான அணுகல்
- உள்ளீடுகளுக்கான அணுகல்
- பிரீமியம் சந்தைகளுக்கான அணுகல்
- அறுவடைக்கு பிந்திய இழப்பு

தலையீடுகள்

சுற்றுலா பல்வகைத்தன்மை

- சுற்றுலா அபிவிருத்தி
- வளர்ந்து வரும் பயணமுடிவிடங்களின் முகாமை மற்றும் ஊக்குவிப்பு
- வினைத்திரனான ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

இலங்கை பொருட்களின் நம்பகதன்மையினை மேம்படுத்தல்

- தனியார் விரிவாக்கசேவைகள் மூலம் தகவலுக்கான சிறந்த அணுகலை ஊக்குவித்தல்
- உள்ளீடுகளுக்கான அணுகலை அதிகரித்தல்
  - குஞ்சு பொரிப்பகங்கள் விதைப்பாவல்
- பிரீமியம் சந்தைகளுக்கான அணுக அணுகலை ஊக்குவித்தல்
  - தரப்படுத்தல்
  - மதிப்பு சேர்த்தல்
- அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை குறைப்பதற்கான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த உதவுதல்



பங்காளர்கள்

- Divron Bioventures
- Coolman
- Prawn Ceylon Pvt Ltd
- Export Development Board
- Aruna Plant Nursery
- Pasanka
- Soul Coffee
- Selyn
- Good Market
- Rice and Carry
- Pepper
- Serendib Leisure
- Sanasa Internationa
- LDR Technologies
- Rainforest Ecolodge
- Edge Adventures
- Safari Panama
- Cinnamon
- SLTDA Night Market
- Hammock Studio

*MDF பங்காளர்களின் செயற்பாடுகள்/ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகள் குித்துக்காட்டப்பட்டுள்ளது

முக்கிய முடிவுகள்

2017,2018 ஆம் ஆண்டுகளில் **2369** சுற்றுலா பயணிகள் MDF ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் அனுபவங்களில் பங்கேற்றனர்.

2017 ல் இருந்து வடக்கு நீல நீச்சல் நண்டு விவசாயிகளின் **சந்தைகள் விரிவாக்கப்படுகின்றது**.

2018 ம் ஆண்டில் MDF ஆதரவு பங்காளர்களால் **2.5 மில்.அ.டொ** ஏற்றுமதி செய்யப்பட்டது.

வடமாகாணத்தில் பெண்களுக்கான **370** முழு நேர வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

2.
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.1 அறிமுகம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது (SLTDA) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கானதொரு பிரதான நிறுவனமாக தாபிக்கப்பட்டது. இந்நிறுவனமானது (பொதுவாக "சிலோன் சுற்றுலாப்பயணிகள் சபை/ இலங்கைச் சுற்றுலாச் சபை/ இலங்கை சுற்றுலாப்பயணிகள் சபை" என அழைக்கப்படுகிறது) ஆசியாவின் மிகவும் முன்னணி சுற்றுலாத் தளமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான பயணப் பாதையில் தன்னை அர்ப்பணித்துள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது சர்வதேச அளவில் ஒரு தனித்துவம் வாய்ந்த சுற்றுலாத் தளமாக இலங்கையை மாற்றியமைக்கக்கூடிய பல்வேறுபட்டதும் தனித்துவம் வாய்ந்ததுமான தரமான சுற்றுலாச் சேவைகள் மற்றும் சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தன்னை மேலும் அர்ப்பணிக்கவும் உள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது காத்திரமான முறையில் அதன் சுற்றுலா உற்பத்தி அம்சங்களை உபயோகிக்கின்ற அதேவேளை, நாட்டிற்கு பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனுடனும் சேவையாற்றுவதற்குத் தேவையான வளங்களைத் தெரிவு செய்வதையும் உறுதிப்படுத்துகிறது. இதன் சில செயற்பாடுகளுள் சுற்றுலாத் துறையின் குறிப்பான, தனித்துவம் வாய்ந்த உற்பத்திகள் மற்றும் சேவைகளை இனங்கண்டு அவற்றை மேலும் அபிவிருத்தி செய்தல், சுற்றுலாத் துறை அபிவிருத்தி வழிகாட்டிகளை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தல், சட்டம் தொடர்பான வசதிகளை ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய உற்பத்திகள் மற்றும் சேவை அபிவிருத்திக்கான நிர்வாக செயன்முறைகளை முன்னெடுத்தல் போன்றனவும் உள்ளடங்குகின்றன.

2.2. சர்வதேச சுற்றுலா பற்றிய மேலோட்டப் பார்வை உரு - 2.1



சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2018 ஆம் ஆண்டில் 6 சதவீத அதிகரிப்புடன் 1.4 பில்லியனை எட்டியுள்ளது. 2018 இலான வருகையானது 2017 ஐ விடவும் உறுதியான பெறுபேற்றினை வழங்கியுள்ளதோடு (+7%), 2010 இன் பின்னரான இரண்டாவது உறுதியான ஆண்டாகவும் இது திகழ்கிறது. இவ் ஒட்டுமொத்த அனுகூலத்திற்கும் சாதகமான பொருளாதாரச் சூழமைவும் மற்றும் பாரிய மூலச் சந்தைகளிடமிருந்தான உறுதியான வெளிச்செல்லல் குறித்தான கேள்வி போன்றன ஆதிக்கம் செலுத்தின.

2.3. 2014 முதல் 2018 வரையான சுற்றுலா வருகை உரு - 2.2



2018 ஆம் ஆண்டுக் காலத்தின் போது இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2,333.796 ஆகும். 2017 இல் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையாகிய 2,116,407 எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீத அதிகரிப்பாகும்.

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.4. 2017 முதல் 2018 வரையான அந்நியச் செலாவணி ஈட்டுகை (ஐ.அ.டொ. மில்) உரு - 2.3



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

இவ் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து மொத்தமாக ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணி ஐ.அ.டொ. 4380.60 மில்லியன்களாகும். முன்னைய ஆண்டில் இப்பெறுமதி ஐ.அ.டொ. 3924.90 மில்லியன்களாகும் என்பதோடு, இது 11.6 சதவீத அதிகரிப்பாகும்.

2.5. 2017 இல் முக்கிய பத்து சந்தைகள் உரு 2.4



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

இந்தியா எமது நாட்டிற்கான முன்னணி சுற்றுலா உற்பத்தியாளராக தொடர்ந்தும் விளங்குவதாக பத்து முன்னணி மூலச் சந்தைகள் குறித்தான பகுப்பாய்வு ஒன்று சுட்டிக்காட்டுகிறது. இந்த வரிசையில் சீனா இரண்டாவது நிலையிலுள்ளதோடு 2018 இல் இதன் பங்களிப்பு 11.4 சதவீதமாகும். இதனை அடுத்து நாட்டிற்கான பாரிய சந்தைகளாக ஐக்கிய இராச்சியம் மூன்றாம் நிலையிலும், ஜேர்மன் மற்றும் அவுஸ்திரேலியா முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் நிலையிலும் 2018 ஆம் ஆண்டில் திகழ்கின்றன. மேலும் அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் 2018/17 ஆண்டுகளில் உயர் சதவீத மாற்றங்களை பதிவுசெய்துள்ளதாக பாரிய மூலச் சந்தைகள் பற்றிய YoY பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகிறது. 2018 இல் நாட்டிற்கான மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறித்த பத்து முன்னணி சந்தைகளும் கிட்டத்தட்ட 68.2 சதவீத பங்களிப்பினை வழங்கியுள்ளன.

2.6. நிதி சார்ந்த செயலாற்றுகை

2.6.1. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட பணம் பற்றிய தகவல்

அட்டவணை- 2.1

வகை	2016 (ரூ.மில்)	2017 (ரூ.மில்)	2018 (ரூ.மில்)
சுற்றுலாப் பயணிகள் அறவீடு	2,355.44	2,378.83	2,824.97
சுற்றுலா அபிவிருத்தி அறவீடு	1,276.81	1,541.47	1,482.08
ஏனைய வருமானம்	11.90	12.34	11.08
மொத்தம்	**3,644.15**	**3,932.64**	**4,318.13**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.6.2. சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

அ. வருமானம்

அட்டவணை- 2.2

வகை	வரவுசெலவுத் திட்டம் - 2019 ரூ.மில்	வரவுசெலவுத் திட்டம் - 2018 ரூ.மில்	உண்மையானது ரூ.மில்
சுற்றுலாப் பயணிகள் அறவீடு	2,847.83	2,766.31	2,824.97
சுற்றுலா அபிவிருத்தி அறவீடு	1,785.36	1,496.29	1,482.08
மொத்த வருமானம்	**4,633.19**	**4,262.60**	**4,307.05**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

ஆ. 2018.01.01 முதல் 2018.12.31 ஆம் திகதி வரையான சுற்றுலாப் பயணிகள் அறவீடு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அறவீடு தொடர்பிலான பணச்செலவு

அட்டவணை- 2.3

வகை	மொத்தம்	SLTDA	SLTPB	SLITHM	SLCB
பணச் செலவு	100	14	70	12	4
சுற்றுலா அபிவிருத்தி அறவீடு (ரூ.மில்)	1,516.30	212.28	1,061.41	181.96	60.65
சுற்றுலாப் பயணிகள் அறவீடு (ரூ.மில்)	2,714.69	380.06	1,900.28	325.76	108.59
மொத்தம் (ரூ.மில்)	**4,230.99**	**592.34**	**2,961.69**	**507.72**	**169.24**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.7. சாதனைகள்

சுற்றுலா தொடர்பான தரப்பண்பு மற்றும் அளவு சார்ந்த தரவு குறித்தான பூரணத்துவம் மிக்க பிரசுரிப்புகள் ஆராய்ச்சி மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவினால் ஒரு கிரம அடிப்படையில் பிரசுரிக்கப்படுகின்றன. இது சுற்றுலாப் பயணிகளின் வருகைகள், அந்நியச் செலாவணி ஈட்டுகை, தொழில்வாய்ப்பு உருவாக்கம், ஹோட்டல் தங்குகை வீதம், பயண முறை மற்றும் நடத்தை, கவர்ச்சி மிக்க இடங்கள், உபயோகிக்கப்படுகின்ற வசதிகள் மற்றும் சேவைகள், சுற்றுலாப் பயணிகளின் செலவினம், சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகள், சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடம் பற்றிய முதலீடுகள், பயணம் செய்யும் தடவைகள் மற்றும் இருக்கை எண்ணிக்கை பற்றிய விபரங்கள் போன்ற விடயங்களின் அடிப்படையில் இலங்கைச் சுற்றுலாவின் செயலாற்றுகையினைச் சுட்டிக்காட்டக்கூடியதாக விளங்குகின்ற இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்தான மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை பற்றிய அறிக்கை, துறை பற்றிய காலாண்டு அறிக்கை, சுற்றுலாத் துறை பற்றிய அறிக்கைகள், வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை மற்றும் ஆய்வு அறிக்கை போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

சுற்றுலாத் துறைக்கான தேசிய முதலீடுகளுக்கான ஒரு அலகாக 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் முதலீட்டாளர் உறவுகள் அலகானது சுற்றுலாத் துறையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான மையப்படுத்தப்பட்ட வசதிகளை வழங்குகிறது. மேற்படி முதலீட்டாளர் உறவுகள் அலகின் வசதியளிப்புச் சேவைகள் இலங்கையில் சுற்றுலாக் கருத்திட்டங்களை விருத்தி செய்வதற்கான தகவல்களை வழங்குதல், சுற்றுலா உற்பத்தி அம்சங்களின் அவசியமான தரப் பண்பு சார்ந்த நியம தரத்துடன் இசைவுறுவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் போன்றன முதற்கொண்டு பல்வேறுபட்ட ஒழுங்குறுத்துகை அமைசுக்கள், திணைக்களங்கள், முகவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்கள் (மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், உபயோகச் சேவை வழங்குனர்கள்) போன்றோர்களிடம் இருந்தான சம்பந்தப்பட்ட பல்வேறு அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான வழிகாட்டல்களை வழங்குகின்றது. பின்வரும் நோக்கங்களுக்காக முதலீட்டாளர்கள் மீதான சுமையினைக் குறைப்பதே முதலீட்டாளர் உறவுகள் அலகின் இறுதியான குறிக்கோளாகும்:

i) சுற்றுலாக் கருத்திட்டங்களின் அங்கீகாரச் செயன்முறைக்கு வசதியளித்தல்,

ii) நாட்டில் சுற்றுலா முதலீடுகளை அமுல்படுத்துவதற்கு எடுக்கும் காலத்தினைக் குறைத்தல்.

முதலீட்டாளர் உறவுகள் அலகினை மீள வடிவமைக்கும் செயன்முறையானது 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு, இது அனேக எளிமைப்படுத்தப்பட்ட “முதலீட்டு அங்கீகாரச் செயன்முறை” ஒன்றை அறிமுகம் செய்வதன் ஊடாக மேற்படி முதலீட்டாளர் உறவுகள் அலகின் செயலாற்றுகையினை மேம்படுத்தும் இலக்கோடு மேற்கொள்ளப்பட்டது. USAID இன் கருத்திட்டமாகிய இலங்கையில் முதலீட்டினைத் துரிதப்படுத்துவதற்கு ஆதரவளித்தல் எனும் எண்ணக்கருவானது மேற்படி முதலீட்டாளர் உறவுகள் அலகின் முதலீட்டு அங்கீகாரச் செயன்முறையினை மீள வடிவமைப்பதற்கு உதவும் வகையில் அமைந்திருந்தது. மேற்படி முன்னெடுப்பானது 2018 இல் வெற்றிகரமான முறையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதோடு, மேற்படி அங்கீகாரங்களுக்கும் தேவையான ஆவணங்களைக் குறைத்தல் மற்றும் ஒவ்வொரு அங்கீகாரச் செயன்முறைக்குமான காலத்தினை நிர்ணயித்தல் போன்ற நடைமுறைகள் மூலம் குறித்த செயலாக்கதினை எளிமைப்படுத்துவதற்காக உடன்பாட்டினை இரு தரப்பினரும் எட்டுவதற்கான பல கலந்துரையாடல்களை அடுத்து, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தற்போதுள்ள அங்கீகாரச் செயன்முறையின் திட்டமிடுதல் நிறைவுபெற்றது. இதனை அடுத்து, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

முதலீட்டாளர் உறவுகள் அலகானது, மொத்தமாக ஐ.அ.டொ. 919.04 மில்லியன் பெறுமதியான புதிய கருத்திட்டங்களுக்கான மொத்தம் 141 எண்ணிக்கையுடைய விண்ணப்பங்கள் மீதான

செயலாக்க நடைமுறை ஊடாக தனியார்த் துறையினரின் சுற்றுலா முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு தனது தொடர்ச்சியான வசதியளிப்பினை 2018 இலும் வழங்கியது.

2018 ஆம் ஆண்டுக் காலத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தமான 141 எண்ணிக்கையுடைய கருத்திட்டங்களிலும் இருபது (20) கருத்திட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டது. முதலீட்டாளர் உறவுகள் அலகினால் அடைந்து கொள்ளப்பட்ட புள்ளிவிபரம் சார்ந்த முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளதோடு உருவிலும் வழங்கப்படுகிறது.

அட்டவணை- **2.4**

	விபரம்	**கருத்திட்டங்களின் எண்ணிக்கை**	**அறைகள்**	**முதலீடு (ஐ.அ.டொ) (மில்)**	**மதிப்பிடப்பட்ட முதலீடு (ரூ. மில்)**
அ	பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	141	4051	919.04	168,184.32
ஆ	மேற்பார்வை செய்யப்பட்டவை	86	3104	815.172	149,176.48
இ	வரிசையிலுள்ள கருத்திட்டங்கள் - பொது செயலாக்கம்	114	3171	840.14	153,745.62
ஈ	வரிசையிலுள்ள கருத்திட்டங்கள் - சுற்றாடல் சான்றுச் செயன்முறை	07	588	77.73	14,244.59
உ	பூர்வாங்க சான்றுகள் வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	107	3896	913.334	162,140.12
ஊ	* இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டவை	20	292	17.17	3,142.11

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

பெறப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய பற்றிய புவியியல் சார்ந்த பகுப்பாய்வு



இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட கருத்திட்டங்கள் புவியியல் சார்ந்த பகுப்பாய்வு



2.7.1 2010 செப்டம்பர் முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முதலீட்டாளர் உறவுகள் அலகினால் செயலாக்கம் செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய ஒட்டுமொத்த முன்னேற்றம்.

அட்டவணை - 2.5

		2010 முதல் 2018 டிசம்பர் வரையான மொத்த கருத்திட்டம்	அறைகள்	முதலீடு (ஐ.அ.டொ) (மில்)	மதிப்பிடப்பட்ட முதலீடு (ரூ.மில்)
அ	பெறப்பட்ட மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை	780	39580	7037.06	1,287,781.98
ஆ	மேற்பார்வை செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	593	33140	6074.35	1,111,606.05
இ	இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட கருத்திட்டங்கள்	350	18760	2999.62	548,930.46
ஈ	மறுக்கப்பட்ட அல்லது பிடித்து வைக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	103	6815	962.717	176,177.21
உ	வரிசையிலுள்ள கருத்திட்டங்கள் - பொது செயலாக்கம்	247	9383	1847.68	338,125.44
ஊ	வரிசையிலுள்ள கருத்திட்டங்கள் - சுற்றாடல் சான்றுச் செயன்முறை (EIA/IEE)	72	5332	1281.71	234,552.93
எ	மேற்பார்வை செய்யப்படவுள்ளவை	08	275	32.72	5,987.76
ஏ	மேற்பார்வை அவசியப்படாதவை	179	6339	906.68	165,922.44

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.7.2 அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் அமுல்படுத்துகை நிலைப்பாடு

அட்டவணை - 2.6

நிர்மாணிப்பு நிலை	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	அறைகளின் எண்ணிக்கை	முதலீடு ஐ.அ.டொ. மில்.	சதவீதம்
இடம்பெற்று வரும் நிர்மாணிப்பு	103	6815	962.717	29
இன்னும் ஆரம்பிக்கப் படாதவை	54	2042	237.523	15
தொழிற்பாட்டில் உள்ளவை	193	9903	1754.51	55
மொத்தம்	350	18760	2954.75	100%

2018.12.31 இலுள்ளவாறு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டவை பற்றிய நிர்மாணிப்பு நிலைமை



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.7.3. இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் - மாவட்ட ரீதியான வகைப்பாடு

அட்டவணை- 2.7

மாவட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	அறைகள்	சதவீதம்
அம்பாறை	7	95	0.51
அனுராதபுரம்	4	111	0.59
மட்டக்களப்பு	16	439	2.34
பதுளை	10	300	1.60
கொழும்பு	44	5357	28.56
காலி	61	3177	16.93
கம்பஹா	23	1245	6.64
அம்பாந்தோட்டை	31	1610	8.58
யாழ்ப்பாணம்	10	315	1.68
களுத்துறை	26	1650	8.80
கண்டி	16	559	2.98
கேகாலை	2	60	0.32
குருணாகல்	1	16	0.09
மாத்தளை	19	677	3.61
மாத்தறை	25	897	4.78
நுவரெலியா	9	714	3.81
புத்தளம்	15	685	3.65
திருகோணமலை	21	590	3.14
மொணராகலை	2	42	0.22
மன்னார்	1	52	0.28
பொலன்னறுவை	2	54	0.29
இரத்தினபுரி	3	66	0.35
வவுனியா	2	49	0.26
	350	18760	100.00

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.7.4. பெறப்பட்ட கருத்திட்டங்கள் இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட கருத்திட்டங்கள் பற்றி ஒரே பார்வையில் 2010 செப்டம்பர் - 2018 டிசம்பர்

உரு- 2.5



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2.7.8 விண்ணப்பங்கள் மீளக் கருதப்பட்டவை மற்றும் இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டவை

அட்டவணை- 2.8

ஆண்டு	மொத்தமாகப் பெறப்பட்ட கருத்திட்டங்கள்	இறுதி அங்கீகாரம் பெறப்பட்டவை
2010	54	3
2011	155*	45*
2012	72	56
2013	60	37
2014	68	42
2015	59	37
2016	76	41
2017	95	45
2018	141	44

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

* முதலீட்டாளர் உறவுகள் அலகு தாபிக்கப்படுவதற்கு முன்னர் அபிவிருத்திப் பிரிவினால் கையாளப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்கள் யாவும் மொத்தக் கருத்திட்ட விபரப்பட்டியலில் 2011 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன.

2.8. உல்லாச ஓய்வக முகாமைத்துவம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது 04 வர்த்தக ஓய்வகங்களையும், 02 வர்த்த நோக்கமற்ற ஓய்வகங்களையும் செயற்படுத்தி முகாமை செய்து வருகின்ற அதேவேளை, 37 ஓய்வக இல்லங்களுக்கான முகாமைத்துவத்தினை தனியார் துறையைச் சேர்ந்த நபர்களுக்கு குத்தகைக்கும் விட்டுள்ளது.

நுவரெலியா, பண்டாரவளை, கதிர்காமம் மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள தேசிய விடுமுறை ஓய்வகங்கள் நான்கும் வர்த்தக ஓய்வகங்களாகும். உள்நாட்டு சுற்றுலாப் பயணிக்கான தங்குமிட வசதிகள் குறைந்த கட்டணத்தில் இங்கு வழங்கப்படுகின்றன. மேற்படி ஓய்வகங்களில் பொதுவான பராமரிப்பினை மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள் போன்ற பணிகளுக்கு குறிப்பிடத்தக்களவு பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டுக் காலத்தில் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் படிப்படியான முன்னேற்றமும் இலாபங்களும் அவதானிக்கப்பட்டன. கழிவு நீர் சுத்திகரிப்பு, அறைகளை புதுப்பித்தல் மற்றும் துவைப்பான்கள், உலர்த்திகள், பிடவைகள், கரண்டி போன்ற வெட்டிகள் மற்றும் திரைச் சீலைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தல் போன்ற வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுரத்தில் புதிய தங்குமிட வசதிகளை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சுலங்கா கட்டடம் மற்றும் கடைத் தெருக்கள் போன்றனவும் புத்தாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. பாசிக்குடாவில் தேசிய விடுமுறை ஓய்வகங்களுக்கான ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான 14 துண்டுக் காணிகள் தனியார்த் துறையினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன. மேற்படி 14 காணித் துண்டுகளிலும் 12 காணித் துண்டுகளில் ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டு அவை இயங்கி வருகின்றன. மின்சாரம், நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறிமுறை போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், பாசிக்குடாவில் தேசிய விடுமுறை ஓய்வகங்களுக்கான ஹோட்டல்களின் சுமுகமான இயக்கத்திற்கு வழியமைக்கும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டன. மேற்படி ஹோட்டல்களின் இயக்கத்தினையடுத்து, கிழக்கு மாகாணத்தின் கடற்கரைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் சமூகத்தின் நேரடியான மற்றும் நேரடியற்ற அனுகூலங்கள் அதிகரித்துள்ளன.

2.9. ஓய்வக அபிவிருத்தி

கல்பிட்டி ஓய்வகம்	கல்பிட்டிப் பிரதேசத்தில் “சமுத்திரம் சார்ந்த இலங்கைத் தீவின் ஓய்வகம்” என்ற தொனிப்பொருளில் இலங்கையில் ஒரு புதிய சுற்றுலா உற்பத்தி அம்சத்திற்குரிய இலக்கினைக் கொண்டு, ஒரு ஒருங்கிணைந்த சுற்றுலா ஓய்வகத்தினைக் கட்டியெழுப்பும் நோக்கிலான இவ் எண்ணக்கருவானது உண்மையிலேயே 2014 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டதாகும். இருப்பினும், கல்பிட்டி சுற்றுலா உற்பத்தி அம்சங்களின் அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந்த நிலையிலுள்ளன. இதற்கு பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இலகுவான அணுகல் பாதைகள் போன்றன இன்மையே காரணம் என்பது சாத்தியம் மிக்க முதலீட்டாளர்களின் ஒரு பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. தற்பொழுது, இரண்டு பிரேரணைகள் நிலுவையில் கணப்படுவதோடு, 2018 இல் சமூகத்தின் ஒரு சாதகமான பதிலளிப்பு பெறப்பட்டுள்ளதோடு, இது பற்றி எழுத்து மூலம் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது.
குச்சவெளி ஓய்வகம்	குச்சவெளி தொடர்பான திட்டமும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையிலுள்ளது. ஒட்டுமொத்தமான முன் குத்தகைக் கொடுப்பனவு உயர்வாக உள்ளமை சாத்தியம் மிக்க முதலீட்டாளர்களின் ஒரு பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. இருப்பினும், ஒரு எதிர்வினையாக, இவ்விடத்திலுள்ள தனியான சுற்றுலா ஓய்வக இயக்குனரான, உகா எஸ்கெப்ஸ் மெனேஜ்மென்ட் (பிறை) லிமிடட்டினால் இயக்கப்படுகின்ற ஜங்கிள் பீச் றிசோட் ஓய்வகமானது ஒரு முழு நிறைவுமிக்க வசதிகளை வழங்கி வருவதோடு, இது 3 மாதங்களுக்கு முன்கூட்டியே முன்பதிவுகள் யாவும் நிறைவுபெறுகின்றன. தென் கொரிய நாட்டினைச் சேர்ந்த ஆலோசனைக் குழு ஒன்று, சாத்தியம் மிக்க மீன்பிடிக் கிராமத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்றவற்றை இனங்காணும் நோக்கில் குச்சவெளி மற்றும் கடல் நீரேரிப் பிரதேசங்கக்கு விஜயம் செய்ததோடு, இதற்காக நிதியிடுவதற்கான தமது பூர்வாங்க ஆர்வத்தினை தென் கொரியா அரசாங்கம் தெரிவித்தும் உள்ளது.
யால வன சீவராசிகள் ஓய்வகம்	யால வன சீவராசிகள் ஓய்வகம் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்திச் செயற்பாடுகளிலான முன்னேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. ஓய்வகத்தின் வடக்குப் பகுதிக்கான பொதுவான அணுகல் பாதை பூர்த்தி செய்யப்பட்டதோடு, ஓய்வகத்தின் வடக்குப் பகுதிக்கான உயர் மின்னழுத்தம் உடைய புதிய மின்சார விநியோகமும் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. ஓய்வகத்திற்கான பிரதான திட்டம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டதோடு, அது பற்றிய இறுதி அறிக்கை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமும் யால வன சீவராசிகள் ஓய்வகத்தின் பங்கீடுபாட்டாளர்களிடமும், அவர்களது கருத்தினைத் தெரிவிப்பதற்காக கையளிக்கப்படுகிறது. மேற்படி இறுதியான பாரிய திட்ட அறிக்கை மேற்படி கருத்துரைகளையும் உள்ளடக்கி சமர்ப்பிக்கப்படவுள்ளது. அனைத்துப் பொதுவான வசதிகளின் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு மற்றும் பெறுமதி சேர்ப்பு போன்றன, மேற்படி பாரிய திட்டத்தின் பரிந்துரைகளுக்கு இசைவாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.
தெட்டுவ நீரேரி ஓய்வகம்	இக் கருத்திட்டமானது அதன் ஆரம்ப கட்டத்தில் தற்பொழுது காணப்படுவதோடு, இதற்கான காணி சுவீகரிப்பு இடம்பெற்று வருகிறது. இதற்காக 1800 ஏக்கர்களைப் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்ட போதிலும் 1732.03 ஏக்கர்கள் பெறப்பட்டுள்ளன. இதற்கிணங்க, மேற்படி கவர்ச்சி மிக்க இப் பிரதேசத்தில் எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்காக தனியார் துறையினருக்கான முதலீட்டு வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

பின்வரும் காணிகள் சுற்றுலா அபிவிருத்திகளுக்காக இனங்காணப்பட்டு வருவதோடு, இதற்கான காணி சுவீகரிப்பு/ குறித்த செயலாக்கத்தினை முன்னெடுப்பதற்கான அங்கீகாரத்தினை சபை வழங்கியுள்ளது.

இனங்காணப்பட்ட காணி	**காணியின் விஸ்தீரணம் - ஏக்கர்களில் (அண்ணளவானது)**
அக்குறல்ல	493.00
பொகவந்தலாவை	316.00
வாழைச்சேனை	265.00
தெனியாய	350.00
கொஹிலவகுர	27.60
முல்லேரியாவ, வெலிவிட்ட (மாலபே அதிவேகப் பாதை வெளியேறுகை)	36.00

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

நிதி அமைச்சின் சுற்றுலா சார்ந்த வரவுசெலவுத் திட்ட முன்மொழிவினை அமுல்படுத்தும் நோக்கில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது இல்லத் தங்குமிட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக "பசுமைக் கடன் திட்டம்" இற்கான சுமார் 716 விண்ணப்பங்களை செயலாக்கம் செய்ததோடு, மேற்படி கடன் திட்டத்தின் கீழ் 264 இல்லத் தங்குமிடங்களுக்கு சிபாரிசு வழங்கப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சிபாரிசுக் கடிதத்தின் அடிப்படையில் வங்கி மூலம் கடன் வழங்கப்படவுள்ளது. இது தவிர, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது UNWTO இன் அங்கீகாரம் பெற்ற குறியீட்டுப் பலகைகளை நாடளாவிய ரீதியில் நிறுவுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தது. மேலும், நாட்டில் குறைவாக அறியப்பட்ட சுற்றுலா கவர்ச்சி மிக்க அம்சங்கள் பற்றிய மாகாண ரீதியான தகவல்களை வழங்கும் நோக்கில் அனைத்து ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்தவர்களுக்கும் அத்தகைய அம்சங்கள் பற்றிய அவர்களது திறனை மேம்படுத்தும் வகையிலான ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாட்டிற்குள் வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கான பரந்தளவு பல்வகைமையுடன் கூடிய புதிய சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்களை அறிமுகப்படுத்துவதே மேற்படி முன்னெடுப்புக்களின் குறிக்கோள் ஆகும்.

2.10. சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்

சுற்றுலாத் துறையானது தேசிய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் பகிரப்பட்ட விடயம் ஒன்றாக விளங்குகின்றது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது, தேசத்தின் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரசபை என்ற வகையில், மாகாண சுற்றுலா உட்கட்டமைப்புகளுக்கு முனைப்புடன் நிதியளித்து வருவதோடு, 2015 ஜூலை மாதமளவில் வகுத்தமைக்கப்பட்ட உள்நாட்டு சுற்றுலா மற்றும் சமுதாய உறவுகள் பிரிவின் ஊடாக உள்நாட்டு சுற்றுலா சார்ந்த சேவை வழங்கல் மட்டங்களை அதிகரித்தும் வருகிறது. இத்தகைய முயற்சிகள் பொதுவாக பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தான குறிப்பிடத்தக்க நிதியுடன் நிறைவேற்றப்படுகின்றன. உள்நாட்டுச் சுற்றுலா மற்றும் சமுதாய உறவுகள் பிரிவினால் கையாளப்பட்ட பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

அமைவிடம்	கருத்திட்டம்
கஜுகம	முந்திரிகைப் பரப்பு விற்பனையாளர்களுக்கான வர்த்தக வண்டிகள் விநியோகம்
தலைமன்னார்	நவீன கடற்கரை அபிவிருத்தி
அம்பிட்டிகல	சூழலியல் சுற்றுலாக் கிராம அபிவிருத்தி
சண்டதென்ன	விவசாய சுற்றுலாப் பூங்கா
அனுராதபுரம்	துப்பரவேற்பாட்டு வசதிகள் அபிவிருத்தி
துன்ஹிந்த	உட்கட்டமைப்பு அபிவிருத்தி
எல்ல	ரவண எல்ல அபிவிருத்தி
அருகம்பே	குத்துக்கல் வீதி அபிவிருத்தி
திஸ்ஸமகாராம, அளுத்நுவர, கட்டபருவ, மதுரங்குளி	சௌகரிய மையங்கள்

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

மேற்படி விடயங்கள் தவிர, உள்நாட்டு சுற்றுலா மற்றும் சமுதாய உறவுகள் பிரிவினால் அனேக பல்வேறு செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. இவற்றுள் கஜுகமவில் முந்திரிகைப் பருப்பு விற்பனையாளருக்கு விற்பனை வண்டிகளை வழங்கியமை, சபாரி சாரதிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், கடற்கரை துப்பரவாக்க நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பெரஹர கொண்டாட்டங்களுக்கு நிதியளித்தல் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இவை தவிர, ருக் ருக் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு, பெந்தோட்டை, தெனியாய, எல்ல, நீர்கொழும்பு, திஸ்ஸமகாராம போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2000 முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இக் கருத்திட்டமானது திட்டமிட்ட அணுகுமுறை ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள சுமார் 10,000 முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற இலக்குகளைக் கொண்டதாகும். கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவியுடன் கரையோரப் பிரதேசத்தில் 25 உயிர் காப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற் கட்டமாக பெந்தொட்டை, ஹிக்கடுவை மற்றும் மிரிஸ்ஸ போன்ற இடங்களிலுள்ள உயிர் காப்பு நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், இனங்காணப்பட்ட சுற்றுலா இலக்கு இடங்களில் 25 சுற்றுலா பொலிஸ் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.

ருக் ருக் நிகழ்ச்சித்திட்டம்

உயிர் காப்பு நிலையம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றுமொரு முதன்மைத் தொழிற்பாடாக, தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய சுற்றுலா சார்ந்த சேவைகளை வழங்குகின்ற

நிறுவனங்களைப் பதிவு செய்தல், அவற்றை ஒழுங்குபடுத்தல் மற்றும் அவற்றின் நியம தரத்தினை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்கள் காணப்படுகின்றன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள சுற்றுலா நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

2.10.1. தங்குமிட வசதி வழங்கும் துறை

அட்டவணை2.9

வகை	01.01.2018 -31.12.2018		31.12.2018 வரை	
	அலகுகள்	அறைகள்	அலகுகள்	அறைகள்
வகைப்படுத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல்கள்	8	1,213	134	12,943
ஐந்து நட்சத்திரம்	2	733	23	5,150
நான்கு நட்சத்திரம்	4	410	20	2,169
மூன்று நட்சத்திரம்	-	-	23	2,364
இரண்டு நட்சத்திரம்	2	70	33	1,612
ஒரு நட்சத்திரம்	-	-	35	1,648
வகைப்படுத்தப்படாத சுற்றுலா ஹோட்டல்கள்	17	899	223	9,737
புட்டிக் ஹோட்டல்	5	120	30	618
பூட்டிக் வில்லா	3	27	36	239
விருந்தினர் இல்லம்	46	590	782	8,629
இல்லத் தங்குமிட அலகுகள்	81	255	445	1,352
பங்களாக்கள்	52	190	390	1,613
பாரம்பரிய பங்களாக்கள்	-	-	4	19
பாரம்பரிய இல்லங்கள்	1	1	3	9
வாடகைத் தொடர்மாடிகள்	8	46	68	219
வாடகை இல்லங்கள்	-	-	6	19
மொத்தம்	**221**	**3,341**	**2,121**	**35,397**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

விசேட சுற்றுலாச் சேவைகள் அட்டவணை- 2.10

வகை	01.01.2018 - 31.12.2018	31.12.2018 வரை
தேசிய சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்கள்	24	1,425
சாரதி சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்கள்	41	1,185
பிரதேச சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்கள்	01	537
தளச் சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்கள்	-	92
Total	**66**	**3,239**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

வகை	01.01.2018 - 31.12.2018	31.12.2018 வரை
உணவகம்	26	439
பயண முகவர்	69	901
ஆரோக்கியக் குளியல் மற்றும் ஆரோக்கிய மையம்	22	80
சுற்றுலாக் கடைகள்	5	78
நீர் விளையாட்டு நிலையம்	2	27
நறுமணப் பூங்கா	3	37
மொத்தம்	**127**	**1,562**

வழிகாட்டல் சேவைகள்

2018 ஆம் ஆண்டுக்கான மதுபானம் பரிந்துரைக்கப்பட்ட விநியோக நிலையம்

வகைப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள்	- 101
வகைப்படுத்தப்படாத ஹோட்டல்கள்	- 132
புட்டிக் ஹோட்டல்கள்	- 17
புட்டிக் வில்லாக்கள்	- 21
விருந்தினர் இல்லங்கள்	- 461
உணவகங்கள்	- 285
மெத்தம்	**-1,017**

2016 ஏப்ரல் 20 ஆம் திகதிய 1693/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப, சுற்றுலா ஹோட்டல்களை வகைப்படுத்தல் தொடர்பில், பதிவு செய்யப்பட்ட அனைத்து சுற்றுலா ஹோட்டல்களையும் வகைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோட்டல்களை வகைப்படுத்தும் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களாக செயற்பட்டு வருவதோடு, இதற்கான உத்தியோகபூர்வ சின்னங்கள் இருபத்தி ஏழு ஹோட்டல்களுக்கு கௌரவ சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களினால் விழா ஒன்றின் போது வழங்கி வைக்கபட்டது. வகைப்படுத்தல் பற்றிய முன்னேற்றம் குறித்தான தகவல் பின்வருமாறு:

அட்டவணை- 2.11

நிலைமை	**எண்ணிக்கை**
மேற்பார்வைகளின் எண்ணிக்கை	**118**
5 நட்சத்திரம்	10
4 நட்சத்திரம்	05
3 நட்சத்திரம்	10
2 நட்சத்திரம்	11
1 நட்சத்திரம்	09
சரி செய்யப்பட வேண்டிய குறைபாடுகள்	66
தரம் குறைக்கப்பட்டவை	07

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

இவை தவிர, கண்டி, சிகிரியா மற்றும் தம்புள்ள போன்ற இடங்களில் உரிமம் பெற்றுக்கொள்ளாத வழிகாட்டல்கள் குறித்தான எழுந்தமான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டுக் காலத்தில் சுமார் 411 வீசா பரிந்துரைகள் வழங்கப்பட்டன. விழிப்புணர்வு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் போன்றனவும் காலி, பொலன்னறுவை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மிரிஸ்ஸ, எல்ல, தெனியாய, சிகிரிய, தம்புள்ள, கிதுள்கல, திக்வெல, தங்காலை மற்றும் பாசிக்குடா போன்ற பிரதேசங்களில் நடாத்தப்பட்டன. மேலும், கொழும்பு மற்றும் தெஹிவளை/ கல்கிஸ்ஸ மாநகர சபையின் அதிகாரப் பிரதேசங்களினுள் காணப்படுகின்ற சுற்றுலா ஹோட்டல்கள் குறைந்தபட்ட அறை வீதங்களைப் பேணுகின்றனவா என்பதை அவதானிக்கும் வகையில்

கஜ்மா அன் கோ (பட்டயக் கணக்காய்வாளர்) எனும் நிறுவனத்தினால் ஒரு கணக்காய்வு நடத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தினை ஊக்குவித்து அவற்றை மேம்படுத்தும் நோக்கிலும் ஒரு சுற்றுலா இலக்கு நாடாக இலங்கையை மிளிரச் செய்யும் நோக்கிலும், 2018 ஆம் ஆண்டில் சுற்றுலா விருது நிகழ்வு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டதோடு, இதில் 36 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, சுமார் 400 பங்கேற்பாளர்கள் மத்தியில் இடம்பெற்ற விழா ஒன்றின் போது அவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

இதன் போது, 26 ஹோட்டல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு, மேற்படி அனைத்து ஹோட்டல்களும், 2009 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 1622/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2011 மார்ச்சு 17 ஆம் திகதிய 1697/24 திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றில் வேண்டப்பட்ட தேவைப்பாடுகளுடன் இசைவுறவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. கல்பிட்டியில் இடம்பெற்ற நடமாறும் சேவையானது வடக்கு கிழக்கில் இடம்பெற்ற 6 நடமாடும் சேவைகளில் இறுதியாக இடம்பெற்றதாகும் என்பதோடு, இதற்கு சர்வதேச நிதிக் கம்பனி நிதியளித்தது. மேலும், அனுராதபுரம், சிகிரியா மற்றும் மிரிஸ்ஸ ஆகிய இடங்களிலும் காலப் போக்கில் 03 நடமாடும் சேவைகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அனுராதபுரம், மிரிஸ்ஸ மற்றும் நீர்கொழும்பு போன்ற பாரிய சுற்றுலா நகரங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்பார்வை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ் ஆண்டின் முதல் அரைவாசிக் காலப்பகுதியின் போது 160 புதிய சுற்றுலாப் பயணி நிறுவனங்கள் உள்ளீர்க்கப்பட்டன. சுற்றுலா நேயம் மிக்க உணவுக் கடைகளை நிறுவும் திட்டமானது சுகாதாரமும் தரமும் வாய்ந்த உணவுக் கடைகளாக அவற்றை அங்கீகரிப்பதற்கான நடைமுறை அறிமுகம்செய்யப்பட்டதோடு, கொழும்பு, காலி மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் 110 உணவுக் கடைகள் இதன் கீழ் பதிவுசெய்யப்பட்டன.

2.11. ஏனைய இயக்கப்பாடு பற்றிய விபரங்கள்

எமது ஊழியர்களின் கைமுறை சார்ந்த பணிச் சுமையினைக் குறைக்கும் நோக்கில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது இயங்கலை முறை சார்ந்த பயண விசாரணை முகாமைத்துவ முறைமை ஒன்றினையும் மேலும் பயணி பின்னூட்டல் முறைமை ஒன்றையும் ஆரம்பித்து வைத்தது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவானது, செலவுகளைக் குறைத்து ஒட்டுமொத்த உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு, வளங்களைப் பகிர்வதற்கான பல்வேறு கருத்திட்டங்களை அமுல்படுத்தியது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது G suite இற்கு மின்னஞ்சல் இயங்கு தளத்தினை இடம்பெயர்த்தல், சபை அலுவல்கள் முகாமைத்துவ முறைமை மற்றும்

கருத்திட்ட முகாமைத்துவ மென்பொருள் தீர்வு போன்றன அவற்றுள் சிலவாகும். இவை தவிர, கூகுள் நிறுவனத்துடனான டிஜிடல் முறையிலான சந்தைப்படுத்தல் பிரச்சாரமானது மற்றுமொரு பாரிய கருத்திட்டமாக விளங்குகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல்களை வழங்குவதற்கான உத்தியோபூர்வ கையடக்கத் தொலைபேசி பிரயோகக் கருத்திட்டங்களின் வரிசையில், தீர்மான ஆதரவு முறைமை, நிறுவன வள முகாமைத்துவ முறைமை, முதலீட்டு விடய முகாமைத்துவ முறைமை மற்றும் தரவு இல்லம் போன்றன முக்கியமான கருத்திட்டங்களாக விளங்குகின்றன. இவை நிறுவனத்தின் வினைத்திறன், வாடிக்கையாளர் அனுபவ மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல்/ஊக்குவிப்புகள், எமது பங்கீடுபாட்டாளர்களுக்கான சேவைகளை வழங்குதல் போன்றன தொடர்பிலான தொழில்நுட்பங்களை பெருமளவு உள்ளடக்கியதாகும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது சிறந்த நிதி சார்ந்த மற்றும் இயக்கம் சார்ந்த நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுவதனை உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் உறுதி செய்கிறது. சட்ட திணைக்களமானது சட்டத்துறை தலைமை அதிபதித் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் தேவையான பொழுது கோப்பு பற்றிய நடைமுறை போன்றவற்றின் ஒத்துழைப்போடு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நாளாந்த தொழிற்பாடுகளுக்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இவை தவிர, சபை ஒன்றுகூடல்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடல்கள் மற்றும் சபை செயலகம் என்ற வகையிலான தொழிற்பாடுகள் போன்றவற்றையும் இது நடத்தி வருகின்றது.

மனித வளங்கள் மற்றும் ஆதன வளாக முகாமைத்துவப் பிரிவானது ஆட்சேர்ப்பு, முகாமைத்துவம் மற்றும் நிறுவனத்திலுள்ள நபர்களுக்கு பணிப்புரை விடுத்தல் அத்துடன் ஆதன வளாகத்தின் முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. புதிதாக 35 ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற அதேவேளை, 110 எண்ணிக்கையுடைய அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்படி பயிற்சிகளுக்கு உறப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 5.5 மில்லியன் ஆகும்.

2.12. விசேட நிகழ்வுகளும் கருத்திட்டங்களும்

2.12.1. உலக சுற்றுலா தினம் (WTD) 2018

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது, "சுற்றுலா மற்றும் டிஜிடல் நிலைமாற்றம்" எனும் தொனிப்பொருளில் இவ் ஆண்டின் உலக சுற்றுலா தினத்தினை யாழ்ப்பாண நகரில் 2018 செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலத்தில் கொண்டாடியது. இத்தகைய ஒரு தேசிய விழாவானது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமை இதுவே முதற் தடவையாகும். உலக சுற்றுலா தினத்தின் கீழான செயற்பாடுகள் பின்வருமாறு:

- செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான கண்காட்சி: ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்த சுற்றுலா நிறுவனங்கள், ஹோட்டல்கள், மற்றும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் ஆகியோர் மேற்படி கண்காட்சியில் கலந்துகொண்டனர். இது உணவு நிலையங்கள், ஆடை நிலையங்கள், நினைவுப்பொருள் நிலையங்கள், கைவினைப்பொருள் நிலையங்கள் போன்றவற்றைக் கொண்டு சிறப்பிக்கப்பட்டது.

- 2018 செப்டம்பர் 27 ஆம் திகதிய உலக சுற்றுலா தினத்தின் உத்தியோகபூர்வ விழா: சுற்றுலாத் துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள், பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்துடன் ஊடகங்கள் போன்றனவும் மேற்படி விழாவில் கலந்துகொண்டனர்.

- செப்டம்பர் 27 ஆம் திகதிய குழு கலந்துரையாடல்: இவ் ஆண்டுக்கான தொனிப்பொருளாகிய “சுற்றுலா மற்றும் டிஜிடல் நிலைமாற்றம்” எனும் தொனிப்பொருளில் ஒரு குழுக் கலந்துரையாடலானது செப்டம்பர் 27 ஆம் திகதி இடம்பெற்றது.

- செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான கலாசார நிகழ்வுக் கண்காட்சி: இதன் போது யாழ்ப்பாணத்திற்குரிய தனித்துவம் வாய்ந்த கலாசார விடயங்களைக் காட்சிப்படுத்தும் வகையிலான கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. உலக சுற்றுலா தினம் 2018 பற்றிய தேசிய கொண்டாட்டம் 2018,

- மேற்படி விழாவானது வடக்குப் பிராந்தியத்திற்கான சுற்றுலா மற்றும் பயணத் துறையின் பிரபல்யத்தன்மையினை பரந்தளவில் வழங்கியது.
- வடக்கு மாகாணத்திலுள்ள சுற்றுலாத் துறை சார்ந்த சேவை வழங்குனர்களை வெளிக்கொணர்வதற்கு வழியமைத்தது.
- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்கு மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு உதவியது.
- யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய சேவை வழங்குனர்களை சுற்றுலாத் துறையுடன் இணைத்துக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது.

2.12.2. தேசிய நீடுறுதிமிக்க சுற்றுலாச் சான்றிதழ் திட்டம் (NSTCS)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையானது UNDP இன் உயிர்ப் பல்வகைமை நிதி முன்னெடுப்பு (BIOFIN) அமைப்புடன் இணைந்து “தேசிய நீடுறுதிமிக்க சுற்றுலாச் சான்றிதழ் திட்டம்” எனும் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. மேற்படி தேசிய நீடுறுதிமிக்க சுற்றுலாச் சான்றிதழ் திட்டமானது, இலங்கையின் சுற்றுலா வணிகத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகவும் போட்டித்தன்மை மிக்கதாகவும், ஒரு நீடுறுதிமிக்க சுற்றுலா இலக்கு நாடாக இலங்கையை சாதகமான முறையிலும் கட்டியெழுப்புவதற்கானதொரு இன்றியமையாத முன்னெடுப்பாகத் திகழ்கின்றது. மேற்படி சான்றிதழ் திட்டமானது ஒரு மாதிரியைத் தெரிவு செய்வதன் ஊடாக தங்குமிட வசதிகளை வழங்கும் துறைக்கென முதலில் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, பின்னர் தங்குமிட வசதிகளை வழங்குகின்ற அனைவருக்கும் அடுத்த கட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டு இறுதியில் அனைத்து சுற்றுலா விநியோகஸ்த்தர்கள் மத்தியிலும் இத் திட்டம் கொண்டு செல்லப்படும்.

2.13 பிரதான சவால்கள்

- முதலீடுகள் குறித்தான விண்ணப்பங்களை செயலாக்கம் செய்வதில் சில முகவர்களுக்கு ஏற்படக் கூடிய தாமதங்கள்.
- அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கான காலம்
- பொருட் கொள்வனவு நடைமுறை பற்றிய காலம்
- மனித வளங்கள் குறித்தான குறைபாடுகள்
- பெரும்பாலான சுற்றுலா விருந்தினர் இல்லம் மற்றும் சுற்றுலா உணவகங்களில் தரம் மற்றும் நியமதரங்களைப் பேணுதல்.
- துரித கதியில் வளர்ந்து வரும் “இல்லத் தங்குடமிடம்” நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.

3.
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம

03. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

3.1. அறிமுகம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுப் பாராளுமன்றத்தின் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும். தற்போது இப் பணியகமானது கௌரவ அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்களின் தலைமையிலுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கிவருகிறது. இப் பணியகமானது இலங்கையை சுற்றுலாவுக்கும் சுற்றுலாப் பயணத்திற்குமானதொரு இலக்கு நாடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊக்குவிப்பதிலும் அதனை சந்தைப்படுத்துவதிலும் பிரதான வகிபாகத்தினை மேற்கொண்டு வருகிறது. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது துறை சார்ந்த விளம்பரப்படுத்தல்கள், பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்,DSR, சுற்றுலா வர்த்தகக் காட்சிகள் மற்றும் துறைசார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள், பாவனையாளர் ஊக்குவிப்புக்கள், இணையத் தொடர்பாடல்கள் போன்ற செயற்பாடுகளை நாட்டின் சுற்றுலா சார்ந்த இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கில் பிரதானமாக முன்னெடுத்து வருகிறது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது குறிப்பாக மேற்கு ஐரோப்பா (ஐக்கிய இராச்சியம், ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவீடன், இத்தாலி, டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஒஸ்ரியா, ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் நோர்வே), தென்னாசிய (இந்தியா), கிழக்காசியா (சீனா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், கொரியா, இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்னாம், பிலிப்பைன்ஸ்), மத்திய கிழக்கு (சவூதி அராபியா, ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம், இஸ்ரேல்,குவைத்), மேற்கு ஐரோப்பா (ரஷ்யா, செக் குடியரசு, உக்ரேன், போலாந்து), வடக்கு அமெரிக்கா (ஐக்கிய அமெரிக்க, கனடா) மற்றும் ஆஸ்திரலேசியா (அவுஸ்திரேலியா) போன்ற தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய நாடுகள் மத்தியில் வர்த்தக மற்றும் நுகர்வோர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கான மைய அவதானத்தினைக் கொண்டுள்ளது.

3.2. 2018ஆம் ஆண்டின் செயற்திட்டத்திற்கு எதிரான முன்னேற்றம்

3.2.1. நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் பற்றிய பௌதீக செயலாற்றுகை

3.2.1.1. முக்கிய சாதனைகள்

இலங்கைச் சுற்றுலாத் துறையானது 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தில் சுமார் 2,333,796 எண்ணிக்கையான உல்லாசப் பயணிகளைப் பெற்றுள்ளதோடு, இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீத அதிகரிப்புமாகும்.ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளிலிருந்தான பயணிகளின் வருகையானது தொடர்ந்தும் பிரதான இடம் வகிப்பதோடு, 2018 ஆகஸ்ட் மாதத்தில் இவர்களின் வருகை 47 சதவீதமாகும்.மொத்தமான உல்லாசப் பயண வருகையில் ஐரோப்பா 41 சதவீதமும், மத்திய கிழக்கு 6 சதவீதமும், அமெரிக்கா 5 சதவீதமும் மற்றும் ஆபிரிக்கா 0.5 சதவீதமும் பங்களிப்புச் செய்தது. இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் போன்ற நாடுகள் இலங்கையின் முதல் ஐந்து சர்வதேச சுற்றுலா வருமானச் சந்தைகளாகத் திகழ்கின்றன.

இலங்கை உலக வர்த்தக விருதுகள் நிகழ்வில் இடம்பெற்ற "ஆசியாவின் முன்னணி சாகச சுற்றுலா இலக்கு நாடு 2018" இல் வெற்றியீட்டியது. இலங்கையானது 2019 இன் முதற்தர இலக்கு நாடாக லோன்லி பிளானட்டினால் அங்கீகரிக்கப்பட்டது.

இலங்கையானது, 2018 இல் பயணம் செய்வதற்கான சிறந்ததொரு சுற்றுலா இலக்கு நாடாக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சுற்றுலா அமைப்பினால் பதிவுசெய்யப்பட்டு அதற்கான விருதும் வழங்கப்பட்டது.

- தேசிய பூகோள பயணி – 2018 இன் சிறந்த பட்டியல்
- சீன மக்கள் தின செய்திப் பத்திரிகை - இலங்கை பெண் பயணிகளுக்கான சர்வதேச பாதுகாப்பு மிக்க முதற்தர நாடாக தெரிவுசெய்யப்பட்டது.
- தேசிய பூகோளம் - சிறந்த வசந்தகால பயணங்கள் 2018 கிழக்குக் கரையோரம், இலங்கை

3.2.1.2. வழங்கல்கள்

அ) சந்தைப்படுத்தல் - வர்த்தகக் கண்காட்சி/ வீதிக் காட்சிகள்

- குறிப்பாக பின்வருவன உள்ளிட்ட 56 பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சிகளில் பங்குபற்றியமை. (வகன்டீபர்ஸ்-நெதர்லாந்து, பெரீன்-ஒஸ்ரியா, நோர்வேயர் சந்தை-நோர்வே,IITT பயணக் கண்காட்சி-இந்தியா, வெகன் கண்காட்சி-லக்ஸம்போர்க்,MATKA-பின்லாந்து,நியு யோக் ரைம்ஸ் பயணக் கண்காட்சி-ஐக்கிய அமெரிக்கா,FESPO-சுவிட்சர்லாந்து,SATTE-இந்தியா, பிரஸல்ஸ் கண்காட்சி-பெல்ஜியம்,IMTM-இஸ்ரேல்,ரூரிஸ்ட்-எஸ்டோனியா,BIT-மிலான், டானிஸ் பயணக் கண்காட்சி-டென்மார்க்,BIT-இத்தாலி,ஹொலிடேய் வேல்ட்-செக் குடியரசு,JTTX கண்காட்சி-சவூதி அராபியா,TITF-தாய்லாந்து,GITF-சீனா,ASTINDO-இந்தோனேசியா,ITB-ஜேர்மன்,MITT-ரஷ்யா,NATAS-சிங்கப்பூர்,UITT-உக்ரேன்,மெரீன் டிவிங் கண்காட்சி-ஜப்பான்,RTF-சவூதி அராபியா,ATM-ஐக்கிய அரபு இராச்சியம்,SWTF-சீனா,KOTFA-கொரியா,TTF-இந்தியா,IITM-இந்தியா,MATTA-மலேசியா,TTF-தாய்லாந்து, லெஷர்-ரஷ்யா,IFTM-பிரான்ஸ்,JATA-ஜப்பான்,ILTM-சீனா,CITE-சீனா,CITE-சீனா,ITE-அவுஸ்திரேலியா,WTM-ஐக்கிய இராச்சியம்,TTF-துருக்கி,TTG-இத்தாலி,TT வோர்ஷோ-போலாந்து.)

- பின்வரும் 28 வீதிக் கண்காட்சிகளில் பங்கேற்றமை: பாசிலோனா-ஸ்பெயின், குவாங்சு-சீனா, ஜித்தா-சவூதி அராபியா, றியாட்-சவூதி அராபியா, தமாம்-சவூதி அராபியா, ஷாஜா-ஐக்கிய அரபு இராச்சியம், அபுதாபி- ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய்-ஐக்கிய அரபு இராச்சியம்,வோர்ஷோ-போலாந்து, கிராக்கோவ்-போலாந்து, புடபெஸ்ட்-ஹங்கேரி, ஹங்சு-சீனா, விசாக்காபட்டினம்-இந்தியா, கோயம்புத்தூர்-இந்தியா, புனே-இந்தியா, சுரத்-இந்தியா, ராஜ்கொட்-இந்தியா, ரோக்யோ-ஜப்பான், சப்போரா-ஜப்பான், பெல்ஜியம்-புரசல்ஸ், சண்டிகார்-இந்தியா. சுற்றுலா இயக்குனர்களுடனான வணிக நேர் சந்திப்புகள் இலங்கை மற்றும் வெளிநாட்டுப் பயண முகவர்கள் அனைவருக்கும் சிறப்பான வியாபார அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கு வழியமைக்கக் கூடியதாக விளங்கியது.

- லண்டனிலுள்ள மிகச் சிறந்த 10 சுரங்கப்பாதை நிலையங்களில் விளம்பர நடவடிக்கைகள்- 40 தாள்களைக் கொண்ட 18 பெனல்கள். பிளாட்டினம் நிலையமானது லண்டன் நகரின் பிரதான மத்திய நிலையத்தில் அமைந்து காணப்பட்டது.

ஆ) பொதுமக்கள் உறவுகள் - விளம்பரப்படுத்தல், சர்வதேச பயணம் பற்றியவலைப்பதிவாளர்கள் மற்றும் சமூக ஊடகங்கள்

- CNNசர்வதேச ஊடகத்தில் விளம்பரம்

  CNN தொலைக்காட்சியில் 1541 சுற்றுலா இடங்களை மூன்று மாதங்களுக்கு விளம்பரப்படுத்தும் நடவடிக்கையானது ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க, ஆசிய, பசுபிக், தென்னாசியா போன்ற பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டதோடு, ஐக்கிய அமெரிக்காவின் 40 விமானநிலையங்களிலுள்ள திரைகளிலும் குறித்த விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இரண்டாவது வர்த்தக நடவடிக்கைகளும் சுமார் 800,000 பார்வையாளர்கள் முன் ஒளிபரப்புச் செய்யப்பட்டதோடு,கிரேட் பிக் கதை பற்றிய பொதுமக்கள் நிகழ்ச்சித்திட்டமும் காண்பிக்கப்பட்டது.



- பின்வரும் சர்வதேச அச்சு ஊடகங்களிலான விளம்பரப்படுத்தல்கள்: இந்தியா- லோன்லி பிளானட், ஜேர்மன்- சாதனை மற்றும் சுற்றுலா மற்றும் பயணம் மற்றும் பெறுமதி, ஐக்கிய இராச்சியம் - உணவு மற்றும் பயணச் சஞ்சிகை, எஸ்கபிஸம் சஞ்சிகை, அஸீ அன் டவுன், பெல்ஜயம்-குட்பாய் சஞ்சிகை, பிரான்ஸ்-டிசயா் டீ வொயாஜர்ஸ், கிரான்ட் றிபோடேர்ஸ், ஐக்கிய அரபு இராச்சியம்-கல்ப் நியுஸ் பேப்பர்ஸ், அவுஸ்திரேலியா-ஹொலிடேய் வித் கிட்ஸ், இத்தாலி-கைடாவியேஜ்.



- உள்நாட்டு சஞ்சிகைகளிலான விளம்பரப்படுத்தல்கள் - நவம்பர் மற்றும் டிசம்பர் மாத இதழ்களில் எக்ஸ்புளோர் சிறிலங்கா அன்ட் ரைம் அவுட் சிறிலங்கா.

- அவுஸ்திரேலியா, பிரான்ஸ், உக்ரேன், அயர்லாந்து, ஜேர்மன், சைப்ரஸ், துருக்கி, கனடா, பிலிபைன்ஸ், ஐக்கிய அமெரிக்க இராச்சியம், சிங்கப்பூர், இந்தியா, செக் குடியரசு மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 48 சர்வதேச வலைப்பதிவாளர்கள் இலங்கை பற்றிய பதிவுகளை இட்டனர். மொத்தமாக ரூபா 35 மில்லியன் அடையப்பெறும் வகையில் இலங்கை பற்றிய 750 பதிவுகள் இடப்பட்டன. வடக்குத் தீபகற்பப் பிரதேசங்கள் (யாழ்ப்பாணம்), அனுராதபுரம், கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்கள் (திருகோணமலை, பாசிக்குடா, அறுகம்பை) போன் பிரதேசங்கள் பற்றி வெளிக்கொணரப்பட்டதோடு, சிறந்த பொழுதுபோக்கு குறித்தான கவர்ச்சியைக் கொண்ட படல்கும்புர, பொத்துவில், மொணராகலை போன்ற பிரதேசங்கள் பற்றியும் வெளிக்கொணரப்பட்டது. மேற்படி வலைப்பதிவாளர்களினால் இலங்கையின் இயற்கை அம்சங்கள், கலாசார அம்சங்கள், வனசீவராசிகள், பாரம்பரியங்கள், சமையல் கலை, வாழ்க்கை முறை மற்றும் இயற்கைக் காட்சிகள் போன்றன விடயங்களுக்கு மைய அவதானம் வழங்கப்பட்டிருந்தது.

- ஐக்கிய இராச்சியம், இந்தியா, பஹ்ரேன், ஹங்கேரி, நோர்வே, பிரான்ஸ், கனடா, தென்னாபிரிக்கா, பிரேசில், நெதர்லாந்து, கொரியா, செக் குடியரசு, ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த 65 சுற்றுலா ஊடகவியாளர்களுக்கு ஊடக பரிச்சயச் சுற்றுலாவுக்கான வசதி வழங்கப்பட்டது.பயணச் சஞ்சிகைகள், தொலைக்காட்சி ஆவணப்படங்கள், இயங்கலை மூலமான புதிய இணையத்தளங்கள் போன்றன ஊடாக 185 மில்லியனை அடைய முடிந்தது. விளம்பரச் செலவு ரூபா. 213 மில்லியனாகும்.

- மேலும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகமானது செக் குடியரசில் இடம்பெற்ற TBEX ஐரோப்பிய வலைப்பதிவாளர்கள் மற்றும் சமூக ஊடக ஆதிக்கர்களின் ஒன்றுகூடல் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற TBEX சர்வதேச உள்ளடக்க எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் ஆகியவற்றில் கலந்துகொண்டது.

- மொத்தமான சேதன முகநூல் பின்பற்றுனர்களாக இலங்கையின் சுற்றுலா முகப்பக்கத்தில் சுமார் 47,125 உள்ளனர், மேலும் மை ஐஸ் முகநூல் பின்பற்றுனராக 44,162 உள்ளனர். இலங்கை சுற்றுலாத் துறையின் இணையத்தளத்தை சுமார் 02 மில்லியனுக்கும் மேற்பட்டோர் உபயோகிக்கின்றனர். மொத்தமான இன்ஸ்டாகிராம் பின்பற்றுனர்களாக 31,300 உள்ளனர், அத்துடன், 856 பதிவுகள் தரவேற்றப்பட்டுள்ளன. இலங்கை சுற்றுலாத்துறையின் ருவிட்டர் பக்கத்தில் 2,244 பதிவுகளும் 3,636 பின்பற்றுனர்களும் உள்ளனர்.

- SLTPB இன் கட்டுநாயக்காவிலுள்ள 20 வருடங்கள் பழமையான சுற்றுலாப்பயணத் தகவல் கருமபீடமானது புத்தாக்கம் செய்யப்பட்டு 2018 ஒக்டோபர் மாத்தில் திறந்துவைக்கப்பட்டதோடு, சுற்றுலா வருகையாளர்களுக்கு புதிய தோற்றம் ஒன்றை வழங்கும் நோக்கில் கண்டி மற்றும் வெலிபன்ன ஆகிய இடங்களிலும் தகவல் கரும பீடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

- 47 நடமாடும் சுற்றுலா தகவல் கருமபீடங்களை படகுப் பயணிகளுக்கு தாபித்தல்.

- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்தின் உள்நாட்டு ஊடக அலகானது பிரதான நிகழ்வுகளை உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டுக் காலத்தில் 47 ஊடக வெளியீடுகளை அனுப்பியுள்ளதோடு, 07 ஊடக மாநாடுகளையும் நடாத்தியது. சுற்றுலா பற்றிய பல்வேறு முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகள் “ஒரு போத்தில் செய்தி 2018” இன் கீழ் பகிரப்பட்டது.

இ) உள்நாட்டு நிகழ்வுகள்

840 வெளிநாட்டு மெய்வல்லுனர்களின் பங்களிப்புடனும் மொத்தமாக 4 மில்லியன் ஐ.அ.டொலர் ஊடக செலவுடனும் இடம்பெற்ற யன்மேன்,40 வெளிநாட்டு செயலாற்றுகையாளர்களின் பங்களிப்புடனும் மொத்தமாக 2 மில்லியன் ஐ.அ.டொலர் ஊடக செலவுடனும் இடம்பெற்ற இசை விழா (சவுண்ட் மியுசிக் பெஸ்டிவல்), 300 வெளிநாட்டு மெய்வல்லுனர்களின் பங்கேற்புடனான றீட் அமேஸன் மற்றும் 750 வெளிநாட்டுப் பங்கேற்பாளாகளுடன் இடம்பெற்ற காலி இலக்கிய விழா போன்ற பாரிய நான்கு சர்வதேச நிகழ்வுகள் இலங்கையில் இடம்பெற்றன. மேலும்,நவம் பெரஹர, துருது பெரஹர, கண்டி பெரஹர, புத்த ரஷ்மி வெசாக் பண்டிகை, மம்மா மியா, ஆயுர்வேத கண்காட்சி, பிபா உலகக் கோப்பை, சஞ்சாரக்க உதுவ மற்றும் டுக்டுக் 2018 பேஸட்ஸ் 2018 போன்ற நிகழ்வுகளுக்கு ஆதரவு வழங்கியது.

ஈ) இலக்குமிக்க சமூக பொறுப்பு அலகு(DSR)

50 பயணிகள் கப்பல்கள் மற்றும் கலாசார செயலாற்றுகையுடன் கூடிய 74,500 பயணிகள் வரவேற்கப்பட்டதோடு, இது இலக்குமிக்க சமூகப் பொறுப்பு அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் டேர்பன் நகரில் இடம்பெற்ற 3வது IORA செயலமர்விலும் பங்கேற்புச் செய்தது. இராமாயண இணையத்தளத்தினை ஆரம்பித்து வைத்து, இராமாயண ஈ-பிரசுரங்கள் மற்றும் இராமாயண ஆவணங்கள் போன்றன அதில் தரவேற்றப்பட்டன. மேலும் இராமாயணவை ஊக்குவிக்கும் வகையில் கியு.ஆர் கோவை அட்டை உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இடம்பெற்ற பூகோள மதச் சுற்றுலா

பற்றிய உரையாடல் மற்றும் நியு டெல்லியில் இடம்பெற்ற 4வது இராமாயண விழா ஆகிவற்றில் பங்களிப்புச் செய்யப்பட்டது.

3.3. நிதி சார்நத செயலாற்றுகை பற்றிய மேலோட்டப் பார்வை

அட்டவணை- 3.1

பிரேரிக்கப்பட்ட கருத்திட்டச் செயற்பாடுகள்	வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு 2018 (ரூ.மில்)	31.12.2018வரையான செலவினம் (ரூ.மில்)
சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு	1975	975
சர்வதேச தொடர்பாடல்	1864	383
சர்வதேச இயங்கலை டிஜிடல் சந்தைப்படுத்தல்	714	11
தென்னாசியாவிற்கான நுழைவாயில்	40	4
ஊடக பரிச்சயச் சுற்றுலா	46	14
வருகையாளர் வசதிகள் மற்றும் சுற்றுலா தகவல் நிலையம்	36	12
வலைப்பதிவாளர் பரிச்சயச் சுற்றுலா	52	19
உள்நாட்டு ஊடக பிரச்சாரம்	12	1
உற்பத்தி ஊக்குவிப்பு சாதனங்கள்	96	38
புதிய உற்பத்தி/ விசேட சந்தைப்பிரிவு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல்	47	5
உள்நாட்டு நிகழ்வுகள்	387	103
இலக்கு மற்றும் சமூக பொறுப்புகள் அலகு	64	11
விமான நிலையங்களுடன் இணைந்து பணியாற்றுதல்	25	
இயக்கப்பாடுகளுக்கு ஆதரவளித்தல்	401	180
மூலதனம்	8	4
மிகை நிதி	-	1000
மொத்தம்	**5768**	**2760**

மூலம்: இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

3.4 2018 டிசம்பர் இறுதியிலுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவு, செலவினம்

அட்டவணை- 3.2

விபரங்கள்	2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு (ரூ.மில்)	31.12.2018வரையான செலவினம் (ரூ.மில்.)
மொத்த மீண்டெழும் செலவினம்	5760.00	2756.00
மொத்த மூலதனச் செலவினம்	8.00	4.00
மொத்தச் செலவினம்	**5768.00**	**2760.00**

மூலம்: இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

3.5. முக்கிய சவால்கள்

- **நேரடி விமானத் தொடர்பற்ற ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இலங்கையை ஊக்குவித்தல்**
  இலங்கை விமானச் சேவையானது பிராங்க்பேட், பரிஸ் மற்றும் ரோம் ஆகியவற்றுக்கான தனது நேரடிய விமானத் தொடர்பினை 2016 ஒக்டோபர் மாதம் முதல் நிறுத்தியமையின் விளைவாக மேற்படி நாடுகளிலிருந்தும் அவற்றை அண்டிய நாடகளிலிருந்தும் இலங்கைக்குள் வரக்கூடிய நேரடிப் பயணிகளின் வருகையில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் உல்லாசப் பயணிகள் மத்திய கிழக்கு நாடுகளினூடாக வருவதை விட நேரடியாக வருவதற்கே அதிக விருப்பம் கொண்டுள்ளனர். இலங்கையிலிருந்து இத்தகைய பிரதான நகரங்களுக்கு விமானச் சேவைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

- **சீன மொழி பேசுகின்ற வழிகாட்டிகள் இன்மை**
  சீனச் சந்தை எழுச்சி பெற்று வருவதனால், இத்தகைய கேள்விகளை எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் வகையில் சீனாவிற்கான புலமைப்பரிசில்களை வழங்கி அங்கு மென்டரின் மொழிகளில் அதிக வழிகாட்டிகளை பயிற்றுவிப்பதற்கான தேவையொன்று காணப்படுகிறது.
- **உட்கட்டமைப்பு பற்றிய பிரச்சினைகள்**
  சுற்றுலாப் பயணிகள் வீதியில் தமது பயணங்களில் செலவிடும் நேரத்தைக் குறைக்கும் நோக்கில் கொழும்பு கண்டி நெடுஞ்சாலை நிர்மாணிப்பினை துரிதப்படுத்துவதற்கான தேவை அத்தியாவசியமாகக் காணப்படுகிறது.இது தற்போதுள்ள பிரதான முறைப்பாடாகவும் உள்ளது.

- **உள்நாட்டு விமானச் சேவைத் தொடர்புகள்**
  வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வருகையாளர்களைக் கவரும் வகையில் அப்பிரதேசங்களுக்கு சிக்கனமான/ குறைந்த செலவுள்ள விமானச் சேவைகளை வழங்கி அவர்களைக் கவர்ந்துகொள்ளல் தொடர்பில் ஆராய்வதற்கான தேவை காணப்படுகிறது. நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட கொழும்பு நகரில் மிகவும் நெரிசல் நிலை காணப்படுவதாக குறிப்பீடு செய்யப்படுவதோடு, ஏனைய பிரதேசங்களும் ஊக்குவிக்கப்பட வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

3.6. முன்னோக்கிய பயணம்

- **டிஜிடல் விளம்பரப் பிரச்சாரங்களை ஆரம்பித்தல்**
  ஐக்கிய இராச்சியம், ஜேர்மன், பிரான்ஸ், இந்தியா மற்றும் சீனா போன்ற ஐந்து பிரதான மூல நாடுகளில் மேற்படி பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்காக பொருத்தமான விளம்பர நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, இது 2018 ஒக்டோபர் 15 இல் ஆரம்பித்து 6 மாத காலம் வரை இடம்பெறுகிறது.

- **இலங்கைச் சுற்றுலாவுக்கான புதிய சந்தைப்படுத்தலை ஆரம்பித்தல்**
  ஒரு புதிய சந்தைப்படுத்தலானது 2018 நவம்பர் 05 ஆம் திகதி WTM பயக் கண்காட்சியின் போது ஆரம்பிக்கப்பட்டது.

- **முக்கிய எட்டு சந்தைகளில் இலக்குப் பிரதிநிதித்துவக் கம்பனிகளை நியமித்தல்**
  ஐக்கிய இராச்சியம், ஜேர்மன், பிரான்ஸ், இந்தியா, சீனா, மத்திய கிழக்கு, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற எட்டு பிரதான நாடுகளில் பொதுமக்கள் உறவுகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக தொடர்ச்சியான பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்காக DRC நியமிக்கப்பட்டுள்ளது.

- **சர்வதேச தொடர்பாடல் பிரச்சாரம் ஒன்றை அமுல்படுத்தல்**
  உலகளாவிய ரீதியில் புதிய புதிய சந்தைப்படுத்தலை முன்னெடுக்கும் வகையில் ஒரு சர்வதேச தொடர்பாடல் பிரச்சாரம் ஒன்றானது 2019 இல் அமுல்படுத்தப்படவுள்ளதோடு, இது ஜேர்மன் நாட்டின் பேர்லின் நகரில் இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ITB பயணச் சந்தையில் வைத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

4.
இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

4.1 நிறுவனம் பற்றிய மேலோட்டப்பார்வை

நாட்டின் விருந்தோம்பல் சார்ந்த கல்வியை வழங்கும் முன்னோடி நிறுவனமான இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது (SLITHM), 1964 ஆம் ஆண்டு சிலோன் ஹோட்டல் பாடசாலையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவே நாட்டின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் மிகவும் முன்னோடியானதும் முன்னணி மிக்கதுமான கல்வி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. மேற்படி இந்த நிறுவனமானது, தற்போதைய சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழான தன்னாதிக்கம் கொண்ட நிறுவனம் ஒன்றாக இயங்கி வரும் நோக்கில், தனது பெயரை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் என 2007 ஆம் ஆண்டில், அன்றைய சிலோன் சுற்றுலாச் சபையின் மறுசீரமைப்புக்கு இணங்க மாற்றியக் கொண்டது. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது, பயணம் மற்றும் விருந்தோம்பல் போன்ற துறைகள் மீதான அபிவிருத்தியுடன் கூடிய நாட்டில் எப்பொழுதும் நீடித்திருக்கும் சுற்றுலா அம்சங்களைப் பின்பற்றிக் கொண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையின் துரித கதியில் அபிவிருத்தி அடைந்து வரும் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் சிறந்த பயிற்றப்பட்ட மற்றும் மிகவும் உயர்ந்தளவில் ஊக்குவிக்கப்பட்ட முகாமைத்துவ தொழில்வாண்மையாளர்களைக் கொண்டு பயிற்சியளித்து வருகிறது.

உரு 4.1 : கொழும்பு மற்றும் பிராந்தியக் கல்லூரிகளின் அமைவிடங்கள்

4.2 கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது (SLITHM), மாணவர்களுக்கு தொழில் ரீதியான மேம்பாட்டினை வழங்குகின்ற அதேவேளை, அவர்களது அறிவினை மேம்படுத்துவதற்கான ஆதரவினையும் வழங்கி வருகிறது. எமது மாகாண ரீதியிலான கல்லூரிகள் நாட்டின் அனேக மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. பின்வரும் அட்டவணையானது 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற SLITHM பயிற்சி நெறிகளையும் அவற்றில் கலந்துகொண்ட மாணவர்கள் பற்றிய விபரங்களையும் வழங்குகிறது.

2018 இல் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் பற்றிய சுருக்கமான தகவல் அட்டவணை – 4.1

பாடநெறிகள்	2018 எதிர்பார்க்கை பெறுமதி	2018 உண்மை பெறுமதி
கைவினை மட்டம்	1,125	1,055
சான்றிதழ் மட்டம்	2.025	1,750
இடைநிலை மட்டம்	90	63
உயர்நிலை மட்டம்	90	58
3 வருட முகாமைத்துவ மட்டம்	180	213
பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி (3 மாதங்கள்)	250	68
தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	1200	375
தேசிய சுற்றுலா வழிகாட்டி	80	63
மோட்டார் வாகன சுற்றுலா வழிகாட்டி	80	101
பிரதேச வழிகாட்டி	130	49
புத்தாக்க வழிகாட்டி	50	18
ஏனைய நிறுவனங்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்	1200	1030
அமைச்சு சார்ந்த நிகழ்ச்சித்திட்டம்	-	2207
சலவை சார்ந்த செயற்பாடு	60	-
சமையல் உதவியாளர்	70	-
சான்றுப்படுத்தப்பட்ட விருந்தோம்பல் நிதி மற்றும் முகாமைத்துவம்	140	109
மொத்தம்	**6,770**	**7,159**

மூலம்: இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக மாணவர் அடிப்படைத் தகவல்

பாடநெறி அடிப்படையில் வெளியீடு பற்றிய வளர்ச்சி 2015 – 2018 அட்டவணை -4. 2

பாடநெறியின் பெயர்	2015	2016	2017	2018
கைவினை மட்டம்	609	858	823	1,055
சான்றிதழ் மட்டம்	1618	1,303	1,557	1,750
இடைநிலை மட்டம்	73	43	65	63
உயர்நிலை மட்டம்	70	45	65	58
03 வருட முகாமைத்துவ டிப்ளோமா	55	162	183	213
பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி	51	53	162	68
தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	170	369	565	375
தேசிய சுற்றுலா வழிகாட்டி	62	93	56	63
மோட்டார் வாகன சுற்றுலா வழிகாட்டி	-	62	38	101
ஏனைய பாடநெறிகள்	87	1,243	1,814	3,413
மொத்தம்	**2,795**	**4,231**	**5,328**	**7,159**

மூலம்: இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக மாணவர் அடிப்படைத் தகவல்

4.3 நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் பற்றிய பௌதீக செயலாற்றுகை

SLITHM ஆனது 2018 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் கருத்திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக நடாத்தியது.

- **மாகாண மட்டக் கல்லூரி வலையமைப்பினை தரமுயர்த்தி அவற்றை விரிவாக்கம் செய்தல் (யாழ்ப்பாணம்)**

  யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் வட மாகாண சபை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு SLITHM இன் யாழ்ப்பாண வளாகம் தாபிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் சுமார் 110 மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை SLITHM முன்னெடுத்திருந்தது. நவம்பர் 2018 இற்கான சான்றிதழ் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்ட நிறுவனத்தின் வாளாகத்தில் சுமார் 400 மாணவர்களுக்கு வருடாந்த பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **கல்வி சார்ந்த கூட்டுப் பணியாற்றுகை/ புதிய பயிற்சிநெறி அபிவிருத்தி**

  சாகசம் மிக்க சுற்றுலா மற்றும் மூன்றாம்நிலைக் கல்விக்கான பிரதம அமைச்சரின் பணிக் குழு மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி ஆணைக்குழு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய தொழிற்பயிற்சித் தகைமை மட்டம் 4 இற்கான (NVQ level 04) சான்றிதழ் பாடநெறியில் சாகசம் மிக்க சுற்றுலா சார்ந்த 4 புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிலம், ஆகாயம் மற்றும் நீர் சார்ந்த சாகசங்களை உள்ளடக்கும் வகையில் சாகசம் மிக்க சுற்றுலாத்

துறையிலான தொழில்வாண்மைப் பயிற்சி நெறிகளில் வளர்ந்து வரும் கேள்விகளுக்கான தீர்வினை இது வழங்கவுள்ளது.

மேலும், சுற்றாடல் மற்றும் ஆரொக்கியம் சார்ந்த சுற்றுலாத் துறையிலான பாடத்திட்டங்களும் நிறைவுசெய்யப்பட்டதோடு, துறை சார்ந்த தொழில்வாண்மையாளர்களின் ஒத்துழைப்புடன் கூடிய நிகழ்வு சார்ந்த கையாளுகை அம்சங்களும் நிறைவுசெய்யப்பட்டன.

SLITHM நிறுவகமானது, மாகாண பயிற்சி நெறிகளுக்கான வலைப்பின்னல் ஒன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அனைத்து அரச பல்கலைக்கழகங்கள், மாகாண சுற்றுலா அதிகாரசபைகள் மற்றும் மாகாண சுற்றுலாத் துறை சார்ந்த பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருக்கான வலைப்பின்னல் செயலமர்வு ஒன்றினை முன்னெடுத்தது. மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் SLITHM ஆது பயிற்சி வளங்கள் மற்றும் நிபுணத்துவ பரிமாற்றம் தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது.

SLITHM ஆனது, கடந்த தசாப்த காலப்பகுதியில் குறித்த துறையில் அவசியமான தொழில்வாண்மையாளர்கள் காணப்பட்டது முதற் கொண்டு ஆயுர்வேத ஆரோக்கிய சுற்றுலா பயிற்சி நெறியினை ஆரம்பித்தது.

அத்துடன், இலங்கை மகாநாட்டுப் பணியகம், SLAPCEO, மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி ஆணைக்குழு ஆகியவற்றின் ஒத்துழைப்போடு நிகழ்வு முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்ளோமா பாடநெறி ஒன்றை ஆரம்பித்து வைத்தது.

- **கல்வி சார்ந்த பணியாட்டொகுதியினருக்கான தொடர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

பயிற்சித் துறை சார்ந்த திறன் கட்டியெழுப்புகை

பயிற்சியாளர்களை சர்வதேச தரத்தில் அபிவிருத்தி செய்யும் ஒரு நடவடிக்கையாக, SLITHM இன் அனைத்து பயிற்சியாளர்களும் அமெரிக்க ஹோட்டல் மற்றும் விடுதி முகாமைத்துவ சான்றுப்படுத்தப்பட்ட விருந்தோம்பல் கல்வியாளர் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சித்திட்டமானது விருந்தோம்பல் கல்வியாளாகளுக்கான சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

தமது தலைமைத்துவத் திறமை மற்றும் குழுப் பணி குறித்தான பண்புகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில், நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் வெளிக்கள பயிற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

- **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி சார்ந்த பிணைப்பு**

SLITHM இன் மாணவர்களின் தகைமை மட்டம் மற்றும் அவர்களது தொழில்வாண்மை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் SLITHM இற்கும் செப் கில்ட் அஸோஸியேஷன் நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

- **கல்வி சாரா பணியாட்டொகுதியினருக்கான திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டம்**

நிறுவனத்தின் ஊழியர்கள் நிதிக் கட்டுப்பாடுகள் பற்றிய செயலமர்வில் பங்கேற்றனர் / நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் குறித்தான செயலமர்வில் 03 ஊழியர்களும் பொருள் கொள்வனவு பற்றிய வழிகாட்டல்கள் குறித்தான செயலமர்வில் 50 ஊழியர்களும் பங்கேற்றனர்.

மேற்படி பயிற்சியளிப்பானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

முகாமைத்துவ செயலாற்றுகை மற்றும் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளைத் தாபித்தல் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத இரு தரப்பினருக்கும் நடத்தப்பட்டது.

- **தேசிய சுற்றுலா மனித வளங்கள் செயல்நுணுக்க அபிவிருத்திக்கான பங்களிப்பு**

SLITHM ஆனது விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம், தொழில் வழிகாட்டல், பயிற்சியளிப்புகள் மற்றும் வலைத்தொடர்பு நிகழ்வுகள் போன்றவற்றை மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்களில் முன்னெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. SLITHM ஆனது இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் போது புதிதாக பதிவு பெற்றவர்களுக்கான விருந்தோம்பல் சார்ந்த கல்வி குறித்தான தகவல்களை வழங்கி வருகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் நிதி உதவிகளை வழங்குகிறது.

- **நிகழ்வு முகாமைத்துவ அலகினைத் தாபித்தல்**

நிகழ்வு முகாமைத்துவ அலகானது வளர்ந்து வருகின்ற சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் செயலமர்வுகளை நடத்துதல் மற்றும் பயிற்சி சார்ந்த தீர்வுகளை இனங்காணல் என்பன போன்ற நோக்கில் தாபிக்கப்பட்டது. இந்த அலகானது சுகாதார மற்றும் ஆரோக்கிய சுற்றுலா மற்றும் சாகசம் மிக்க சுற்றுலா போன்ற துறைகள் தொடர்பிலான இரண்டு பயிற்சி அமர்வுகளை முன்னெடுத்தது. மேற்படி செயலமர்வுகளைத் தொடர்ந்து மேற்படி இரண்டு பிரதேசங்களிலுமான நிகழ்ச்சித்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டன.

- **ஊடக மற்றும் தொடர்பாடல் அலகினைத் தாபித்தல்**

சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிக்கான கவர்ச்சியினை உருவாக்குவதற்கான வளர்ந்துவரும் கேள்வியினைக் கருத்திற்கொண்டு, அனைத்து ஊக்குவிப்பு சார்ந்த மற்றும் வர்த்தக சின்னங்கள் ஆகியன ஒன்றுதிரட்டப்பட்டதோடு, ஊடக மற்றும் தொடர்பாடல் அலகும் SLITHM இனால் விருத்தி செய்யப்பட்டது. இந்த அலகானது SLITHM இன் இணையத்தளத்தினைப் புதுப்பித்தல், பத்திரிகை மற்றும் ஊடக விடயங்கள் அனைத்தையும் கையாளுதல் மற்றும் SLITHM நிறுவகத்திற்கான சமூக ஊடக தளங்களை ஆரம்பித்தல் போன்ற இலக்குகளை உள்ளடக்குகின்றது. புதிதாக தாபிக்கப்பட்ட SLITHM இன் முகநூல் பக்கமானது 2018 ஆம் ஆண்டுக் காலத்தினுள் சுமார் 60,000 பின்தொடர்னர்களை ஏற்கனவே கவர்ந்திருந்தது.

- **SAARC புலமைப்பரிசில்**

2017 ஆம் ஆண்டில், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் இரண்டு புலமைப் பரிசில்கள் SLITHM இற்கு சார்க் அமைப்பு ஊடாக கிடைக்கப்பெற்றன. இது சார்க் பிராந்திய நாடுகள் மத்தியில் SLITHM இன் புகழை மேம்படுத்துவதற்கு வழியமைப்பதோடு, SLITHM ஆது 2018 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான சார்க் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தினையும் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு வருகிறது.

- **SALZBURG ஹோட்டல் பாடசாலையின், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் மாணவர்களுக்கான இரட்டைப் புலமைப்பரிசில்கள்**

SLITHM இன் 10 டிப்ளோமாதாரர்களுக்கு ஒஸ்ரியாவின் புகள்மிக்க SALZBURG பாடசாலையின் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. SALZBURG பாடசாலையானது வருடா வருடம் SLITHM இன் மாணவர்களுக்கு அனேக புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு தயாராகவுள்ளது.

- **கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) இற்கான சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பாடத்திட்டத்தினை விருத்திசெய்தல்**

SLITHM ஆனது, 13 ஆம் தரத்திற்கான சுற்றுலா பற்றிய பாடசாலைப் பாடத்திட்டத்தினைத் தயாரிப்பதில் பிரதான பங்கெடுத்து வருவதோடு, தற்பொழுது பாடசாலைகளில் உபயோகத்திலுள்ள க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான சுற்றுலாத்துறை பற்றிய பாடநெறியை விருத்திசெய்தது. SLITHM நிறுவகத்தின் பயிற்சிநெறி வளாக வலைப்பின்னலானது மேற்படி பாடத்திட்டத்திற்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு, நாடளாவிய ரீதியில் சுமார் 1000 ஆசிரியர்களைப் பயிற்றுவித்துள்ளது.

- **தற்போதுள்ள/ சாத்தியமான பயிற்சி நிலையங்கள் ஊடாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பயிற்சிநெறிகளை விரிவாக்குவதற்கான ஒரு மூலோபாயம்/ மாதிரியை விருத்திசெய்தல்**

சுற்றுலாத்துறை சார்ந்த கல்வி நிறுவனங்களை SLITHM இல் பதிவுசெய்தல் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பில் எழுச்சி பெற்று வரும் கேள்விகளுக்கு தீர்வளிக்கும் வகையில், SLITHM ஆனது தனியார் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பயிற்சி நிறுவனங்களை தம்முடன் பதிவுசெய்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றது. ஏற்கனவே 20 நிறுவனங்கள் தமது ஆர்வங்களை வெளிக்காட்டியுள்ளதோடு பிரேரணைகளும் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு முதற்கொண்டு, இந்த நிறுவனங்களுக்கான ஆதரவுகள் SLITHM நிறுவகத்தினால் வழங்கப்படவுள்ளதோடு, அவர்கள் அநேக நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கும் தமது நிகழ்ச்சித்திட்டங்களில் உயர் தரத்தினை அடைந்துகொள்வதற்குமான வலுவூட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

- **பாடசாலைக் களக வலைப்பின்னல்**

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை பற்றிய ஆர்வத்தினை பாடசாலை மட்டத்தில் உருவாக்குவதற்கான பிரதான நோக்கில், SLITHM நிறுவகமானது பாடசாலை சுற்றுலா களகங்களை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைத்தது. இந்த வகையில் சுமார் 100 களகங்கள் நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டதோடு, இந்த வருட முடிவிற்குள் சுமார் 300 களகங்களை மேலும் தாபிப்பதற்கான இலக்கினையும் எமது நிறுவனம் கொண்டுள்ளது. இத்தகைய களக வலைப்பின்னலானது சுற்றுலாத் துறை சார்ந்த கவர்ச்சியினை உருவாக்குதவற்கும் சுற்றுலாத் துறையில் மாணவர்கள் முனைப்புடன் ஈடுபடுவதற்கும் பணியாற்றவுள்ளது.

- **இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வர்த்தகச்சின்னக் கட்டடம்**

நிறுவனக் கீதம் மற்றும் காணொளி ஆகியன பூர்த்தி செய்யப்பட்டன.

SLITHM இன் மாணவர்கள் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற சமையல் கலை – உணவுக் கண்காட்சி 2018 இல் ஒன்பது பதக்கங்களை வென்றெடுத்தனர். இலங்கை சுற்றுலா விருதுகள் 2018 இல் சுற்றுலா கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் குறித்தான சிறப்பு விருது அளிக்கப்பட்டது.

4.4 நிதிச் செயலாற்றுகை பற்றிய மேலோட்டப் பார்வை

அட்டவணை 4.3

பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில்)	உண்மைச் செலவு (மில்)	நிதி சார்ந்த முன்னேற்றம்
கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மாணவர் பயிற்சி வெளியீட்டில் குறைந்தது 30 சதவீத வளர்ச்சியை ஈட்டிக்கொள்ளல்.	453	443	98%
கல்வி அலுவல்கள் சபைகள் மற்றும் பாடத்திட்ட மீளாய்வுக் குழுக்களைத் தாபித்தல்	6	0.28	5%
தர முகாமைத்துவ முறைமைகளைத் தாபித்தல்	2.5	0.48	19%
SLITHM இற்கான தேசிய தொழிற் பயிற்சி தகைமை அந்தஸ்த்தினையும் அது சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஈட்டிக்கொள்ளல்.	0.95	0.48	50%
கல்வி சார்ந்த பணியாட்டொகுதியினருக்கான தொடர் அபிவிருத்தித் திட்டம்	10	7.23	72
உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கல்வி சார்ந்த பிணைப்புகள்	1	-	-
துறை சார்ந்த கல்வி ஒத்துழைப்புகள்/ புதிய பயிற்சி நெறி அபிவிருத்தி	9	1.6	18%
துறையுடன் கூடிய R & D அலகினை விருத்தி செய்தல்	2	-	-
மாகாண வளாக வலைப்பின்னலை தரமுயர்த்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்	202	55	27%
தற்போதுள்ள/ சாத்தியமான பயிற்சி நிலையங்கள் ஊடாக SLITHM இன் பயிற்சிநெறிகளை விரிவாக்குவதற்கான ஒரு மூலோபாயம்/ மாதிரியை விருத்திசெய்தல்.	3	0.8	27%
தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி	6	0.11	1.83%
அவசியமான மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளல்	8.16	4.8	59%
கல்வி சாரா பணியாட்டொகுதியினருக்கான திறன் கட்டியெழுப்புகை	5.7	3.17	56%
தேசிய சுற்றுலா மனித வளங்கள் மூலோபாய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்	13.5	13.5	100%
ஊடகம் மற்றும் தொடர்பாடல் அலகு ஊடாக பணிகளைத் தாபித்து அவற்றை வினைத்திறன் மிக்க முறையில் அமுலாக்கம் செய்தல்	28.8	7.4	26%

சமூக ஊடக தளம் மற்றும் டிஜிடல் சந்தைப்படுத்தல்	2.4	2.28	95%
பாடசாலை மட்ட களக வலைப்பின்னலைத் தாபித்தல்	5	0.4	8%
தொழில் வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை ஆலோசனை அலகு/ தொழில் வங்கி அல்லது தொழில் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தல்	1	-	-
SLITHM இன் வர்த்தகச்சின்னம் மிக்க கட்டடம்	1.4	0.71	51%
நிகழ்வுப் பங்களிப்பு (பயணம் மற்றும் சுற்றுலாத் துறையின் பல்வேறு பிரதேசங்களை மையப்படுத்தி செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்தல்)	2	0.83	42%
பங்கீடுபாட்டாளர்களுடனான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கூட்டுப் பணியாற்றுகைகள்	1	-	-
மொத்தம்	**764**	**543**	**71%**

மூலம்: இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் நிதிப் பிரிவு

4.4 பிரதான சவால்கள்

- **சுற்றுலாத் துறைக்கான அடுத்த தலைமுறையினரின் குறைவான கவர்ச்சி**

நவீன காலத்துத் தலைமுறையினரின்/ அடுத்த தலைமுறையினரின் சுற்றுலாத் துறையிலான ஈடுபாடானது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக சுற்றுலாத் துறையின் வர்த்தக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பம், வங்கி, சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில், ஒரு முதலாளித்துவப் பொறுப்பினை உடையவர் என்றவகையில், கணிசமானளவு குறைவாகவே உள்ளது. துறை பற்றிய தவறான கருத்துக்கள், குறைந்த சம்பள மட்டங்கள் மற்றும் கலாசார மட்டுப்பாடுகள் என்பன போன்ற இன்னும் பல காரணிகள் ஒன்றாகச் சேர்ந்து இத்தகைய அபகீர்த்திக்கு வழிவகுத்துள்ளன. இத்தகைய நிலைமையின் காரணத்தினால் SLITHM ஆனது தற்பொழுது குறைந்த கேள்வியைக் கொண்டுள்ளதோடு, அதன் திறமைக்கும் கீழான மட்டத்தில் இயங்கி வருகிறது. SLITHM ஆனது அதன் துறைசார்ந்த பங்கீடுபாட்டாளர்களுடன் இணைந்து சுற்றுலாத் துறையினைச் சந்தைப்படுத்துவதற்கும் அது சார்ந்த பல்வேறு அம்சங்களில் உல்லாசப் பயணிகளின் கவர்ச்சியை உருவாக்குவதற்கும் முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. இருந்தபோதிலும் நாட்டின் ஒட்டுமொத்த முயற்சிகளும் மேற்படி கவர்ச்சியை தீவிரப்படுத்தி துரித கதியில் அதிகரிப்பதற்கான தேவை இன்னமும் காணப்படுகின்றன.

- **இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கான வளவாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கவர்ந்து கொள்ளல்: துறை சார்ந்த கேள்வியை அதிகரிப்பதற்கானது**

இதற்கு கல்வி சார்ந்த நிறுவனங்களை விட சுற்றுலாத் துறையில் ஈட்டப்படுகின்ற வருமானம் அதிகமாக உள்ளமையியானல், அதிகரித்து வரும் சுற்றுலாத் துறை சார்ந்த கேள்வியை எதிர்கொள்ளும் நோக்கில் SLITHM இற்கான வளவாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கவர்ந்துகொள்வதானது ஒரு சவாலாக மாறியுள்ளது.

- **சமுதாயத்தின் மத்தியில் துறை பற்றிய எதிர்மறையான எண்ணக்கருக்கள**

சுற்றுலாத் துறையானது ஏனைய துறைகளை விட வேறுபட்டதொரு துறையாக விளங்குவதனால், சுற்றுலாத்துறையினை சந்தைப்படுத்தல் மற்றும் அதனை அபிவிருத்தி செய்தல் போன்ற அம்சங்களில், சமுதாயத்தின் மத்தியில் காணப்படக்கூடிய அது பற்றிய எண்ணக்கரு மிகவும் முக்கியமானதாக திகழ்தல் வேண்டும். மதுபானப் பாவனை மற்றும் வேறுபட்ட நோக்கங்களுக்காக விடுதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் உபயோகிக்கப்படுதல் என்பன போன்ற இன்னோரன்ன காரணங்களினால் இந்தத் துறை பற்றி மக்கள் மத்தியில் எதிர் மறையான எண்ணங்களே காணப்படுகின்றன. மேலும் இந்தத் துறையின் வளர்ச்சி பற்றிய எண்ணக்கருவும் எதிர் மறையாவே காணப்படுகின்றது. எனவே, சுற்றுலாத் துறை பற்றிய உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு சமுதாயத்தின் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதானது ஒரு சவாலாகவே விளங்குகிறது.

- **மாணவர்கள் மற்றும் சமுதாயம் மத்தியில் காணப்படுகின்ற தொடர்பாடல் தடைகள**

சுற்றுலாத் துறையானது நேரடியாகவே வெளிநாட்டுப் பிரஜைகளுடன் தொடர்புறுவதனால் சுற்றுலாத் துறையென வரும் பொழுது அதில் பிரதானமாக மொழியே மிகவும் பிரதான விடயமாகத் திகழ்கின்றது. நாட்டிற்குள் உல்லாசப் பயணிகளாக வருகை தருவோருக்கு சிறந்த சேவைகளை வழங்குவதாயின், அவர்களது கலாசாரம் மற்றும் பின்புலம் பற்றிய விடயங்களை உணர்ந்து கொள்வதற்கு பொருத்தமான தொடர்பாடல் இன்றியமையாத விடயமாகும். சுற்றுலாத் துறையில் ஏற்கனவே பணியாற்றுகின்ற ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பாடலைப் பேணுதல் வேண்டுமென்பதோடு, மொழி பற்றிய தடையானது துறையின் வெளியீட்டுத் தரத்தினை குறைக்கவே வழியமைக்கும்.

4.5. முன்னேற்றப் பாதை

- வெகுசன ஊடகத் துறை (இலத்திரனியல்/அச்சு) மூலம் சுற்றுலாத் துறையினைச் சந்தைப்படுத்துவதைக் கட்டியெழுப்புதல் மற்றும் உல்லாசப் பணம் மற்றும் விருந்தோம்பல் சார்ந்த விடயங்கள் ஊக்குவித்தல்.

- சுற்றுலா பற்றிய தொழில் வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பிராந்திய மட்டத்தில் முன்னெடுத்தல்.

- தனியார் விருந்தோம்பல் பயிற்சி நிறுவனங்களுடனான வலைப்பின்னல் ஊடாக சுற்றுலாத் துறையில் நிலவுகின்ற கேள்விகளுக்கு ஏற்ற வகையில் பயிலுனர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.

- சுற்றுலாத் துறை சார்ந்த ஊழியர்களின் தொழில்துறை வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னேற்றகரமான சுற்றுலாப் பயிற்சி விருப்பத்தெரிவுகளை அறிமுகம் செய்தல்.

- புதிய சுற்றுலாத் துறைக் கேள்விகளை எதிர்கொள்ளும் வகையில் தொடர்ச்சியானதும் இயக்கம் மிக்கதுமான பாடத்திட்ட அபிவிருத்தி.

- கற்றல் முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஈ-கற்றல் வசதிகளை அறிமுகம் செய்தல்

- கல்வி சார்ந்த நடவடிக்கைகளை வலுப்படுத்தல் மற்றும் மாகாண மட்ட பயிற்சி வலையமைப்புகளை விருத்திசெய்தல் போன்றவற்றினூடாக தேசிய சுற்றுலா மனித வளங்கள் மூலோபாய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

4.6 நிழச்சித்திட்டங்கள்/ சில செயற்பாடுகள் பற்றிய செயலாற்றுகை

பட்டமளிப்பு விழா 2018 -SLITHM

இ.சு.ஹோ.மு.நிறுவனத்தின் தவிசாளர் சுனில் திசாநாயக்க அவர்கள் விளக்கு ஏற்றுதல்

கௌரவ அமைச்சர் அமரதுங்க அவர்கள் முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரன் அவர்களுடன் உரையாடல்

புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 2018

கடற்கரைப் பிரதேசத்தை துப்பரவாக்கும் நடவடிக்கை

இ.சு.ஹோ. மு.நிறுவகத்தின் பேச்சு செய்திமடல்

சஞ்சாரக்க உதாவ நிகழ்சில் இ.சு.ஹோ.மு. நிறுவகம்

பார் ரெண்டர்ஸ் 2018 நிகழ்வில் இ.சு.ஹோ.மு. நிறுவகம்

சமையற் கலை – உணவுக் கண்காட்சி 2018 இல் இ.சு.ஹோ.மு. நிறுவக மாணவர்களின் பங்கேற்பு

நிகழ்வு முகாமைத்துவத்தில் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பித்து வைத்தல்

4.7 2018 இல் இடம்பெற்ற மேலதிக செயற்பாடுகள்

அட்டவணை- 4.4

நிகழ்ச்சித்திட்டம்	நிறுவனம்	காலப்பகுதி	பயனாளிகளின் எண்ணிக்கை
SLITHM - யாழ்ப்பாணம் - பயிற்சிப் பங்கேற்பாளர் நிகழ்ச்சித்திட்டம்	SLITHM	03 மாதங்கள்	110
SLITHM இன் இறுதி வருட மாணவர்களுக்கான மென் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	SLITHM	1 தினம்	
நிலைபேறான சுற்றுலா விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் - மன்னார் மாவட்டம் - பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், விவசாயிகள்	SLITHM, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் உலக வங்கி	1 மாதம் (15 தினங்கள்)	800 இற்கும் அதிகம்
ஹோட்டல்களை அதிகரித்தல் பற்றிய SLITHM இல் டிஜிடல் நிலைமாற்றம்	SLITHM		
யாழ்ப்பாண மாணவர்களின் பரிச்சயமுள்ளதாக்கும் யாழ்ப்பாணப் பயணம் - சுற்றுலா அமைச்சின் ஏற்பாடு	SLITHM	2 தினங்கள்	15
தொழில் வழிகாட்டல் தினம் யாழ்ப்பாணம்	SLITHM மற்றும் சக்தி எப்.எம்.	1 தினம்	60
பிரத்தியேக சீர்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு ரெலிகொம் பெண் பணியாளர்களுக்கானது (பெண்கள் தினத்தின் போது இடம்பெற்றது.)	ரெலிகொம்	1/2 தினம்	600
SLITHM - யாழ்ப்பாணம் - பயிற்சிப் பங்கேற்பாளர் நிகழ்ச்சித்திட்டம்	SLITHM	01 மாதம்/ வார இறுதி நாட்கள்	110
விடுமுறைதின சுற்றுலா விடுதி பராமரிப்பாளர்களுக்கான வர்த்தக சோதனை	இலங்கை மின்சாரக் கம்பனி (LECO)	1 தினம்	
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை – பாடத்திட்ட தரமுயர்த்தல்	தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை – ராஜகிரிய	4-5 தினங்கள்	
தேசிய கல்வி நிறுவகம் (ஆசிரியர் பயிற்சி)	தேசிய கல்வி நிறுவகம், மஹரகம	6 தினங்கள்	
ஹொரண ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (செயன்முறைப் பயிற்சி)	ஹொரண பிரிவு ஆசிரியர்கள்	01 தினங்கள்	
பிரான்ஸ் இணைப்பு நிகழ்ச்சித்திட்ட கலந்துரையாடல்	பிரான்ஸ் தூதரகம் மற்றும் கூட்டணி	02 மணித்தியால நேரம்	
பொருட் கொள்வனவு பற்றிய ஈடுபாடு மற்றும் சமையலறை வடிவமைப்பு	சிறைச்சாலை (அங்குணுகொலபெலஸ் ஸ)	2 தினங்கள்	
குறுங்கால பாடநெறிகள்	குறுங்கால பாடநெறி (வார இறுதி நாட்கள் - SLITHM)	1 மாதம்	
எதிர்கால சிந்தனை (கல்விக் கண்காட்சி)	நாலந்த கல்லூரி (NJOBA)	3 தினங்கள்	
சமையற்கலை வல்லுனர் வழிகாட்டல்	உணவுக் கண்காட்சி 2018	1 தினம்	
Ed-excel கண்காட்சி	றோயல் கல்லூரி அலுமினி	3 தினங்கள்	
ஹோட்டல் கண்காட்சி	CHSGA	3 தினங்கள்	
சஞ்சாரக்க உதாவ	SLAITO/SLTPB	2 தினங்கள்	
தேசிய இளைஞர் தின விழா	இளைஞர் நிலையம் (மஹரகம)	1 தினம்	
சமுதாய சர்வதேச மகளிர் தினம் - பெப்ரவரி 28 ஆம் திகதி - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.	SLITHM/SLIDA	2 மணித்தியால நேரம்	
செயன்முறைப் பயிற்சி பற்றிய விழிப்பூட்டல் அமர்வு	கல்வி அமைச்சு மற்றும் மரினா மாஸ்டர் செப் நிகழ்ச்சித்திட்டம்	1 தினம்	

மூலம் : SLITHM அடிப்படைத் தகவல்கள்

SRI LANKA
CONVENTION BUREAU

5.
இலங்கை மாநாட்டுப் பணியகம்

5. இலங்கை மாநாட்டுப் பணியகம்

5.1. அறிமுகம்

இலங்கையில் சுற்றுலா சார் நிகழ்வுகளைத் திட்டமிட்டு அவற்றை ஒழுங்குசெய்யும் போது,அத்தகைய திட்டமிடுனர்கள் சந்திக்க வேண்டிய முதற்கட்ட தொடர்புகொள்ளல் மையமாக இலங்கை மாநாட்டுப் பணியகம் விளங்குகின்ற அதேவேளை, சுற்றுலா ஊக்குவிப்பு இல்லமாகவும், குறித்த தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் நிபுணத்துவங்கள் தொடர்பில் கூட்டுறவுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படுவதற்கான முதன்மை மையமாகவும் விளங்குகிறது. இந்த பணியகமானது MICE சார்ந்த சுற்றுலா நிகழ்வுகளுக்கானதொரு களத்தை ஏற்படுத்தி இலங்கையை ஊக்குவிப்பதற்காக மாத்திரம் சுற்றுலாத்துறையுடனும் விமானச் சேவையுடனும் நெருங்கிப் பணியாற்றாது, வருகையாளர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களின் ஒட்டுமொத்தத் திருப்திக்குமானதொரு தொழில்வாண்மை மிக்கதொரு வழிமுறையில் நிகழ்வுகள் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் பணியாற்றி வருகிறது.

இப் பணியகமானது சேவை விசாரணைகள் முதல் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் வரையான பரந்தளவிலான சேவைகளை வழங்கிவருகிறது. மேலும் ஆராய்ச்சி ஈடுபாடுகள், விலைமனுக் கோரல், திட்டமிடல், நிகழ்வுகளை ஏற்பாடுசெய்து அவற்றை அமுல்படுத்தல் போன்ற விடங்களிலும் சுற்றுலாத்துறைக்கு ஆதரவு வழங்கிவருகிறது. மேலும் பணியகமானது ஒரு PCO தெரிவு மற்றும் அவசியமான அனைத்து அரசாங்க சான்றினைப் பெறுதல் போன்றன குறித்தான ஒத்துழைப்பினை வழங்குவதோடு, விமானச் சேவைகள், விமானநிலை அதிகாரிகளுடனான ஒத்துழைப்பு மற்றும் நிகழ்வுகளின் போதான பங்கேற்பினை அதிகரிக்கும் முகமாக ஊக்குவிப்பு ஆதரவிவு குறித்தான ஒத்துழைப்பினையும் வழங்கி வருகின்ற அதேவேளை, மாநாட்டுடன் தொடர்புடைய அவசியமான அனைத்து உதவிச் சேவைகளையும் வழங்கி வருகிறது.

5.2. அடையப்பட்ட இலக்குகள்

அட்டவணை:5.1

மாதங்கள்	ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகை	MICE வருகைகள்	
ஜனவரி	238,924	**9%**	21,503
பெப்ரவரி	235,618	**8.5%**	20,027
மார்ச்சு	233,382	**8.5%**	19,837
ஏப்ரல்	180,429	**8.3%**	14,975
மே	129,466	**8.2%**	10,616
ஜூன்	146,828	**8%**	11,746
ஜூலை	217,829	9.0%	19,604
ஆகஸ்ட்	200,359	8.3%	16,629
செப்டம்பர்	149,087	8%	11,926
ஒக்டோபர்	153,123	9%	13,781
நவம்பர்	195,582	10%	19,558
டிசம்பர்	253,169	10%	25,316
மொத்தம் 2018	**2,333,796**		**205,518**

மூலம்: இலங்கை மாநாட்டுப் பணியகம்

5.3. மூலோபாயங்கள்

1. MICE சார்ந்த சுற்றுலாவை ஊக்குவித்தல் - சந்திப்புகள், ஊக்குவித்தல்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (Meetings ,Incentives ,Conventions & Exhibitions)
2. MICE சார்ந்த சுற்றுலாத் துறையினை எழுச்சிமிகு புதிய போக்கிற்கு ஏற்ப பன்முகப்படுத்தல்.
3. MICE சார்ந்த சுற்றுலாத் துறை தொடர்பில் பயிற்சியளித்தல், ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல்.
4. விலைமனு மற்றும் மாநாடு பற்றி ஆதரவு வழங்கல்

5.4. எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்:

- MICE சார்ந்த வெளியீட்டினை அதிகரித்தல்
- MICE சார்ந்த சுற்றுலாக் காட்சி மற்றும் வீதியோரக் காட்சிகளில் பங்கேற்புக்களை அதிகரித்தல்.
- வழங்கப்படுகின்ற நிகழ்வு சார்ந்த உதவிகளின் எண்ணிக்கை
- MICE கையேடுகள் மற்றும் பிரசுரங்களைத் தயாரித்தல்
- உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பிரசுரிக்கப்படும் MICE விளம்பரங்கள் மற்றும் ஆக்கங்களின் எண்ணிக்கை.
- FAM சுற்றுப்பயணங்கள்
- விலைமனு மற்றும் மாநாடு பற்றிய உதவிகள்
- கையாளப்படும் பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் நிகழ்ச்சித்திட்டங்கள்

5.5. எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:

- MICE சார்ந்த சுற்றுலா வருகையின் அளவை குறித்த ஆண்டுக் காலத்தினுள் அதிகரித்தல்
- MICE சார்ந்த சுற்றுலாக் காட்சிகள் மற்றும் வீதியோரக் காட்சிகளின் எண்ணிக்கையையும் மற்றும் தொடர்புகளையும் குறித்த ஆண்டுக் காலத்தினுள் அதிகரித்தல்.
- MICE சார்ந்த சுற்றுலாச் செயற்பாடுகளுக்காக வழங்கப்படும் நிகழ்வு உதவிகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல்
- குறித்த ஆண்டுக் காலத்தினுள் கையேடுகள், பிரசுரங்கள், அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் விநியோகங்களை மேற்கொள்ளல்.
- குறித்த ஆண்டுக்கான விலைமனுக் கோரல் மற்றும் மாநாடுகளை மேற்கொள்ளல்.
- பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக குறித்த ஆண்டுக்காக மேற்கொள்ளப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

5.6. அமுலாக்கல் காலத்தின் போது எதிர்கொண்ட சவால்கள்:

- மாநாட்டிற்கான அரங்கு இன்மை
- கண்காட்சிக்கான இடம் இன்மை
- சுற்றுலாத் துறையில் தொழில்வாண்மைமிக்க மாநாட்டு ஏற்பாட்டாளர்களின்மை
- போட்டி மிக்க ஆசிய இலக்குநாடுகளானமலேசியா மற்றும் இந்தோனேஷியாவுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் விலை பற்றிய போட்டித்தன்மை இன்மை.
- MICE பயணிகளுக்கான வீசா குறித்தான தேவைப்பாடுகள் செலவுமிக்கதாக உள்ள அதேவேளை, மேற்படி போட்டிமிக்க நாடுகள் வீசா கட்டணங்களை வந்திறங்கியவுடன் தள்ளுபடி செய்கின்றன.

5.7. 2018 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்திற்கு எதிரான முன்னேற்றம்

5.7.1. தள கண்காணிப்புகள்:

அ) CEAV மற்றும் IATO

CEAV என்பது ஸ்பானிய நாட்டையும் மற்றும் IATO என்பது இந்தியாவையும் சேர்ந்த வெளிச்செல்லும் சுற்றுலா இயக்குனர்களாவர். இவர்கள் இருவரும் தமது வருடாந்த மாநாட்டினை இலங்கையில் இவ் ஆண்டின் ஆரம்பத்தில் நடாத்துவதற்கான விருப்பத்தினைத் தெரிவித்தனர். இலங்கை மாநாட்டுப் பணியகமானது இலங்கையின் MICE திறமைகளைக் காண்பிக்கும் வகையிலான பரிச்சயச் சுற்றுலா ஒன்றினை மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கும் ஏற்பாடு செய்தது. இவ்விரண்டு அமைப்புகளும் வெளிச்செல்லும் பயண முகவர்களைக் கொண்டுள்ளதனால்,இவ் அமைப்புகளின் வாடிக்கையாளர்கள் குறித்த மாநாட்டிற்கு சமுகளிக்கும் நோக்கில் எதிர்காலத்திலும் இலங்கையை ஊக்குவிக்கக் கூடிய வாய்ப்புடன் இந்த அமைப்புகளைச் சேர்ந்த பிரதான தீர்மானம் எடுப்போரின் பல்வேறு விளைவுகளை வழங்கும் வகையில் மேற்படி மாநாட்டினை இலங்கையில் நடாத்துவதற்கான ஏற்பாட்டிற்கு வசதியளிப்பதன் மூலம் அனுகூலங்களைப் பெற முடியும். பரிச்சயச் சுற்றுலாவின் பின்னரான,CEAV – 110 வெளிச்செல்லலும் ஸ்பானிய பயண முகவர்கள் இலங்கையில் நவம்பர் 29 முதல் 30 வரையான காலத்தில் தமது மாநாட்டினை நடத்துவதற்கு திட்டமிடுகின்றனர். இது இலங்கையின் ஏனைய பிரதேசங்களை வெளிக்காண்பிக்கும் 8 நாட்களைக் கொண்ட சுற்றுப் பயணத்தின் பின்னர் இடம்பெறவுள்ளது.

எதிர்பாராத விதமாக TAFI 2018 ஆம் ஆண்டுக்கான அவர்களது வருடாந்த மாநாட்டினை இலங்கையில் நடத்துவதை காலம்தாழ்த்த வேண்டியிருந்ததோடு, அதனை 2019 இல் நடத்துதல் பற்றி சாத்தியமான முறையில் பரிசீலித்துள்ளனர்.

ஆ) நீரில் மூழ்குவதைத் தடுத்தல் பற்றிய சர்வதேச மாநாடு

இலங்கை மாநாட்டுப் பணியகமானது நீரில் மூழ்குவதைத் தடுத்தல் பற்றிய சர்வதேச மாநாட்டின் ஏற்பாட்டாளராகிய சர்வதேச உயிர் காப்புச் சம்மேளனத்திற்கானஒரு தளப் பரிசோதனைச் சுற்றுலாவினை ஏற்பாடு செய்தது. இலங்கை இதனை 2021 அல்லது 2023 இல் நடத்துவதற்கு கேள்வுமனுச் செய்கிறது. இது பற்றிய உள்நாட்டு வசதியளிப்பானது “இலங்கையின் உயிர் காப்பு” எனும் தொனியைக் கொண்டதாகும். குறித்த சுற்றுலாவானது 2018 செப்டம்பர் 24 முதல் 26 வரையான 3 நாட்களுக்கு இடம்பெற்றது. சர்வதேச உயிர் காப்புச் சம்மேளத்தின் பணியாட்டொகுதியினர் சாத்தியமான பிரதேசங்கள், தங்குமிட வசதிகள், இலங்கையின் உயிர் காப்பு நிகழ்வினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்குமாக விஜயம் செய்தனர். மேற்படி மாநாடு கிட்டத்தட்ட 800 பிரமுகர்களைக் கொண்டதாகும். இந்த நிகழ்வுக்கு கேள்வுமனுச் செய்த நாடுகளில் இலங்கை 6 வது இடத்திலுள்ளது.

5.7.2.IMEXபிரங்புருட் (ஜேர்மன்) நிகழ்வில் இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பங்கேற்பு

இலங்கை மாநாட்டுப் பணியகமானது மே 15 முதல் 17 வரை இடம்பெற்ற IMEX பிரங்புருட் 2018 நிகழ்வில் இலங்கை சுற்றுலாத் துறையின் ஐந்து முன்னோடி உறுப்பினர்களுடன் 35 சதுரப்பரப்பு உடைய பிரதேசத்தில் பங்கேற்றது. இதில் பங்கேற்ற நிறுவனங்கள்MICE கொள்வனவாளர்களுடன் 86 சந்திப்புக்களுக்கான முன்னேற்பாட்டுச் நியமனங்களை மேற்கொள்ள முடிந்தது.

மேலும், இலங்கை மாநாட்டுப் பணியகமானது துரக்கி, லிதீன் அமெரிக்கா, போர்த்துக்கீசம், ஆசியா, ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்தான ஐந்து குழுக்களுக்கு இலங்கையை ஒரு MICE சுற்றுலா இலக்கு இடமாக வெளிக்காட்டியது.இது நிகழ்வுக்கான பல்வேறு சர்வதேச முன்னணி அம்சங்களை பெற்றுக்கொண்டது. இலங்கை மாநாட்டுப் பணியகமானது பிரத்தியேக சந்திப்புக்கான 86 நியமனங்களை முன்னேற்பாடு செய்ததோடு,ICCA மற்றும் ஊடகம் உள்ளிட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள வந்திருந்த ஏனைய வருகையாளர்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டது.

இலங்கை மாநாட்டுப் பணியகமானது 2018 மார்ச் மாதம் முதற்கொண்டு 3 பதாதைப் படங்களை இணைய விளம்பரங்கள் மூலம் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. மேற்படி பதாதைகள் தொடர்பில், 156,773 பார்வையாளர்கள் பார்வையிட்டதாகவும் 65 விருப்பங்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் IMEX 2018 இன் புள்ளிவிபரவியல் அறிக்கையானது சுட்டிக்காட்டியது.

5.7.3.IBTMபீஜிங் (சீனா) நிகழ்வில் இலங்கை மாநாட்டுப் பணியகம்

மேற்படி நிகழ்வானது சீனாவின் பீஜிங் நகரில் 2018 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இடம்பெற்றது. IBTM சீனா என்பது சீனர்களின் IBTM கண்காட்சியின் ஒரு பதிப்பாக விளங்குவதோடு, ஊக்கமளித்தல், வியாபாரம், பயணம் மற்றும் சந்திப்புகள் போன்றவற்றுக்கான சிறப்பான களமாகவும் அத்துடன்,MICE (MICE-சந்திப்புகள், ஊக்கமளிப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்) பயணத் துறையைச் சேர்ந்த பங்கீடுபாட்டாளர்களை ஒன்றிணைக்கக் கூடிய ஆசியாவின் மாபெரும் நிகழ்வுகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.சர்வதேச கண்காட்சிக் கைத்தொழில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகவும் IBTMவிளங்குகிறது.

IBTM சீனா நிகழ்வுடன் தொடர்புடையதாக, இலங்கைத் தூதுவராலயமானது CITIS இன் ஒத்துழைப்புடன் ஒரு முன் விளம்பர நிகழ்வாக தூதுவராலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சமுகமளிப்பதற்காக 25 இற்கும் மேற்பட்ட துறைசார்ந்த பங்கேற்பாளர்களை ஏற்பாடு செய்தது. இலங்கையை ஒரு MICE இலக்கு நாடாக வெளிக்கொணர்வதே இதன் தலையாய இலக்காகக் காணப்பட்டது.

இலங்கை மாநாட்டுப் பணியகமானது ஒரு முன் விளம்பரமாக பதாகை ஒன்றையும் காட்சிப்படுத்தியது. இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பொது முகாமையாளர், இலங்கையை அடுத்தகட்ட MICE இலக்கு நாடாக ஏன் கருத வேண்டும் என்பது பற்றிய இலக்குச் சந்தை பற்றிய சமர்ப்பணத்தினை வழங்கினார்.

2018 செப்டம்பர் 12 ஆம் திகதி இலங்கை மாநாட்டுப் பணியகமானது இலங்கைத் தேயிலைச் சபையின் ஒத்துழைப்புடன் வருகையளித்திருந்தவர்களின் மதிய உணவு வேளையின் போது இலங்கைத் தேயிலை சுவை பார்ப்பு பற்றியதொரு அமர்வினையும் நிகழ்த்தியது.

குறித்த கண்காட்சியின் போது சந்திப்புகளுக்கான முன் நியமனங்கள் பெறப்பட்டதோடு, முன் நியமனம் பெற்ற கொள்வனவாளர்களுடனான சந்திப்புகள், ஊக்குவிப்பு அமர்வுகள் மற்றும் சுற்றுலா இலக்குகள் பற்றிய விளக்கமளிப்புகள் மற்றும் ஊடக அறிவிப்புகள் போன்றனவும் இடம்பெற்றன. இலக்குக் குழுக்களாக சீனாவை மையமாகக் கொண்ட கூட்டுத்தாபனங்கள், ஊக்குவிப்பு இல்லங்கள் மற்றும் பயண முகவர்கள் போன்றோர் விளங்கினர். இந் நிகழ்வின்

போது இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பொது முகாமையாளரினால் 5 ஊடக மற்றும் பத்திரிகை மாநாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

